# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
12 JUL 1973
MADRAS



தெய்வப்புலவர்

திருவள்ளுவர்

மாலை 11] கீலக - தை - பிப்ரவரி, 1969 [மணி 5

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு



தஞ்சைப் பெரிய கோயிலில் நிகழ்ந்த ஐப்பசிச் சதயப் பெருவிழாவில், திருப்பனந்தாள் காசி மடத்தின் தலைவர் ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுடன், நமது அறநிலைய ஆணையர், தலைமையகத் துணையாணையர், சென்னைத் துணையாணையர் முதலிய பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல்.

## பொருளடக்கம்


1. தெய்வப்புலவர் திருவள்ளுவர்
2. திருக்குறளும் சிவபிரானும்
3. திருக்குறளும் செந்தமிழ்த்தாயும்
4. திருக்குறளும் திருவாசகமும்
5. திருக்குறளும் தருக்கநூலும்
6. அபிராமி அந்தாதி
7. தொன்மைக் கோலம்
8. பாண்டிய நாட்டுத் தலங்கள்
9. திருமகள் களிநடம்
10. கயிலை மால்வரை
11. நீங்காத நினைவு
12. நீளுலகில் வாழ்வாய் நிலைத்து
13. பாலைக்குப்பின் சோலை
14. புண்ணியம் ஆம்


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/-　　　　தனி இதழ் விலை ரூ. ஒன்று

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 11] கீலக - தை - பிப்ரவரி, 1969 [மணி 5


# தெய்வப் புலவர் திருவள்ளுவர்

**முன்னுரை :**

தமிழ் நாட்டில் எத்துணையோ புலவர் பெருமக்கள் விளங்கி வந்திருக்கின்றனர். ஆயினும், அவர்களுளெல்லாம் மிகவும் தலைசிறந்தவராகப் போற்றப் பெறுபவர் திருவள்ளுவரே யாவர். அவரைத் தமிழ் கூறும் நல்லுலகம் தெய்வப் புலவர் எனப் பெரிதும் போற்றிப் புகழ்ந்து பாராட்டி வருகின்றது. அண்மையில் "திருவள்ளுவர் ஆண்டு 2000 நிறைவு விழா" தமிழகம் எங்கணும் இனிதே கொண்டாடப் பெற உள்ளது.

**தெய்வப்புலவர் :** திருக்குறளுக்குச் சிறந்த உரை வரைந்த ஆசிரியர் பரிமேலழகர், அதன் உரைப்பாயிரத்தில், "ஈண்டுத் தெய்வப் புலமைத் திருவள்ளுவராற் சிறப்புடைய ஒழுக்கமே அறம் என எடுத்துக் கொள்ளப்பட்டது" என எழுதுகின்றார்.

" சிறப்பின் ஆகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார் "

என்னும் தொல்காப்பிய நூற்பாவில் (சொல்—41), 'தெய்வப் புலவன் திருவள்ளுவன்' என்னும் தொடரை உதாரணமாகச் சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

" தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர் என்று-நிலைத்
தமிழின்
தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல்..."

என நெஞ்சுவிடு தூது என்னும் சைவ சித்தாந்த சாத்திர நூலில், உமாபதி சிவாசாரிய சுவாமிகள், திருவள்ளுவரின் தெய்வப் புலமையை வியந்து, அவர் தம் திருக்குறளையும் முழுவதாக மேற்கோளாக எடுத்தாளுகின்றார்.

**அயல் நாட்டார் பாராட்டு :** திருவள்ளுவரை எல்லா நாட்டாரும், எல்லா மொழியாரும், எல்லாச் சமயத்தினரும் பெரிதும் வியந்து மகிழ்ந்து தழீஇக் கொண்டாடுகின்றனர். திருவள்ளுவரின் சிறப்பு, இற்றை ஞான்று உலகெங்கணுமுள்ள அறிஞர்களிடையே, ஓரளவு பரவிப் பெருகி வருகின்றது. உலகப் புகழ் பெற்ற பெருஞ் சான்றோர் ஆகிய ஆல்பெர்ட் சுவைட்சர் என்னும் பேரறிஞர், "இத்துணைச் சிறந்துயர்ந்த மெய்யுணர்வு நிரம்பிய ஒரு நீதியுரைத் தொகுப்பு, உலக இலக்கியங்களில் யாண்டுமே இல்லை"(1) எனத் திருவள்ளு

(1) "There hardly exists in the literatures of the world such a collection of maxims in which we find so much lofty wisdom."

—**Dr. Albert Schweitzer,**
*The Development of Indian Thought.*

வரின் நூலைச் சிறப்பித்துப் புகழ்கின்றார். பேரறிஞர் திரு ஜி. யூ. போப் பாதிரியார் அவர்கள், "இந்திய மக்கள் எல்லோருள்ளும் தமிழ் மக்களே சிறப்பு மிக்கவராய் முன்னணியில் நிற்கின்றனர். திருக்குறளும் நாலடியாரும் அங்ஙனம் விளங்குமாறு அவர்களுக்கு உதவி புரிந்துள்ளன"(2) எனக் குறிப்பிடுகின்றார். இங்ஙனமே இன்னும், எண்ணிறந்த எத்தனையோ பலர், திருவள்ளுவரையும், அவர் இயற்றியருளிய திருக்குறளையும் பலபடப் பாராட்டி மொழிந்திருக்கின்றனர்.

திருவள்ளுவரைப் போற்றி வியவாத தமிழ்ப் புலவர்கள் எவரும் இல்லை. திருவள்ளுவரின் கருத்துக்களையும்—சொற்கள், சொற்றொடர்களையும் - எவ்வகையாலேனும் எடுத்துக் கையாளாத தமிழ்க் கவிஞர்கள் ஒருவரேனும் இலர். சங்ககாலச் சான்றோர்களும், ஆழ்வார்களும் நாயன்மார்களும், தற்காலக் கவிஞர்களும் ஆகிய அனைவருமே, திருவள்ளுவரைத் "தெய்வப் புலவர்" என மிகவும் மதித்துத் துதித்து, அவர் இயற்றியருளிய திருக்குறளைத் தத்தம் நூல்களிலும் பாடல்களிலும், முத்தும் மணியும் போல எடுத்து அமைத்துப் பதித்துக் கொண்டு, இன்புற்று மகிழ்தலைக் காண்கின்றோம்.

**முதற் குறள் :** இங்ஙனம் புலவர்கள் பலரும் போற்றித் துதித்து வியக்கும் முறையில், திருக்குறளைச் சிறப்புற இயற்றியருளி உலகுக்கு உதவிய, தெய்வப் புலவர் திருவள்ளுவர்தம் அருமை பெருமைகளை, யாம் என்னென்பேம்!

திருக்குறளின் முதற்குறள் தானே, எண்ணுவார் எண்ணுதொறும் வெளிப்படும் நுண்ணிய பல அரும் பெருங் கருத்துக்களை யெல்லாம், தன்னுள்ளே அடக்கிக் கொண்டு திகழ்ந்து, தன்னை இயற்றியருளிய திருவள்ளுவர் தெய்வப் புலவர் என்பதனைச் செவ்விதின் விளக்கிக் காட்டித் தெளிவித்து நிற்கின்றது. ஆதலின் அம்முதற் குறள் பற்றி, ஈண்டு இயன்றவரை நாம் ஒரு சிறிது ஆராய்ந்தறிவோம்.

உலகப் பெருங்கவிஞரும் தெய்வப்புலவரும் ஆகிய திருவள்ளுவர், தமது ஒப்புயர்வற்ற திருக்குறள் நூலின் முதற்கண், "கடவுள் வாழ்த்து"க் கூற முற்படுகின்றார். கடவுளை வாழ்த்துதற்குத் தலைப்படும் முன்னர், கடவுள் ஒருவர் உண்டு என உணர்த்த வேண்டுவது அவருக்கு இன்றியமையாத கடமையாகின்றது.

"கடவுள் ஒருவர் உண்டு" என்னும் உண்மையை உணர்த்த, அவர் வேறு எத்துணையோ பலப்பல வகையான சான்றுகளையும் காரணங்களையும் எடுத்துக்காட்டியிருக்கலாம். தமிழ் மொழியிற் பெரும் புலவராய் - சான்றோராய் - கவிஞராய்த் திகழ்ந்து, தமிழ் மொழியிற் பாவலராகவும், தமிழ்ப் பண்பாட்டின் காவலராகவும் விளங்கித் தமிழ் மயமாகவே வாழ்ந்திருந்த திருவள்ளுவர், தமிழெழுத்துக்களின் அமைப்பும், தமிழிலக்கணத்தின் நுட்பமும் கொண்டே, கடவுளுண்மையினை நிறுவிக் கட்டுரைக்கின்றார்.

ஆசிரியர் தொல்காப்பியர், தாம் இயற்றியருளிய தொல்காப்பியம் என்னும் பழம் பெருந் தமிழிலக்கண நூலில், "மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்" எனப் பணித்தருளிய நுட்பம் உணர்ந்து,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்னும் திருக்குறளில், இறையுண்மை நிறுவுதற்குத் தமிழிலக்கண அமைப்பினைத் தழுவி, ஆசிரியர் திருவள்ளுவர் அகரத்தினை உவமைகாட்டியுள்ள அருமைப்பாடு, பெரிதும் போற்றி மகிழ்தற்குரியது!

**சமயச் சான்றோர்கள் :** திருவள்ளுவர் எடுத்துக்காட்டியருளிய அகரவுவமையின் சிறப்பினை, அவர்க்குப்பின்னர்த் தோன்றிய சமயச் சான்றோர்கள் பலரும் வியந்து

(2) "The Tamils are the foremost among the peoples of India. The Kural and the Naladi have helped to make them so."

—**The Rev. Dr. G. U. Pope,**
*Preface to Naladiar.*

மகிழ்ந்து, தத்தம் நூல்களில் தழுவிக் கொண்டுள்ளனர்.

(1) "அகர முதலானை அணி ஆப்பனூ ரானைப் பகரும் மனம் உடையார் வினைப் பற்றறுப்பாரே" என ஞான சம்பந்தர் நவிலுகின்றார்.

(2) "ஆனத்தின்முதல் எழுத்து ஆகி நின்றாய்" என்று திருநாவுக்கரசர் பாடுகின்றார்.

(3) "அகரம் முதலின் எழுத்தாகி நின்றாய் அடியேன் உய்யப் போவதோர் சூழல் சொல்லே" எனச் சுந்தரர் துதிக்கின்றார்.

(4) "அக்கரங்கள் இன்றும் அகரவுயிர் இன்றேல்" என்று மெய்கண்டார் சிவஞான போதத்தில் குறிப்பிடுகின்றார்.

(5) ஆசிரியர் அருள்நந்தி சிவாசாரியர் "அக்கரங்கள் தோறும் சென்றிடும் அகரம் போல நின்றனன் சிவனும் சேர்ந்தே" எனவும் (சுபக்கம் : 72),

"இவ்வுயிர்கள் தோற்றும்போ
தவனையின்றித் தோற்றா;
இவற்றினுக்கம் முதலெழுத்துக்கு
எல்லாமாய் நிற்கும்
அவ்வுயிர்போல் நின்றிடுவன்"

எனவும் (சுபக்கம் : 316), திருவள்ளுவர் கூறிய அகரவுவமையினைத் தமது சிவ ஞான சித்தியார் செய்யுட்களில் எடுத்தாண்டுள்ளார்.

(6) இவ்வாறே சைவசித்தாந்த சந்தானாசிரியர்களுள் ஒருவராகிய உமாபதிசிவம், தாம் இயற்றிய **திருவருட்பயன்** என்னும் நூலில் "அகரவுயிர்போல் அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து" என, இத் திருக்குறளையே தழுவி இனிதெடுத் துரைத்துப் போற்றியிருக்கின்றார்.

**அகர உவமையும்,**

**அதன் நுண்பொருள்களும் :** இங்ஙனம் வாழையடி வாழையாகப் பிற்போந்த சான்றோர்கள் அனைவருமே போற்றித் தழுவி மகிழும் வண்ணம், இறையுண்மையை நிறுவுவதற்குத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெருமான் காட்டியருளிய அகர வுவமையானது, சிந்திப்பரியதாய்ச் சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவதாய்த் தொட்டனைத் தூறும் மணற்கேணி போல, நுட்பக் கருத்துக்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு ஒளிர்கின்றது.

(1) ஆதி அகரம் விகாரத்தான் அன்றி நாதமாத்திரையான் இயல்பாக வெளிப்பட்டு நிற்கின்றது; அதுபோலவே இறைவனும் இயல்பாகத் திரிபின்றி இயற்கை வடிவினனாக அமைந்து விளங்குகின்றான்.

(2) அகரம் அங்காப்பு மாத்திரையால் திரிபின்றி வெளிப்பட்டு, வேறு பிற ஒலிகளின் தோற்றங்களுக்கெல்லாம் முதன்மையாய் நிற்கின்றது; அது போலத் திரிபின்றி இயல்பாக விளங்கும் இறைவனும், முத்தொழில்களுற்றுத் திரிபுறும் உயிர் உலகுகளின் இயக்கங்களுக்கு முதல்வனாகத் திகழ்கின்றான்.

(3) அகரமே உயிர் எழுத்துக்களிலும் மெய்யெழுத்துக்களிலும் கலந்து நின்று அவற்றை ஒலிப்பிக்கின்றது; அது போலவே இறைவனும் அறிவற்ற உலகப் பொருள்களிலும், அறிவுடைய உயிர்களினுள்ளும் ஒன்றிக் கலந்து நின்று அவற்றை இயங்குமாறு செய்கின்றான்.

"இறைவன் இயங்குதிணைக் கண்ணும், நிலைத்திணைக் கண்ணும், பிறவற்றின் கண்ணும், அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்பமுடிந்தாற்போல; அகரமும் உயிர்க்கண்ணும் தனிமெய்க் கண்ணும் கலந்து, அவற்றின் தன்மையாகவே நிற்கும் என்பது ஒப்ப முடிந்தது. 'அகர முதல' என்னும் குறளான், 'அகரமாகிய முதலையுடையன எழுத்துக்க ளெல்லாம், அதுபோல இறைவனாகிய முதலையுடையது உலகம்' என வள்ளுவனார் உவமை கூறிய வாற்றானும், கண்ணன் 'எழுத்துக்களில் அகரம் ஆகின்றேன் யானே' எனக் கூறியவாற்றானும் பிறநூல்களானும் உணர்க"

—நச்சினார்க்கினியர்,

தொல், எழுத்து, மொழிமரபு—13.

(4) எழுத்துக்கள் மெய்யெழுத்து உயிரெழுத்து என இருவகையாய், அகர முதலவாதல் போலப் பிரபஞ்சமும் சேதனம்

அசேதனம் என இருவகையாய், ஆதி பகவன் ஆகிய முதலையுடையது. உயி ரெழுத்து சீவான்மாக்களுக்கும், மெய் யெழுத்து தத்துவப் பிரபஞ்சத்திற்கும், அகரம் ஆதிபகவற்கும் உவமையாக அமைந்து வந்தமை ஆராய்ந்து மகிழத் தக்கது.

(5) அகரம் மெய்களிலும் உயிர் களிலும் ஒன்றிக் கலந்து நிற்பினும், அம் மெய் உயிர்களின் வேருகத் தனித்தும் நிற்கின்றது; அதுபோல இறைவனும் உலகோடும் உயிர்களோடும் கலந்து ஒன்றி நிற்கின்ருன் எனினும், அவற்றின் வேருகத் தனித்தும் விளங்குகின்ருன்.

(6) அகரம் உயிர்களோடும் மெய் களோடும் ஒன்ருய் வேருய் உடனுய்க் கலந்து நிற்பினும், ஒலியியல் நுட்பம் உணர்ந்த அறிஞர்களுக்கன்றிப் பருப் பொருள் அறிவினர்க்கு அவ்வியல்பு விளங்குவதில்லை; அதுபோலவே இறை வனும் உலகுயிர்களோடு கலப்பினுல் 'உடலின் உயிர்போல்' ஒன்ருகியும், பொருட்டன்மையாற் 'கண்ணின் அருக்கன் போல்' வேருகியும், உயிர்க்குயிராதற் றன்மையாற் 'கண்ணொளியின் ஆன்ம பேதம் போல்' உடனுகியும் நின்று அருள் செய்து போதருகின்ருன் ஆயினும், மெய்யுணர்வு பெற்ற மேலோர்கட்கன்றி அவனது அவ்வருளியல்பு விளங்கு வதில்லை.

(7) அங்காந்த அளவில் தோன்றும் அகரமும், அதன் இயைபாற் பிறந்தொலிக் கும் ஏனைய மெய்யுயிர் எழுத்துக்களும் ஒருவனுல் ஒலிக்கப்பட்டுத் தோன்றுதலின், தோற்றமும் ஈறும் உடையனவாகக் கருதப்படும் எனினும், முக்காலத்து மக்களால் எக்காலத்தும் ஒலிக்கப்படு தலின், அவை என்றும் உளவாய் நின் றிலங்கும் அழிவில் பொருள்களேயாம். அதுபோல இறைவனும் இறைவனுல் இயக்கப்பெறும் உலகுயிர்களும் முத் தொழில் நிகழ்ச்சிகளைப் பெற்றிருப்பினும், என்றும் உளவாம் அழிவில் பொருள்களே யாகும். "பதியினைப் போற் பசு பாசம் அனுதி" என்பது திருமூலர் திருமந்திரம்.

(8) அகரம் தமிழ் எழுத்துக்களுக்கு மட்டுமே யன்றி, வேறு பல மொழிகளின் எழுத்துக்களுக்கும் பொதுவாகவும் முதலாகவும் திகழ்கின்றது; அதுபோலவே இறைவனும் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகவும் முதலாகவும் விளங்கு கின்ருன். "ஒருவனுமே பலவாகி நின்றவா தோள் நோக்கம் ஆடாமோ" என்பர் மணிவாசகர். "இராமேச்சுரத்து ஒரு வனுமே பலவாகி நின்றதொருவண்ணமே" என்பது திருஞானசம்பந்தர் தேவாரம்.

(9) அகர ஒலி ஒன்றே, வெவ்வேறு மொழியாளர்களாற் பல்வேறு வடிவினதாக எழுதப்படுகின்றது; அதுபோல இறைவன் ஒருவனே, பல்வேறு சமயத்தினரால் வெவ் வேறு வடிவினனுகவும் பெயரினனுகவும் வைத்து வழிபடப் படுகின்ருன். "ஒரு நாமம் ஓருருவம் ஒன்று மிலாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்பது திருவாசகம்.

(10) பேச்சளவில் மட்டுமுள்ள திருந்தா மொழிகளில், எழுத்துக்கள் இல்லையாயி னும், திருந்திய இலக்கியச் செம்மொழி களில், எழுத்தின் ஒலிவகைகளைக் காட்ட வரிவடிவங்கள் இன்றியமையாதன என்று நன்குணர்ந்து, எழுத்து வடிவங்கள் படைக் கப்பட்டுள்ளன; அதுபோல இறை வழி பாட்டிற்குத் திருவுருவங்கள் வேண்டா எனக் கூறுபவர் ஒருசிலர் உள்ளன ரெனினும், ஒலிவகைகளைக் காட்டுதற்கு எழுத்தமைப்புக்கள் வேண்டப்படுதல் போல, இறைவழிபாட்டிற்கும் திருவுருவ அமைப்புக்கள் வேண்டப்படும் என்பது பழந்தமிழ் மக்களின் சிறந்த கொள்கை.

" கட்புலன் இல்லாக் கடவுளைக் காட்டும்
சட்டகம் போலச் செவிப்புல ஒலியை
உட்கொளற்கு இடும்உருபு ஆம்வடி
வெழுத்தே "

என்பது, இலக்கண நூல்களில் எடுத்துக் காட்டப் பெறும் மேற்கோள். ஒலியை யுணர்தற்கு எழுத்துக்கள் உதவுமாறு போல, இறைவழிபாட்டிற்குத் திருவுரு வங்கள் உதவி புரியும் என்பது கருத்து.

" உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம்
உண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு "

" உள்ளுதொறும் உள்ளுதொறும்
உள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு "

**முடிவுரை :** இங்ஙனம் அறிஞராய்க் கருதியுணர வல்லார் கருதி யுணர்ந்து மகிழத்தகும் சிறந்த கருத்துக்கள் பலப் பலவும் இவ் அகர உவமையின்கண் செவ்விதின் அமைந்துள்ளமை அறிந்து மகிழ்தற்குரியது.

" எல்லையற்ற பல பொருள் நுட்பக் குறிப்புக்களை யுணர்த்திக் கொண்டு செல்ல வல்ல தன்மை யதாதலே, சிறந்த கவிதை எனத் தெளியப்படுதற் குரிய சீரிய சான்றாகும். சிறந்த நல்ல கவிதைச் செய்யுள் எதுவாயினும், அதனைச் சுற்றி அளவிடற் கரியதொரு பொருட் குறிப்புச் சூழ்நிலை மிதந்து கொண்டிருக்கும். கவிஞன், கருதியதும் கூறியதும் ஒரு கருத்தே யாயினும், அக் கருத்தே மிக விரிந்து பரந்து, அவன் கருதாத வேறு பல இயைபுடைய கருத்துக்களையும் தன்கண் பொலியத் தோற்று வித்துக்கொண்டு திகழும்"(3 )எனப் பேராசிரியர் ஏ. சி. பிராட்லி என்பவர் கூறுவர்.

அதற்கு ஏற்ப, இங்ஙனம் பலவகை விரிந்த பொருள் நுட்பக் குறிப்புக்கள் புலனாகும் வண்ணம் 'அகர முதல எழுத்தெல்லாம்' என்னும் அழகிய தொடரை அருளிச் செய்திருப்பதொன்றே, ஆசிரியர் திருவள்ளுவர் தெய்வப்புலவர் தான் என்பதனை, நன்கினிது விளக்கும்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிச் செய்த திருக்குறள் நூலை, நாம் ஆராய்ந்து கற்கவும், கற்று அதன் படி வாழ்க்கையில் நிற்கவும், இயன்றவரை முயன்று சிறப்புறு வோமாக!

திகழும் திருவள் ளுவனார் தாம்
சிறந்த தெய்வப் புலவர்எனல்,
பகவன் உண்மை நிறுவுதற்குப்
பண்பின் ஆராய்ந் தவர்சொற்ற
அகர உவமை தான் ஒன்றே,
அறியத் தெருட்டும்! அச்சான்றோர்
தகவின் அளித்த திருக்குறள்நூல்,
தக்காங்கு ஓதி நாம்உய்வோம்.

—ஆசிரியர்.

---

(3) " The proof of the purest poetry is that its meaning is **inexhaustible**. About the best poetry, and not only the best, there floats an atmosphere of **infinite suggestion**. The poet speaks to us of one thing, but in this one thing there seems to lurk the secret of all. He said what he meant, but his meaning seems to beckon away beyond itself, or rather to expand into something **boundless** which is only focussed in it."

—**Prof. A. C. Bradley**,
*Oxford Lectures on Poetry.*

---

## திருக்குறளின் சிறப்பு

எல்லாப் பொருளும் இதன்பால் உள; இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்;—சொல்லாற்
பரந்தபா வால்என் பயன்? வள்ளுவனார்
சுரந்தபா வையத் துணை.

—மதுரைத் தமிழ் நாகனார்.

ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்,—போய்ஒருத்தர்
வாய்க்கேட்க நூல்உளவோ? மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

—நத்தத்தனார்.

# திருக்குறளும் சிவபிரானும்

**முன்னுரை :**

திருக்குறள், தமிழிலக்கியங்களுள் தலை சிறந்தது. அதன் சிறப்பு அளப்பரியது. திருக்குறளின் சிறப்பினைப் பற்பல புலவர்கள் பற்பல வகைகளிற் பெரிதும் புகழ்ந்துரைத்துள்ளனர். திருக்குறளுக்கும், சிவபிரானுக்கும் மிக நெருங்கிய இயைபு உண்டு. திருக்குறளை நினைத்தால் சிவபிரானையும், சிவபிரானை நினைத்தால் திருக்குறளையும் இயைத்தே நினைவு கூரும் வகையில், பற்பல ஒப்புமைப் பண்புகள் காணப்படுகின்றன.

**சிவபிரான் :** சிவபிரான் தனக்கு உவமையில்லாதவர்; திருக்குறளும் தனக்கு உவமையில்லாத தனிப் பெரும் சிறப்பு உடையது. அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாயும், வேறாயும் விளங்குபவர் சிவபெருமான்; அவ்வாறே திருக்குறளும் அருவகைச் சமயக் கொள்கைகளைக் கூறுவதாயும், அவற்றிற்கு அப்பாற்பட்டதாயும் விளங்குகின்றது. சிவபெருமான் நூல்களின் எல்லையை எல்லாம் கடந்தவர்; அவ்வாறே திருக்குறளும் எல்லா நூல்களிலும் மேம்பாடு மிக்கது. சிவபிரான் உயிர்களின் அறிவினில் அருளால் மன்னி நலம் செய்பவர்; திருக்குறளும் நம்மனோர் அறிவினில் அருளால் மன்னி நலம் செய்வது. உயிர்களுக்கெல்லாம் அம்மையும் அப்பனுமாக விளங்கி அருள் புரிபவர் சிவபெருமான்; அங்ஙனமே திருக்குறளும் ஒரு வகையில் நம்மனோர்க்கு அம்மையாயும் அப்பனுயும் திகழ்கின்றது. எல்லாப் பொருள்களிலும் கலந்து செறிந்து நிற்பவன் சிவபெருமான்; அங்ஙனமே எல்லாப் பொருள்களும் நிறைந்து செறிந்து திகழ்கின்றது திருக்குறள்! முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனுய்ச் சிவபெருமான் திகழ்தல் போலவே, திருக்குறளும் திகழுகின்றது. நவில்தொறும் நயம் பயக்கும் பண்பு, திருக்குறளுக்குப் போலவே, சிவபெருமானுக்கும் உண்டு.

> அறுவகைச் சமயத் தோர்க்கும்
> அவ்வவர் பொருளாய், வேறும்
> குறியது உடைத்தாய், வேதா
> கமங்களின் குறி இறந்து, அங்கு
> அறிவினில் அருளால் மன்னி,
> அம்மையோடு அப்பன் ஆகிச்,
> செறிவொழி யாது நின்ற
> திருக்குறள் சென்னி சேர்ப்பாம்!

**சிவப்பிரகாசர் :** திருவள்ளுவரையும் திருக்குறளையும் எத்தனையோ புலவர்கள், எத்தனையோ பல வகைகளில் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். ஆயினும், அவற்றுளெல்லாம், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் புகழ்ந்து பாடியிருக்கும் முறை, பெரிதும் வியந்து மகிழத்தக்கதாகத் திகழ்கின்றது.

திருக்குறளின் சிறப்பை விளக்க அவர் ஓர் உவமை கூற நினைக்கின்றார். திருக்குறளோ ஒப்புயர்வு இல்லாததாய்த் தனிப் பெரும் சிறப்புடையதாக விளங்குகின்றது. அதனால் திருக்குறளின் சிறப்பை விளக்க ஓர் உவமையைக் கூட எடுத்துக் காட்ட அவரால் இயலவில்லை. அவர் நீள

நினைந்து ஆராய்ந்து பார்க்கின்றார். தனக்கு உவமையில்லாத திருக்குறளுக்குத் 'தனக்குவமை இல்லாதான்' ஆகிய இறைவனையேதான் உவமை கூறிவிடலாமே என, அவர் முடிவாக ஒரு வகை முடிவுக்கு வருகின்றார்.

வீர சைவராகிய தாம், சிவபிரானை எத்தகைய நிலையில் மதித்து வணங்கிப் போற்றுவாரோ, அத்தகைய நிலையிலேயே வைத்துத் திருக்குறளையும் அவர் போற்றிப் புகழ முற்படுகின்றார். திருக்குறளைச் சிவம் எனவே சிந்தித்து வந்திக்கின்றார் அவர்! திருக்குறளின் இரண்டு அடிகளையும் சிவபிரானின் இரண்டு திருவடிகள் எனவே கருதி அவர் மகிழ்கின்றார். திருக்குறளின் அடிகளுக்கும், சிவபிரானின் அடிகளுக்கும் இடையே உள்ள ஒப்புமைத் தன்மை, இரண்டு என்ற எண்ணிக்கையில் மட்டுமே அமைந்திருப்பதாக அவர் கருதிற்றிலர். மற்றும் ஓர் அழகிய பொருத்தமும் அமைந்திருப்பதாக அவருக்குப் புலப்படுகின்றது.

**மாதியலும் பாதியர்:** திருக்குறளின் முதல் வரியானது நான்கு சீர்களால் இயன்று சிறிது நீண்டும், இரண்டாம் வரியானது மூன்று சீர்களால் அமைந்து சிறிது குறுகியும் இருத்தலை நாம் அறிவோம். இவ்வியல்பு சிவபிரானின் திருவடிகளிலும் இனிது பொருந்தி யிருத்தலை, அவர் எண்ணி எண்ணி மகிழ்கின்றார். சிவபெருமான் ஆணும் பெண்ணும் ஆக, அம்மையும் அப்பனுமாக அர்த்தநாரீசுவர மூர்த்தி யுருவம் கொண்டு விளங்குபவன். மாணிக்கவாசகர் "தொன்மைக் கோலம்" என, அர்த்த நாரீசுவரர் (மாதியலும் பாதியர்) திருவுருவத்தைப் புகழ்ந்து போற்றுகின்றார். அத்திருவுருவத்தில் ஆண்பாற் பகுதிக்குரிய வலக்கால் சிறிது நீண்டும், பெண்பாற் பகுதிக்குரிய இடக்கால் சிறிது குறுகியும் இருக்கும்.

**திருவெங்கைக் கலம்பகம்:** சிவபெருமானின் இரு திருவடிகளுக்கும் உரிய இவ்வியல்பு, திருக்குறளின் இருவரிகளுக்கும் கூட, இனிது பொருந்தி அமைந்திருப்பதனை நினைந்து நினைந்து சிவப்பிரகாசர் மகிழ்ந்து இன்புறுகின்றார். இங்ஙனம் திருக்குறளின் பெருமையினைப் பொருத்தமுற உணர்ந்து வியக்கும் சிவப்பிரகாச சுவாமிகள், திருவள்ளுவரையே தம்முடைய குருவாகவும், தெய்வமாகவும் மதித்துத் துதித்துத் தொழுகின்றார்.

"என் அடிகள்
வெண்குறள் நேர்
அடியிரண்டும்
என் தலைமேல்
இருத்தும் இறை
வெங்கைநாட்டில்..."

எனவரும் திருவெங்கைக் கலம்பகச் செய்யுட் பகுதியில் திருவள்ளுவரை **'என் அடிகள்'** (என்னுடைய தெய்வம், ஞானாசிரியர்) என்றும்; அவர் இயற்றிய திருக்குறளை **'வெண்குறள்'** என்றும்; இறைவன் ஆகிய சிவபெருமானின் திருவடிகளை **'வெண்குறள் நேர்** (திருக்குறளின் இரண்டு வரிகளைப் போன்ற) **அடி இரண்டு'** என்றும், துறைமங்கலம் சிவப்பிரகாசர் சுருக்கமாகவும் நுணுக்கமாகவும் குறிப்பிட்டிருத்தல், அறிந்து இன்புறற்பாலது.

## முடிவுரை:

திருக்குறளுக்கும் சிவபிரானுக்கும் உள்ள தொடர்பினை விளக்குதற்கு, இதனினும் சிறந்த சுவைமிக்கதொரு நற்குறிப்பும் உண்டோ! இங்ஙனம் சிவபிரானோடு ஒப்புமையுடைய, ஒப்புயர்வற்ற திருக்குறளை, நாம் அனைவரும் நன்கினிது கற்றுணர்ந்து ஒழுகி, நலம் பலவும் எய்துவோமாக!

—ஆசிரியர்.

# திருக்குறளும் செந்தமிழ்த் தாயும்

**முன்னுரை :**

திருக்குறள், நம் தமிழ் மொழியிலுள்ள சிறந்த இலக்கியங்களுளெல்லாம் தலை சிறந்தது; ஒப்புயர்வற்றது. "திருக்குறள் ஓர் இலக்கியக் கருவூலம், கவிதைக் குரல் என்பதில் ஐயமே இல்லை. கிரேக்கர்களுக்கு ஹோமரின் காவியம் எத்தகையதோ, அவ்வாறு சொற் சிறப்பும் நீதிச் சிறப்பும் அமையச் சிறந்த முறையில் திருக்குறள் அமைந்துள்ளது" என்று சார்லஸ் இ. கவர் (Charles E. Gover) என்பவரும், "திருக்குறள் தமிழ் இலக்கியத்தின் சிறந்த படைப்பு. மனித சிந்தனையின் சிறந்துயர்ந்த தூய இனிய வெளியீடு" என்று எம். ஏரியல் (M. Ariel) என்பவரும், "திருக்குறள் கவிதைச் சுவையும் இலக்கிய இன்பமும் நிறைந்தது. அதன் உள்ளங்கவர் பண்பு ஒப்புயர்வில்லது" என்று பேரறிஞர் கிரவுல் (Dr. Graul) என்பவரும், திருக்குறளின் சிறப்பினை மிகவும் வியந்து போற்றியுள்ளனர்.

திருக்குறளின் சிறப்பை இங்ஙனம் பல வகைகளில், அறிஞர்கள் பலரும் பாராட்டியுள்ளனர். திருக்குறள் தமிழிலக்கியங்களுள் பெற்று விளங்கும் சிறப்பிடத்தினைப் பின்வரும் கருத்தமையக் கவிஞர் ஒருவர், அழகிய கற்பனைத் திறம் அமையப் பாடியுள்ளார்.

**உயர்தனிச் செம்மொழி :** உலக மொழிகளுள் தமிழ் மொழியானது தொன்மையும் பெருமையும் மிக்க தூய இனிய உயர் தனிச் செம்மொழி (Classical Language) ஆகலின், அதனை உலக மொழிகளுக்கெல்லாம் தலைமையும் பெருமையும் சான்றது எனக் குறிப்பிட விரும்பி, நம்முடைய தமிழ் மொழித் தாயை ஒரு பேரரசியாக உருவகம்செய்கின்றார், அந்தக்கவிஞர். அரசியெனின், அரசியர்க்குரிய அணிகலன்களும்பிறவும், தமிழ்த்தாயும்அணிந்துதிகழ்வதாகஅமைவுற ஆய்ந்துகூறுதல்வேண்டும். அது கருதி, அவர் தமிழிலுள்ள பெருங் காப்பிய நூல்களையெல்லாம், தமிழ்த்தாய் ஆகிய பேரரசியின் சீரிய அணிகலன்களாகச் சிறப்புறக் குறிப்பிடுகின்றார்!

**மொழியரசி :** தமிழ்த்தாய் ஆகிய பேரரசி, குண்டலகேசி எனும் காப்பியத்தினைக் காதிற் குண்டலமாகத் தரித்திருக்கின்றாள்; வளையாபதி என்னும் காப்பியம் தமிழ்த் தாயின் கைகளுக்கு வளையல்களாக மிளிர்கின்றது; அவளுடைய கருணை நிறைந்த மார்பில், ஒரு மணிமுத்தாரம் போலச் சிந்தாமணி என்னும் செந்தமிழ்க் காப்பியம் நந்தா ஒளி பரப்புகின்றது; அவள் தன் மெல்லிய இடையில் மணிமேகலை என்னும் மாண்புயர் காப்பியம் அணி செய்து விளங்குகின்றது; அவளுடைய தாமரை போன்ற திருவடிகளில், 'நெஞ்சையள்ளும் செஞ்சொற் சிலப்பதிகாரம்' சிலம்புகள்போல மெல்லென ஒலித்து மிழற்றுகின்றது.

**திருக்குறட் செங்கோல் :** தமிழ்த்தாய் மொழிகளின் பேரரசியாதலின், தன்னுடைய அரசியல்பு புலனாகும்வண்ணம், அவள் முடிசூடி இருத்தல் வேண்டும். ஆதலின் அவள் தோலாமொழித் தேவர் இயற்றிய சூளாமணி என்னும் காப்பியத்தினைப் பொன்முடியாகச் சூடிப் பொலிந்து விளங்குகின்றாள். அரசர் அரசியர் நடாத்தும் நீதியும் நேர்மையும் மிக்க ஆட்சிமுறையின் அருமைப்பாட்டினைத் திறம்படக்

குறிக்கும் அடையாளமாகத் திகழ்வது செங்கோல்! ஆதலின், தமிழ்த்தாய் ஆகிய பேரரசி, இங்நில உலகிலேயே நீதி நூல் களுள் தலைசிறந்த நூல் ஆகிய திருக் குறள் என்னும் தெய்வத் திரு நூலினைத் தன்னுடைய செங்கோலாகத் தாங்கி அரியணை வீற்றிருக்கின்றாள்!


"காதொளிரும் குண்டலமும், கைக்குவளை
யாபதியும், கருணை மார்பின்
மீதொளிர்சிந் தாமணியும், மெல்லிடையில்
மேகலையும், சிலம்பார் இன்பப்
போதொளிர்பூந் தாளிணையும், பொன்முடி
சூளாமணியும், பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்
தாங்குதமிழ் நீடு வாழ்க"

—சுத்தானந்த பாரதியார்

**முடிவுரை :**

இவ்வரிய இனிய பாடலின்கண் நீதி நூல்களுள் தலை சிறந்த திருக்குறள், நீதி ஒளிரும் செங்கோலாக உருவகம் செய்யப் பெற்றிருப்பது, எத்துணைப் பொருத்தமும் சிறப்பும் மிக்கது என்பது, சொல்லாமலே விளங்கும்! திருக்குறளின் சிறப்பினைச் செவ்விதின் விளக்குதற்கு இப்பாடல் ஒன்றே சாலும் அன்றோ! திருக்குறளைச் செங்கோலாகக் கொண்டுள்ள செந்தமிழ்த் தாய், நீடினிது வாழ்க!

—ஆசிரியர்



பொன்னேரி வட்டம் சிறுவரம்பேடு ஸ்ரீபாலசுப்பிரமணியர் கோயில் திருப்பணித் தொடக்கவிழாவில் கலந்துகொண்ட பெருமக்கள்.

# திருக்குறளும் திருவாசகமும்

**முன்னுரை :**

தமிழ் மொழியின்கண் உள்ள அரிய பெரிய நூல்களுளெல்லாம், இன்று பொது மக்களிடையே மிகவும் புகழ் வாய்ந்து சிறந்துயர்ந்த நூலாகச் செல்வாக்குப் பெற்று, யாவரானும் மதித்துப் போற்றப் படும் நிலையில் வீறுற்று விளங்கும் தலை சிறந்த நூல், திருக்குறள் ஒன்றேயாகும். திருக்குறளைப் பயிலாதாரும், பயிலுதலில் கருத்தில்லாதாருங் கூட, இஞ்ஞான்று அதனை மிக மதித்து உடன்பட்டுப் போற்ற வேண்டிய நிலையில் இருக்கின்றனர். ஏனைய நூல்களுக்கு வாயாத இத்தகைய தொரு பெருஞ் சிறப்பு, திருக்குறளுக்கு மட்டுமே வாய்த்தமை, அதன் சிறப்பினை நன்கினிது விளக்குவதாகும்.

எனினும் திருக்குறளைப் போலவே, பொதுவாக யாவரானும் போற்றப்படத் தகுந்த வேறு பலப்பல சிறந்த நூல்களும் தமிழ்மொழியின் கண் உள்ளன. அவை களைத் திருக்குறளினும் சிறந்த நூல்கள் எனக் கொள்ளா தொழியினும், திருக் குறளோடு ஒத்த சிறப்புடையன என்றே னும் கொள்ளுதற்கண் இழுக்கேதும் இல்லை. அத்தகைய சிறந்த நூல்கள் பல வற்றுள் தலை சிறந்ததாக, ஈண்டுக் குறிப் பிடத் தகுந்தது திருவாசகம் ஆகும்.

**திருக்குறள் :** திருக்குறளைச் சிறந்த நூல் என எவ்வெக் காரணங்களுக்காக நாம் போற்றுகின்றேமோ, அக்காரணங் களுக்காகவே திருவாசகத்தையும் நாம் அங்ஙனம் போற்றக் கடமைப்பட்டிருக் கின்றேம். நாடு மொழி இனம் பிறப்பு நிறம் கொள்கை பழக்க வழக்க ஒழுக்கங் கள் முதலிய பலவற்றுலும், ஒருவரை ஒருவர் ஒவ்வாது வேறுபட்டுக் கிடக்கும் உலக மக்கள் அனைவரும், ஒரு முகமாக உவந்தேற்றுக் கொள்ளத் தக்கவாறு, உலகியல் வாழ்க்கைக்குப் பெரிதும் இன்றி யமையாத அறம் பொருள் இன்பங்களின் அடிப்படை உண்மைகளைப் பற்றிய பொதுமை முதன்மைக் கருத்துக்களை விளக்கிக் கூறிச் செல்லும் திறனில், திருக்குறள் சிறந்து விளங்குகின்றது.

**திருவாசகம் :** அதுபோலவே இவ்வுல கியலையும், இவ்வுலகியலின் பல்வேறு வியத்தகு நிகழ்ச்சிகளையும், இவ்வுலகிய லின்கண் ‘வேறு வேறு உருவும் வேறு வேறு இயற்கையும்’ வாய்ந்து, ‘நூறு நூறுயிரம் இயல்பின வாகி’ வாழ்ந்து வரும் உயிர்த் தொகுதிகளையும், இன்னே ரன்ன பிறவற்றையும் கூர்ந்து நோக்கி ஆராய்ந்து, “நானார்? என் உள்ளமார்? ஞானங்களார்? என்னை யார் அறிவார்?” என்றுற் போலத் தம்மைத்தாமே உசாவிக் கொள்பவராய், மெய்ப்பொருள் ஆராய்ச்சி யிலும் உய்திநெறி காணும் முயற்சி யிலும் தலைப்பட்டு, உலகெங்கணும் பல பகுதிகளில் இருந்து உயிர் வாழ்ந்துவரும் தக்கோர்களுக்கெல்லாம், யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடைய இறை வனின் பெருமையினையும் அருளிச் செயல் களையும், அவ்விறைவனது அருள் பெற் றுர் அடையும் அளவிலா நலங்களையும், அதனை அடையும்பேறு தலைப்படாதார் தட்டுளுப்புப் பட்டுத் தடுமாறி அலையும் நிலைகளையும், அவ்வருட் பேறு கூடினுர் தம் அருளின்ப நுகர்வுணர்ச்சிகளையும், இகலெதுவும் நிகழ்தற்கு இடனின்றிப் பொதுமை நலம் பொதுளத் தெள்ளத்

தெளிய அழகிய இனிய அருங் கவிதைகளால் மிழற்றி விளக்கி மகிழ்விக்கும் திறனில், உலகினர் அனைவரும் மதித்து மகிழ்ந்து போற்றத் தகுவதாய், ஈடும் எடுப்பும் இன்றிச் சிறந்து ஓங்கித் திகழ்கின்றது திருவாசகம்.

இவ்வாற்ருல் உலகம் முழுமைக்கும் ஒப்ப உரிய பொதுமை முதன்மை நலத்தில், திருக்குறளைப் போலவே ஒரு படித்தாக ஒளிர்வது, திருவாசகத்தின் பல பெருஞ் சிறப்புகளுள் ஒன்ருகும் என்பது திண்ணம்.

**திருக்குறளும் திருவாசகமும் :** திருக்குறள் "உலகியல் கூறிப் பொருளிது" என்று விளக்குகின்றது; திருவாசகம் அருளியல் கூறிப் பொருளிது என்று தெளிவிக்கின்றது. திருக்குறள் "நவில்தொறும் நூல்நயம்" பயக்கின்றது; திருவாசகமும் அங்ஙனமே. திருக்குறள் தலை சிறந்ததொரு நீதி நூல்; திருவாசகமும் தலைசிறந்ததொரு இனிய கவிதை நூல்!

திருக்குறள் ஒப்புயர்வற்ற **அறிவு** நூல்; திருவாசகம் ஒப்புயர்வற்ற **அன்பு** நூல். திருக்குறள் "தவத்தால் மனந் தூயரான" சான்ருேர் வகுத்த நூல்; திருவாசகம் "அறிவாற் சிவமேயாய" சான்ருேர் அருளிய நூல். திருக்குறள் செந்தமிழ்ப் பயனுடைய பெரு நூல்; திருவாசகம் செந்தமிழ்ப் பயனும் சிவநெறித் திரு நூல். திருக்குறளும் திருவாசகமும் தொன்று தொட்டுப் பழம் பெருஞ் சான்ருேர்கள் பலரும் போற்றி வருவனவாகும். இம்மைக்கும் மறுமைக்கும் நம்மனோர்க்குப் பெரு நலம் விளைவித்தலில், இவ்விரு நூற்களும் இணையற்றவை. இவ்விரண்டும் தமிழகப் பண்பாட்டின் மேன்மையினைப் புலப்படுத்தும் கலங்கரை விளக்கங்கள் போன்ற பெரு நலங்கெழுமிய நூல்கள் எனலாம்.

**திருவாசகத்தில் திருக்குறள் :** திருக்குறளையும் திருவாசகத்தையும் பல்கால் பயின்ருேதிக் காண்போமாயின், அவ்விரண்டற்கும் உள்ள தொடர்பினை நாம் செவ்விதின் உணரலாம். திருக்குறளைப் போற்றி அதனை எவ்வகையாலேனும் எடுத்தாளாத நூல்கள், தமிழில் தொல்காப்பியம் ஒன்றனைத் தவிர வேறு பிறிதெதுவும் இல்லை. ஆதலின் திருவாசகத்தின் கண்ணும், திருக்குறட் சொற்கள் சொற்ருெடர்கள் கருத்துக்கள் சாயல்கள் முதலியன "பிரைசேர்பாலின் நெய்போல" ஆங்காங்கே விரவி அமைந்து காணப்படுகின்றன. "முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும், பொன்னேபோற் போற்றுதலும்" ஓர் உயர்ந்த இலக்கிய மரபாகும். அங்ஙனமே திருக்குறட் சாயலும் செறிவும் திருவாசகத்தின்கண் ஆங்காங்கு விரவிக் காணப்படுதல், அதன் சிறந்த பல இலக்கிய நலங்களுள் ஒரு திறமாகும்.

திருக்குறளின் சொற்கள், சொற்ருெடர்கள், கருத்துக்கள் முதலியவற்றை, நினைவு கூரச் செய்யும் திருவாசகத்தின் பகுதிகள் மிகப்பல. அவற்றுள் ஒரு சில ஒப்புமைப் பகுதிகள் மட்டும், ஈண்டு இக்கட்டுரையின் கண் தொகுத்துத் தரப்பெறுகின்றன.

| திருவாசகம் | திருக்குறள் |
|---|---|
| 1. ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே | ஓர்த்துள்ளம் உள்ள துணரின் |
| 2. மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சாராமே; மீண்டு வாரா வழியருள் புரிபவன். | மற்றீண்டு வாரா நெறி |
| 3. தனியனேன் பெரும்பிறவிப் பவ்வத்து; பிறவி என்னும் கடலை நீந்த | பிறவிப் பெருங்கடல் நீந்துவர் |
| 4. இங்கொர் பார்ப்பெனப் பாழ்நனேன் படிற்ருக்கையை விட்டு | குடம்பையுட் புட்பறந் தற்றே |

| | | |
|---|---|---|
| 5. | வற்றல் மரம்போல் நிற்பேனே | வற்றல் மரந் தளிர்த்தற்று |
| 6. | இரைதேர் கொக்கொத்து இரவு பகல் ஏசற் றிருந்தே வேசற்றேன் | கொக்கொக்க கூம்பும் பருவத்து |
| 7. | வெய்ய வினை இரண்டும் வெந்தகல மெய்யுருகி | இருள்சேர் இருவினையும் சேரா |
| 8. | மற்றறியேன் செய்யும் வகை | செய்யாமற் செய்த உதவிக்கு |
| 9. | உண்டாமோ கைம்மாறு உரை | கைம்மாறு வேண்டா கடப்பாடு |
| 10. | வான்பாவிய அடவி மரமானேன் | மரம்போல்வர் மக்கட்பண்பு இல்லாதவர் |
| 11. | செம்பொருள் துணிவே சீருடைக் கழலே செல்வமே | செம்பொருள் காண்ப தறிவு |
| 12. | தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்று விழுந்து கிடப்பேனை | மரப்பாவை நாணால் உயிர் மருட்டியற்று |
| 13. | வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன் மண்ணும் விண்ணும் | வேண்டாமை யன்ன விழுச் செல்வம் ஈண்டில்லை |
| 14. | பற்றாங் கவையற்றீர் பற்றும் பற்றாங் கது பற்றி | பற்றுக பற்றற்றான் பற்றினை |
| 15. | மன்னரோ டுறவும் அஞ்சேன் | அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க |
| 16. | பாதாளத்தார் வித்து | வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து |
| 17. | ஏதிலார் முனம் என் செய்தாய் | ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் |
| 18. | நாணொணாததோர் நாணம் எய்தி நடுக்கடலுள் அழுந்தி நான் | கருமத்தால் நாணுதல் நாணு |
| 19. | ஊற்று மணற்போல் நெக்கு நெக்கு உள்ளே உருகி ஓலமிட்டு | தொட்டனைத் தூறும் மணற்கேணி |
| 20. | யான் எனது என்றவரவரைக் கூத் தாட்டு வானாகி; யான் எனதென் உரைமாய்த்து | யான் எனதென்னும் செருக்கறுப்பான் |
| 21. | நினைப்பற நினைந்தேன் நீயலாற் பிறிது மற்றின்மை | உள்ளுவன் மன்யான் மறப்பின் |
| 22. | ஞாலமே கரியாக நானுனை நச்சி நச்சிட வந்திடும் காலமே.... | ஆதிபகவன் முதற்றே உலகு (காணப் பட்ட உலகத்தால் காணப்படாத கட வுட்குண்மை கூறவேண்டுதலின், ஆதி பகவன் முதற்றே என உலகின் மேல் வைத்துக் கூறினர் —பரி) ...வளிவழங்கும் மல்லன்மா ஞாலம் கரி |
| 23. | பாருருவாய பிறப்பற வேண்டும் | வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை |

| | |
|---|---|
| **24.** ஆனை வெம்போரிற் குறுந்தூறெனப் புலனுல் அலைப்புண்டேன், அடற்கரிபோல் ஐம்புலன்களுக்கு அஞ்சி அழிந்த என்னை | உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான் ("திண்மை என்னும் தோட்டியால் பொறிகளாகிய யானைகள் ஐந்தையும் தத்தம் புலங்கள் மேற் செல்லாமற் காப்பவன்" —பரி) |
| **25.** கால முண்டாகவே காதல் செய்துய்மின் | வேண்டின் உண்டாகத் துறக்க, (அவ்வின்பங்களை வேண்டின், அவற்றைக் காலம் பெறத் துறக்க" —பரி) |
| **26.** சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன் | அவாவினை ஆற்றஅறுப்பில் ("அவாவினை முற்ற அறுத்தானுக்கு வேறு அறஞ்செய்ய வேண்டா, செய்தன எல்லாம் அறமாம் என்பது கருத்து" —பரி) |

## முடிவுரை :

இதுகாறும் விளக்கியவாற்ருல், திருக்குறள் போலத் திருவாசகமும் உலகப் புகழ் பெறுவதற்குரிய தமிழ் நூல் என்பதும்; திருக்குறள் மட்டுமேயன்றித் திருவாசகம் முதலிய வேறு சில நூல்களும் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவாக உரிய சிறந்த தமிழ் நூல்களாகப் போற்றத் தக்கன என்பதும், தமிழராயினர் அனைவரும் திருக்குறள் போலவே திருவாசகத்தினையும் போற்றிப் பாராட்டும் கடப்பாடுடையர் என்பதும்; திருவள்ளுவரும் மாணிக்கவாசகரும் தமிழ் நாட்டின் தலைசிறந்த ஞானப் பெருஞ் சான்ருேர்கள் ஆவர் என்பதும், யாவராலும் நன்கினிது தெளியப்படும்.

"வேதமோ டாகமம் மெய்யாம்
இறைவன் நூல்
ஓதும் பொதுவும் சிறப்பும்
என்றுள்ளன"

என ஆசிரியர் திருமூலர் அருளிச் செய்தது போல, திருக்குறள் மக்கள் அனைவருக்கும் உரிய உலகியற் பொது நூல் என விளங்க, திருவாசகம் மக்கள் அனைவர்க்கும் உரிய அருளியற் சிறப்பு நூல் எனத் திகழ்கின்றது, என்னும் உண்மையை நாம் திறந்தெரிந்து தெளிந்து, அவை இரண்டினையும் ஆராய்ந்துணர்ந்து நன்கினிது ஓதி, நலம் பெற்றுச் சிறப்புற வாழ முயலுவோமாக!

—ஆசிரியர்

## (மதிப்புரை)

மாமல்லை : சிற்பக்கலைத் துறையில், நமது தமிழ்நாட்டின்கண் ஒப்புயர்வு அற்றுப் பழமையும் பெருமையும் வாய்ந்து, சிறந்த புகழ் பெற்றுத்திகழ்வது மகாபலிபுரம் எனவழங்கும் மாமல்லபுரம். மேலைநாட்டு அறிஞர் எத்தனையோ பலர் வந்து கண்டு, வியந்து புகழ்ந்து பாராட்டிச் செல்லும் மாட்சிமை யுற்று மாமல்லபுரம் விளங்கி வருகின்றது. அது சங்க காலத்திலேயே எங்ஙனம் ஒரு சிறந்த துறைமுகப் பட்டினமாக விளங்கியிருந்தது? பின்னர்ப் பல்லவர் காலத்தில் எவ்வாறு வளர்ச்சி பெற்றது? சோழர் பாண்டியர் காலங்களிலும், சம்புவராயர் விசயநகர அரசர் முதலியவர்களின் காலங்களிலும், அஃது எந்நிலையில் இருந்தது? பல்வேறு இலக்கியங்களில் மாமல்லபுரம் பற்றிக் காணப்படும் குறிப்புக்கள் யாவை? அங்குள்ள கோயில்கள் மண்டபங்கள் இரதங்கள் சிற்பங்கள் என்னென்ன? அவற்றின் அழகிய அமைப்புக்கள் எத்தகையன? மேலைநாட்டு ஆராய்ச்சியறிஞர் பலர், இங்கேயுள்ள கலைத்திறம் கண்டு வியந்து களித்துக் கூறிய புகழுரைகள் யாவை? என்பவற்றை இந்நூல் விரிவாகவும் தெளிவாகவும் சுவையாகவும் விளக்குகின்றது. தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு இரா. நாகசாமி, எம்.ஏ., அவர்கள், இதனை நன்கினிது ஆராய்ந்து செவ்விதின் எழுதியுள்ளார். பயன்மிக்க சிறந்த நல்ல ஆராய்ச்சி நூல்! மாமல்லபுரம் பற்றிய அழகிய படங்கள் பற்பல இதன்கண் சேர்க்கப்பெற்றுள்ளன. பக்கம் சுமார் 200. கிடைக்குமிடம் : தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை—4. விலை ரூபா 1—50.

—ஆசிரியர்.

# திருக்குறளும் தருக்கநூலும்

**முன்னுரை :**

திருவள்ளுவர் நீதிநூலாசிரியர் மட்டும் அல்லர். சிறந்த கலைகள் பலவற்றிலும் தேர்ச்சி மிக்கவர். திருவள்ளுவர் ஒரு பெரும் பல்கலைக்குரிசில் என்பதனை, அவர்தம் திருக்குறளிற் காணப்படும் அகச்சான்றுகள் கொண்டு நாம் அறிதல் கூடும். திருவள்ளுவர் காலத்தில் தருக்க நூற்கலை, பெரிதும் பரவியிருந்தாகத் தெரிகின்றது.

**தருக்க நூல் :** பண்டைக்காலத்தில் சமணர்களும் பௌத்தர்களும் தமது சமயக் கொள்கைகளைத் தருக்க நூலின் நெறிமுறைகளைத்தழுவி, காரண காரிய முறைகளைக் காட்டி, தடைவிடை முறைகளால் நுட்பமாக ஆராய்ந்து விவாதித்துப் பரப்பி வந்தனர். சமண பௌத்த ஆசிரியர்கள் பலர், புகழ்மிக்க தருக்க நூல்கள் பல இயற்றியுள்ளனர். ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான **மணிமேகலை** என்னும் தமிழ்ப் பெருங் காப்பியம், தனது இறுதி நான்கு (27—30) காதைகளில் வடமொழித் தருக்கநூற் கருத்துக்களைத் தமிழில் வடித்துத் தருதல் காணலாம். அக்காலத்தில் மிதிலை உச்சயினி பாடலிபுத்திரம் காசுமீரம் விக்கிரமசீலம் வங்காளம் நாடியா முதலிய வடஇந்தியப் பகுதிகளில், தருக்கநூற்கலை பெரிதும் பயிலப்பட்டு வந்தது எனத் தெரிகின்றது. தமிழ்நாட்டிற் காஞ்சிபுரம் தருக்கநூற் கலைப் பயிற்சிக்கு மிகவும் புகழ்பெற்று விளங்கியது. திக்கநாதர் (கி. பி. 450-520), தருமபாலர் (கி. பி. 600-635), தருமகீர்த்தி(கி.பி.635-650) போன்ற பெரும்புகழ் சான்ற தருக்க நூலாசிரியர்கள், காஞ்சிபுரத்தைச் சார்ந்த தமிழ்ப் பெருமக்களே யாவர்.

இயேசுகிறித்து தோன்றுதற்கு ஆறு நூற்றாண்டுகட்கு முன்னரே, அஃதாவது இற்றைக்கு இரண்டாயிரத்து அறுநூறு (2600) ஆண்டுகட்கு முன்பே, இந்திய மக்கள் தருக்கநூற் கோட்பாடுகளை அறிந்திருந்தனர். 'ஷட்தரிசனம்' அல்லது 'அறுவகைச் சமயங்கள்' எனப்படும் நியாயம் வைசேடிகம் சாங்கியம் யோகம் மீமாஞ்சம் வேதாந்தம் என்னும் ஆறனுள், நியாயம் வைசேடிகம் என வழங்கும் இரண்டும், தருக்கத்தின்கண் அடங்குவனவேயாம். தத்துவ ஆராய்ச்சி செய்தற்கும், சமயக் கொள்கைகளை உணர்தற்கும் உணர்த்துதற்கும், தருக்க நூற்கலை மிகப்பெரிதும் இன்றியமையாத தொன்றாகப் பண்டைநாளில் மதிக்கப் பெற்று வந்தது.

**திருவள்ளுவர் :** ஆதலின், ஆசிரியர் திருவள்ளுவர் பெருமான், தாம் இயற்றியருளிய திருக்குறளில், தருக்கநூற் பயிற்சியானது அறிவு வேட்கையர் அனைவருக்கும் இனறியமையாதது எனக் கொண்டு, "ஆற்றின் அளவு அறிந்து கற்க" (775) என்று விதித்திருப்பதுடன், அதனைக் கற்பதனாலாய பயன் இது எனத் தெளிவிக்கும் கருத்துடன், "அவையஞ்சா மாற்றம் கொடுத்தற் பொருட்டு" என்றும் அருளிச் செய்தனர். "நல்லாற்றான் நாடி அருள் ஆள்க" (242) எனப் பிறவிடத்தும் அவர் சுட்டியிருப்பதன்

கருத்தைப் பரிமேலழகர் உரைகொண்டு உணரலாம்.

ஆசிரியர் திருவள்ளுவர் இங்ஙனம் பல இடங்களில் தருக்க நூற்பயிற்சியினை வற்புறுத்தியிருப்பதோடு, தாமே தருக்க நூற் பயிற்சியில் தலைசிறந்தவராகவும் திகழ்ந்திருந்தனர் என்பது,

> "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே உலகு"

என்னும் திருக்குறள் கொண்டும், தெள்ளிதின் உணரப்படும். திருவள்ளுவர் எத்துணைச் சிறந்த தருக்கநூற் பெரும் புலவராக விளங்கினர் என்பதனை, இத் திருக்குறள் எழிலுற இனிது புலப் படுத்துகின்றதெனலாம்.

திருவள்ளுவர், தாம் இயற்றத்தலைப்படும் திருக்குறள் நூலின் தொடக்கத்தே 'கடவுள் வாழ்த்து'க் கூற முற்படுகின்றார். கடவுளை வாழ்த்துவதற்குத் தலைப்படும் முன்னர், உலகிற்குக் கடவுள் ஒருவர் உண்டுஎன உணர்த்த வேண்டுவது அவருக்கு இன்றியமையாத கடமை யாகின்றது. கடவுள் உண்டு என்னும் உண்மையை உணர்த்த அவர்வேறு எத்தனையோ பலப்பல வகையான சான்று களையும் காரணங்களையும் எடுத்துக் காட்டியிருக்கலாம். ஆனால், அவர் அணியியல் நூலுக்கும் (Rhetoric), அளவையியல் நூலுக்கும் (Logic) தொடர்புடைய உவமையினைக் கொண்டு, இறை உண்மை நிறுவ முற்படுகின்றார்.

**உவமை நலன் :** ஒரு கவிதையின் சிறப்புக்குக் காரணமாக அமைவன பலப் பல. அவைகளுள் உவமை தலைசிறந்த தொன்று. உவமையானது கவிதைக்கு அழகும் சுவையும் அளிக்கின்றது: கருத்து வளத்தினைப் பெருக்குகின்றது; கவிதை யின் பொருளினைப் பயில்பவர் உள்ளத்தில் கவினுறப் பதிவிக்கின்றது.

> கற்பனை செறிந்த நல்ல
> கவிதையாம் அரங்கம் தன்னில்
> பொற்புறும் உவமை என்னும்
> புகழ்மிகு விறலி தானே,
> பற்பல வேடம் பூண்டு
> பண்பமை சுவைஞர் உள்ளம்
> நற்பெரு மகிழ்ச்சி ஓங்க,
> நடனம்செய் தின்பம் நல்கும்.
>
> நலமிகும் உவமை என்னும்
> நல்லெழில் விறலி தானே,
> பலவகைச் சிறந்த கோலம்
> பாங்குறப் புனைந்து போந்து,
> கலைநிறைந் துயர்ந்து நிற்கும்
> காவிய அரங்கில் தோன்றிப்
> புலவர்தம் உள்ளத் தின்பம்
> பொங்கிட நடிப்பள் நன்றே
>
> —தமிழாக்கம், ஆசிரியர்.

**தருக்க நெறிமுறை :** கடவுள் உண்மையை நிறுவ முற்படும் தமிழ்ப் பெருஞ் சான்றோராகிய திருவள்ளுவர் தமிழிலக்கண அமைப்பின் நுட்பத்தினைத் தழுவி, அகரமாகிய உயிரெழுத்தினை உவமையாக எடுத்துக்காட்டி, தருக்க நெறிக்குரிய மேற்கோள் – ஏது–எடுத்துக் காட்டு-ஏற்றல்–முடித்தல் என்னும் ஐவகை உறுப்புக்களின் வைத்து விளக்கியிருக் கும் திறம், வியந்து மகிழ்தற்குரியது. இவற்றை முறையேவடநூலார் பிரதிஞ்ஞை (Proposition), ஏது (Reason), திருட் டாந்தம் (Example), உபநயம் (Application), நிகமனம் (Conclusion), என வழங்குவர். இவ் ஐவகை உறுப்புக் கொண்ட சொற்றொடரின் (Syllogism) முறையில், "அகர முதல எழுத்தெல்லாம்" என்னும் திருக்குறட் பொருளைப் பின் வருமாறு கருதி நாம் ஆராய்ந்துணரலாம்.

1. "எழுத்தெல்லாம் (ஆதி) அகரத்தை முதலாக உடையன;
2. இயக்கப் படுதலின்;
   யாது இயக்கப்படுவது
   அதுவது தன்னை இயக்கப்படுத்தும்
   ஒரு பொருளை முதலாக உடையது;
3. குடம்போல;
4. எழுத்தெல்லாம் ஆதி அகரத்தால் இயக்கப் படுகின்றன.
5. ஆதலின் எழுத்தெல்லாம் ஆதி அகரத்தை முதலாக உடையன.

### (அதுபோல)

1. உலகு ஆதிபகவனை முதலாக உடையது;
2. இயக்கப்படுதலின்,
 யாதுயாது இயக்கப்படுவது
 அதுவது தன்னை இயக்கப்படுத்தும்
 ஒரு பொருளை முதலாக உடையது;
3. எழுத்துக்களெல்லாம் போல;
4. உலகு ஆதிபகவனால் இயக்கப்படுகின்றது.
5. ஆதலின், உலகு ஆதி பகவனை
 முதலாக உடையது.

**உலகும் கடவுளும் :** தருக்கநூல் நெறியில் தெரிந்த ஒன்றைக் கொண்டு தெரியாததையும், கண்ட ஒன்றைக் கொண்டு காணாததையும் அறிவித்தல் மரபு. அத் தருக்க நெறிமுறையை ஒட்டி ஆசிரியர் திருவள்ளுவர் காணப்படாத கடவுள் உண்மையினைக் காணப்பட்ட உலகத்தைக் கொண்டு நம்மனோர்க்கு அறிவுறுத்துகின்றார். அக் கருத்திலேயே 'கடவுள் உலகத்திற்கு முதல்வன்' என்று கூறாமல் 'உலகு கடவுளை முதலாக உடையது' என உலகின்மேல் வைத்துக் கூறினார். திருவள்ளுவர் தருக்கநெறி சிறிதும் பிறழாத பகுத்தறிவாளர் (Rationalist thinker) என்பதற்கு, இத்திருக்குறள் ஒன்றே சான்றாகப் போதியதாகும். **சிவஞானபோதம்** என்னும் செந்தமிழ்த் தத்துவச் செழுந்தமிழ் நூலை இயற்றியருளிய மெய்கண்ட தேவரும், காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மைகூற வேண்டுதலின், "அவன் அவள் அது எனும் பாகுபாடுகள் உடைய உலகமானது, தோன்றல் நிற்றல் அழிதல் என்னும் மூன்று தொழில்களை உடைமையால், ஒருவனால் தோற்றுவிக்கப்பட்ட உள்பொருளேயாம்" எனத் திருவள்ளுவரின் அடிச்சுவட்டையே பின்பற்றித் தாமும் அறிவுறுப்பாராயினர்.

**தெய்வப் புலவர் :** இங்ஙனம், தருக்க நெறிமுறையைத் தழுவியும், பகுத்தறிவுப் பண்புக்கு முரணாமலும், சிறந்த முறையில் முதன்முதலாக நூல் வழக்கின்கண் வைத்துத் தெய்வமுண்மையை நிறுவிய சிறப்புக்குரியவர், திருவள்ளுவரேயாவர். திருவள்ளுவருக்கு முன்னரும், தெய்வங் கொள்கையும் வழிபாடும் சிறப்புற நிலவி வந்தன வாயினும், நம்மனோர்க்குக் கிடைத்துள்ள தமிழிலக்கிய நூற்றொகுதியை ஆய்ந்துணருங்கால், இச்சிறப்புக்கு முதன்முதலாக உரியவர், திருவள்ளுவரே என்பது தெற்றெனத் தெரிகின்றது. தெய்வம் உண்மையையும், தெய்வ வழிபாட்டையும் நூற்பொருளின் வைத்து வற்புறுத்தி விளக்கியவர், திருவள்ளுவரே எனல், மிகையன்று. அதுபற்றியே அவருக்குத் 'தெய்வப் புலவர்' என்னும் சிறப்பியற் பெயர் வழங்குவதாயிற்று.

**முடிவுரை :**

தெய்வப் புலவர் என்னும் தொடருக்கு, 'மனிதராய் நம்மனோர் போலக் கல்வி கற்று வந்த எளிய புலமையுடையவர் அல்லர்; தெய்வத்தன்மை வாய்ந்த சிறந்த பெரும் புலவர்' என்னும் குறிப்பிற் பொருள் கூறுவர். அது பொருந்துவதே யாயினும், உண்மைப்பொருள் அதனின் வேறு எனலாம். காக்கையைப் பாடிய பெண்பாற் புலவர் ஒருவர் "காக்கை பாடினியார்" எனவழங்கப் பெற்றாற்போல, 'தெய்வமுண்மை நிறுவித் தெய்வ வழிபாட்டை நான் முகத்தால் விதித்து வற்புறுத்தியருளிய தனிமுதற் பெரும்புலவர்' என்னும் காரணம் பற்றியே, திருவள்ளுவர் "தெய்வப் புலவர்" என விதந்தெடுத்துச் சிறப்பிக்கப்பெற்றார் எனப் பொருள் கொள்ளுதல், மிக்க பொருத்தம் உடையதாகும். வாழ்க திருவள்ளுவர்! வளர்க திருக்குறள்!

—ஆசிரியர்.

# அபிராமி அந்தாதி

(மூலமும் உரையும்)

இழைக்கும் வினைவழியே அடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்து அஞ்சல் என்பாய்; அத்தர்சித்தம் எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே!
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே.

(பொழிப்புரை) சிவபெருமானின் திருவுள்ளமும் திருமேனியும் ஆகிய அனைத்தையும் குழையும்படி செய்கின்ற, நறுமணப் பொருள்கள் பூசப் பெற்ற திரண்ட தனங்களை யுடைய, யாமளை என்னும் பெயரைக் கொண்ட, மெல்லியல்பு வாய்ந்த அம்மையே! உயிர்கள் செய்கின்ற வினைகளின் விளைவுகட்கு ஏற்ப ஒறுத்தலைச் செய்கின்ற கூறுவன், யான் நடுக்கங்கொண்டு அஞ்சும்படி என்னை அழைக்கின்ற சமயத்தில், அவனால் யான் துன்புற்று வருந்தும் நேரத்தில், 'தாயே அடைக்கலம்' என்று நின்னிடமே ஓடி வந்து தஞ்சம் புகுவேன். அதுபொழுது, என்முன்னே போந்து 'அஞ்சற்க' என்று கூறி, என்னைக் காத்தருள்வாயாக!

(குறிப்புரை) சிவபெருமான், அம்பிகை 'தழுவக் குழைந்து' முலைச்சுவடும் வளைச்சுவடும் தனது திருமேனியிற் பதியப் பெற்றவராதலின், "அத்தர் சித்தம் எல்லாம் குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே" என்றார். அடியார்களின் குற்றங்களை யெல்லாம் மன்னித்துப் பொறுத்து ஆட்கொண்டருளச் செய்தற் பொருட்டே, அம்பிகை "அத்தர் சித்தம் எல்லாம்" குழையச் செய்கின்றாள் என்பது கருத்து. "நீரிலே நெருப்புக் கிளருமா போலே இறைவனின் குளிர்ந்த திருவுள்ளத்திலே, அடியராயினர் செய்த அபராதத்தினால் சீற்றம் பிறந்தால், பொறுப்பது இவளுக்காக! கூடல் நிலையிலே ஈசுவரனை உபதேசத்தாலே திருத்தும்; உபதேசத்தாலே மீளாத போது ஈசுவரனை அழகாலே திருத்தும்" என்பர் பெரியோர். "நீ முத்தம்தா என்று அவர் கொஞ்சும் வேளையில், நித்தம் நித்தம் வேய்முத்தரோடு என் குறைகளெல்லாம், மெல்ல மெல்லச் சொல்" எனவரும் சொக்கநாதப் புலவரின் தனிப் பாடலும், ஈண்டுக் கருதத்தகும். திண்ணமாக என்றேனும் ஒரு நாள் வந்தே தீருவன் ஆதலின் "காலன்" என்றார். அவனை நினைவு கூரும் அளவில், யாவர் உணர்விற்கும் முன்னே போந்து நிற்பது அவன் அளிக்கும் தண்டனையின் கொடுமையே யாதலின், 'அடுங் காலன்' என்றார். அடுதல் - ஒறுத்தல், தண்டித்தல். அடுதல் அவனது குறை யன்று, உயிர்கள் தாம் செய்து தேடிக் கொள்ளும் தீவினைப் பயனே என்பார் "இழைக்கும் வினைவழியே அடும் காலன்" என்றார். 'காலன் வருவான் நம்மை அழைப்பான்' என்னும் உணர்வு எழும்போதே அச்சமும் நடுக்கமும் உண்டாதலின், 'எனை நடுங்க அழைக்கும்போது' என்றும்; அந்நிலையில் செய்வது இன்னதென்று அறியாமல் திகைத்துக் கலங்கி வருந்த நேர்தல் ஒருதலை யாதலின், 'உழக்கும் போது' என்றும் குறிப்பிட்டார். வேறொரு துணையில்லையாதலின் 'உன்னையே' என்றும்,

காப்பாற்றுதற்குரிய கடமையும் உறவுரிமையும் நினக்குண்டு எனற்கு 'அன்னையே' என்றும் கூறினர். 'உன்னையே' என்பதில் ஏகாரம் பிரிநிலை; தேற்றம் எனினுமாம். 'அன்னையே' என்பதில் ஏகாரம் விளி. உழத்தல் - வருந்துதல். 'உழக்கும்போது' எனற்பாலது எதுகை நோக்கி 'உழைக்கும் போது' என வந்தது. 'அன்னையே அடைக்கலம் என்பன்' என ஒரு சொல் வருவித்துக் கொள்க. 'ஓடிவந்து அஞ்சல் என்பாய்' எனவும் இயையும். (33)

வந்தே சரணம் புகும்அடி யாருக்கு வானுலகம்
தந்தே பரிவொடு, தான்போய் இருக்கும் சதுர்முகமும்,
பைந்தேன் அலங்கற் பருமணி ஆகமும், பாகமும், பொன்
செந்தேன் மலரும், அலர்கதிர் ஞாயிறும், திங்களுமே.

(பொழிப்புரை) அபிராமியம்மை, தன்பால் வந்து அடைக்கலம் புகுகின்ற அடியார்களுக்கு மிகுந்த அருளுடன் வானுலகத்தைக் கொடுத்துவிட்டு, பிரமதேவனின் நான்கு திருமுகங்களிலும், பசுமையான தேன் ஒழுகின்ற திருத்துழாய் மாலையையும் கவுத்துவம் என்னும் பருத்த மணியையும் அணிந்த திருமாலின் மார்பிலும், சிவபெருமானின் இடப் பாகத்திலும், செவ்விய தேன் சொரிகின்ற அழகிய தாமரை மலரிலும், விரிகின்ற கதிர்களையுடைய சூரியனிடத்திலும், சந்திரனிடத்திலும் சென்று, தான் வீற்றிருப்பாள்.

(குறிப்புரை) 'தான்' என்றது ஈண்டு அபிராமியம்மையைக் குறித்தது. அபிராமி அம்மையைப் புகலடைந்து வழிபடுகின்றவர்கள், பிறவித் துன்பம் நீங்கித் துறக்க இன்பப் பேறு எய்தப் பெறுதல் திண்ணம். ஆதலின், "வந்தே சரணம் புகும் அடியார்க்கு வானுலகம் தந்தே பரிவொடு" என்றூர். அபிராமியம்மையே கலைமகளும் திருமகளும் மலைமகளும் ஆக விளங்குவதனைத் "தான் போய் இருக்கும் சதுர்முகமும், பைந்தேன் அலங்கற் பருமணி ஆகமும், பாகமும்" என்று குறிப்பிட்டார். பொன் - அழகு. அம்பிகை தாமரை மலரினும், சூரிய மண்டலம் சந்திர மண்டலம் ஆகிய வற்றிலும் எழுந்தருளி விளங்குவாள் என்பது, "தான் போய் இருக்கும் செந்தேன் மலரும், அலர் கதிர் ஞாயிறும், திங்களும்" என்பதனாற் புலப்படுத்தப் பெற்றது. 'அலர் கதிர்' என்னும் அடைமொழி திங்களுக்கும் இயையும். சதுர்முகம் - நான்கு முகம். அலங்கல் - மாலை. பருமணி - கவுத்துவம் என்னும் பெரிய சிறந்த மணி, ஆகம் - மார்பு. பாகம் - பகுதி, இடப்பக்கம். தன்னைப் புகல் அடைந்த அடியவர்களுக்கு நுகர் பொருள்கள் நிறைந்து விரிந்த வானுலகத்தைக் கொடுத்துவிட்டு. அம்பிகை தான் போய்க் குறுகிய வேறு இடங்களிற் சென்று குடியிருப்பாள் என அவளது அளப்பரும் அருட்டிறத்திறனை ஆசிரியர் இதன்கண் அறிவுறுத்தியருளினர். (34)

திங்கட் பகவின் மணம்நாறும் சீரடி சென்னிவைக்க
எங்கட்கு ஒருதவம் எய்தியவா! எண்இறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம்எய்துமோ! தரங்கக் கடலுள்
வெங்கட் பணிஅணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே!

(பொழிப்புரை) அலைவீசுகின்ற பாற்கடலில், வெவ்விய கண்களை யுடைய ஆதிசேடன் ஆகிய படுக்கையின்மீது, அறிதுயில் கொள்ளுகின்ற மேலான பொருள் ஆகிய, அபிராமி அம்மையே! சிவபிரானது திருமுடியில் உள்ள பிறைச் சந்திரனது நறுமணம் வீசுகின்ற, நின்னுடைய சிறிய திருவடியை, ஒரு தகுதியும் இல்லாத எங்கள் தலையிலே நீ வைத்தருள்வதற்கு, எங்களுக்கு ஒப்பற்ற ஒரு பெருந் தவப்பயன் அமைந்த தன்மை எத்தகைய வியப்புக்கு உரியது! எண்ணிக்கை யில்லாத தேவர்களுக்கும் கூட, இத்தகையதொரு சிறந்த தவப்பயன் கிடைக்குமோ?

(குறிப்புரை) ஊடற் காலத்தில், சந்திரசேகரர் ஆகிய சிவபிரான் அம்பிகையின் திருவடிகளில் தமது திருமுடி தோயப் பணிந்து, வணங்குகின்ருர் எனப் பாடுதல் கவி மரபாதலின், அம்பிகையின் திருவடியைத் 'திங்கட் பகவின் மணம் நாறும் சீறடி' என்ருர் (11, 60, 98). சிவபிரான் வணங்கும் போது, அவர்தம் சடை முடியிலுள்ள பிறைச் சந்திரன், அம்பிகையின் திருவடிகளிற் படிகின்ருன் என்பது கருத்து. சிவ பிரான் திருமுடி ஏற்றுப் பணியும் தனது திருவடியை, அடியார்களின் தலையில் வைத்து அம்பிகை அருள்புரிதல், அவர்களின் ஒப்பற்ற பெருந்தவத்தின் பயனே ஆதலின் "சீறடி சென்னி வைக்க எங்கட்கு ஒரு தவம் எய்தியவா" என்ருர். இத்தகையதொரு பெருந்தவப் பயன் தேவர்களுக்குங்கூட எய்துதல் அரியதாதலின், "எண்ணிறந்த விண்ணோர் தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ?" என்ருர். அம்பிகையின் ஒரு கூறு, வைஷ்ணவி என்னும் பெயருடன் திருமாலை இடமாகக் கொண்டு உலகைக் காக்கும் தொழில் புரிதலின், திருமாலுக்குரிய இயல்பை ஏற்றி, "கடலுள் பணி அணைமேல் துயில் கூரும் விழுப்பொருளே" என அம்பிகையைப் புகழ்ந்தார். பகவு - பிளவு, கூறு. 'எட்பகவு அன்ன சிறுமை' என்பது காண்க. திங்கட் பகவு - பிறைச் சந்திரன். சிறுமை + அடி என்பது சீறடி எனவரும். 'சீர்அடி' எனினுமாம். சென்னி - தலை. எங்கட்கு - மிக இழிந்த எளியேங்கட்கு. தரங்கம் - அலை. பணி – பாம்பு, ஆதிசேடன். அணை - படுக்கை. துயில் - அறிதுயில், யோகநித்திரை. (35)

பொருளே! பொருள்முடிக்கும் போகமே! அரும்போகம் செய்யும்
மருளே! மருளில் வரும் தெருளே! என் மனத்து வஞ்சத்து
இருள் ஏதும் இன்றி ஒளிவெளி ஆகி இருக்கும்உன்றன்
அருள் ஏது அறிகின்றிலேன்! அம்புயாதனத்து அம்பிகையே!

(பொழிப்புரை) தாமரை மலர் ஆகிய இருக்கையில் வீற்றிருக்கின்ற அபிராமி அம்மையே! பலவகைச் செல்வமாக விளங்குபவளே! அச் செல்வங்களால் நிறைவு பெறும் பல்வகை இன்பங்களாகத் திகழ்பவளே! அடைதற்கு அரிய துன்பங்களை நுகரும்படி செய்து மயக்குகின்ற மறைப்பாற்றலே! அம்மயக்கத்தின் முடிவில் வருகின்ற தெளிந்த உணர்வே! எளியேனுடைய மனத்தின்கண் வஞ்சகம் ஆகிய இருள் சிறிதும் இல்லாதபடி, அருள் ஒளியைப் பரப்பி ஞானப் பெரு வெளியில் விளங்கிக் கொண்டி ருக்கின்ற, நின்னுடைய திருவருள் எத்தகையது என்று, அடியேன் சிறிதும் அறிகின்றேன் இல்லை.

(குறிப்புரை) அம்பிகை தாமரை மலரில் இருப்பவள்; 'பத்மாசனம்' என்னும் நிலையில் அமர்ந்திருப்பவள்; அடியார்களின் உள்ளமாகிய தாமரை மலரில் வீற்றிருப் பவள்; ஆதலின் 'அம்புய ஆதனத்து அம்பிகை' என்ருர். அம்புயம் – தாமரை. ஆதனம் - ஆசனம், இருக்கை. செல்வமாக இருப்பவளும், செல்வத்தைத் தருபவளும், அதனுல் இன்பத்தை நமக்கு நுகர்விப்பவளும், அம்பிகையே யாதலைப் புகழ்ந்தார். 'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை' என மணிவாசகர் பாடுதற்கு ஏற்ப, அம்பிகையே. முதற்கண் உலக இன்பங்களில் நம்மை மயக்கி நுகர்வித்தும், பின்னர் அருள் புரியாற்றலாக மாறி நம்மை அம்மயக்கத்தினின்று விடுவித்துத் தெளிவுபெறச் செய்தும் நலம் புரிதலின், "போகம் செய்யும் மருளே, மருளில் வரும் தெருளே" என்ருர். மருள் - மயக்கம், அறியாமை. தெருள் - தெளிவு, ஞானம். "மருள் எனில் இருளாய் நிற்கும், அருள் எனில் ஒளியாய் நிற்கும்" எனவரும் சிவப் பிரகாசச் செய்யுள் (71), இங்கு உணர்ந்தின் புறற்பாலது. (36)

கைக்கே அணிவது கன்னலும் பூவும்; கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலே; விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும்; எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யான்இடம் சேர்பவளே!

(பொழிப்புரை) எட்டுத் திசைகளையே ஆடையாக அணிகின்ற சிறப்புடையவர் ஆகிய, சிவபெருமானின் இடப்பக்கத்திற் சேர்ந்து வீற்றிருக்கும் அபிராமியம்மையே! நின்னுடைய திருக்கைகளில் அழகுறக் கொண்டிருப்பன, கரும்பாகிய வில்லும், மலர் ஆகிய அம்புகளும் ஆகும்; செந்தாமரை போன்ற நிறமுடைய திருமேனியில் அழகு பெறத் தரித்திருப்பது வெண்மையான முத்துக்களால் அமைந்த மாலே; நஞ்சையுடைய பாம்பின் படம் போன்ற மறைவிடத்தில் அணிந்திருப்பன பட்டாடையும், பல மணிகள் கோத்த, மேகலே பருமம் காஞ்சி கலாபம் விரிசிகை போன்ற அணிகலன்களும் ஆகும்.

(குறிப்புரை) இறைவன் எல்லேயற்றவனுயும் அருவனுயும் விளங்குதலேக் குறிப்பிட, அவன் திக்குகளேயே ஆடையாகக் கொண்டவன் (திகம்பரன்) என்பர் பெரியோர், ஆதலின், 'எட்டுத் திக்கே அணியும்' என்ருர். இங்ஙனம் வேருேர் ஆடையின்றித் திசைகளே ஆடையாக உடையவன் என்பது பற்றி, அவனுக்கு ஓர் இழுக்கும் இல்லே. என்பார் 'திருவுடையான்' என்ருர். 'கூத்தப்பிரான்' என்பதற்குத் திருக்கோவையார் உரையிற் பேராசிரியர் 'கூத்தன் ஆயினும் பிரானுய் உள்ளான்' என்று செய்துள்ள விளக்கவுரை, இங்குக் கருதி இன்புறுதற்குரியது. அம்பிகையின் அழகிய திருவுருவத்தையும், அழகுக்கு அழகு செய்வதுபோல அவள் தரித்துள்ள அணிகலன்களேயும் நினேந்து, தியானித்துப் புகழ்ந்தபடி. எட்டுத் திக்கே அணியும் திருவுடையான் இடம் சேர்ந்திருக்கும் நீ, இங்ஙனம் பலவற்றை அழகுற அணிந்திருப்பது என்? என்று வியந்து மகிழ்ந்து வினவியவாறு. கன்னல் - கரும்பு. கமலம் - தாமரை. (37)

பவளக் கொடியிற் பழுத்த செவ்வாயும், பனிமுறுவல்
தவளத் திருநகையும் துணேயா, எங்கள் சங்கரனேத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணேமுலேயாள்
அவளேப் பணிமின் கண்டீர்! அமராவதி ஆளுகைக்கே.

(பொழிப்புரை) பெரும்பதவிகளேப் பெற்று இன்பம் நுகரவேண்டும் என்று விரும்புகின்ற உலக மக்களே! நீவிர் தேவர் உலகத்தின் தலேநகரம் ஆகிய அமராவதியினே ஆட்சி செய்வதற்கு (விரும்பினுல்), பவளக் கொடிபோலக் கனிந்த சிவந்த வாயையும், குளிர்ந்த புன்சிரிப்புப் பூத்த வெண்மையான அழகிய பல்வரிசையையும் தமக்குத் துணேயாகக் கொண்டு, எங்களுடைய இறைவன் ஆகிய சிவபெருமானேக் குழையும்படி எதிர்த்துப் போர் செய்து, (அவர் தமக்கு உற்ற துணேயாகத் தழுவ முற்படும்) துடியைப் போன்ற இடையையும் தம்முடைய சுமையின் மிகுதியினுல் தளர்ந்து சாயும்படி செய்கின்ற, இரண்டு திருமுலேகளேயுடைய அபிராமியம்மையைப் பணிந்து வழிபடுவீர்களாக!

(குறிப்புரை) அம்பிகையைத் தொழுதால், அவளுடைய அருளினுல் தேவருலகத்தை ஆளும் சிறப்பையும் பெறலாம் என்பது கருத்து. புன்முறுவல் பூத்த செவ்விதழும், வெண்பல் வரிசையும் காதற்குறிப்புணர்த்திக் காண்போரை மயக்கி வெற்றிகொள்ள வல்லனவாதலின், சங்கரனேத் துவளப் பொருதற்குத் தனங்கள் அவற்றைத் துணேயாகக் கொண்டன என்ருர். ''போகியாய் இருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதல்'' கருதியே, இறைவனே அம்பிகை இங்ஙனம் பொருவதும், அதற்கு இறைவன் துவள்வதும் ஆதலின், உயிர்க்கு நலம் செய்பவன் என்னும்

கருத்தில் 'எங்கள் சங்கரன்' என்றார். சங்கரன் - நன்மை செய்பவன். "நலமிலன் நண்ணார்க்கு; நண்ணினர்க்கு நல்லன்; சலம் இலன் பேர் சங்கரன்" என்பது திருவருட் பயன். "ஊடலில் தோற்றவர் வென்றார்" என்பது தமிழ்மறையாதலின், அம்பிகை பொருதபொழுது இறைவன் துவள்வது ஒருவகை வெற்றியேயாதல் உணரற்பாற்று. "சால்பிற்குக் கட்டளை யாதெனின், தோல்வி துலையல்லார் கண்ணும் கொளல்" என்பதும் இங்குச் சிந்திக்கத் தக்கது. (38)

ஆளுகைக்கு உன்றன் அடித் தாமரைகள் உண்டு; அந்தகன்பால்
மீளுகைக்கு உன்றன் விழியின் கடைஉண்டு; மேல் இவற்றின்
மூளுகைக்கு என்குறை, நின்குறையே அன்று; முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான் பங்கில் வாள்நுதலே!

(பொழிப்புரை) திரிபுரம் என்னும் மும்மதில்களும் அழியும் பொருட்டு, நெருப்பு ஆகிய அம்பைத் தொடுத்த மேருமலை ஆகிய வில்லையுடைய சிவபெருமானின், இடப் பக்கத்தில் வீற்றிருக்கின்ற ஒளிமிகுந்த நெற்றியையுடைய அபிராமியம்மையே! என்னை ஆட்கொள்ளுவதற்கு உன்னுடைய திருவடிகள் ஆகிய தாமரைகள் இருக்கின்றன; கூற்றுவனிடத்தினின்று தப்பி மீண்டு உய்வதற்கு உன்னுடைய கடைக்கண்ணின் திருநோக்கம் இருக்கின்றது; இருந்தும் இவற்றின் மேற் கருத்தைப் பொருத்தி, யான் முனைந்து முயற்சி செய்தற்குக் காலம் வராமல் இருப்பது, என்னுடைய குற்றமே; நின்னுடைய திருவருளின் குறைவு அன்று.

(குறிப்புரை) முப்புரங்களை அழிப்பதன் பொருட்டுச் சிவபெருமான், மேரு மலையை வில்லாகவும் நெருப்பை அம்பாகவும் கொண்டார் என்பது வரலாறு. அஃது "இரும்பொன் மலைவில்லா எரி அம்பா நாணில் திரிந்தபுரம் மூன்றும் செற்றான் உறை கோயில்" எனவரும் சம்பந்தர் தேவாரத்தால் உணரப்படும். ஆளுகை - ஆளாக ஏற்றுக் கொண்டு அருள் புரிகை. மீளுகை - தப்பி உய்தல். விழியின்கடை - கடைக்கண் பார்வை. அருள்புரிதற்கு அம்பிகை எப்போதும் விரும்பிக் காத்திருக்கின்றாள்; ஆனால் நாம் தான் அருளைப் பெற முயலாமல் புறக்கணித் தொழுகி உழன்று வருகின்றோம் என்பது கருத்து. "ஆயாக் கொடியேனுக்கு அன்புடையாய்! நீ அருள் இங்கு ஈயாக் குறையே இலைகண்டாய், மாயாற்கும் விள்ளாத் திருவடிக்கீழ் விண்ணப்பம் யான்செய்து கொள்ளாக் குறையே குறை" எனவரும் இராமலிங்கரின் திருவருட்பா இங்கு நினைக்கத் தகும். "கற்றுக் கொள்வன வாயுள நாவுள; இட்டுக் கொள்வன பூவுள நீர் உள; கற்றைச் செஞ் சடையான் உளன்; யாம் உளோம்; எற்றுக்கோ நமனால் முனிவுண்பதே?" எனவரும் திருநாவுக்கரசர் திருக்குறுந் தொகைப் பாடலைத் தழுவியது போல, இச் செய்யுள் அமைந்திருத்தல் அறிந்து மகிழற்பாற்று. (39)

வாள்நுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்து இறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சிற்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும்அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணம் அன்றோ முன்செய் புண்ணியமே

(பொழிப்புரை) ஒளி பொருந்திய நெற்றியிலே கண்ணை யுடையவளை, தேவர்கள் எல்லோரும் வந்து வணங்கி வழிபட்டு அருள் பெற விரும்பி நினைக்கின்ற எங்களுடைய பெருமைக்குரிய தலைவியை, அறியாமையை யுடைய நெஞ்சினாற் காண்பதற்கு அருகே யுள்ளவள் அல்லாத, இளம் பருவப் பெண் ஆகிய அபிராமியம்மையைக் காணவேண்டும்

என்று பெரிதும் அன்பு மேலிடுதற்கு நினைத்த நினைவு, நாம் முற்பிறவிகளிற் செய்த நல்வினைகளின் பயனே ஆகும்.

(குறிப்புரை) கணவற்கு உரியது மனைவிக்கும் உரியதாகும் என்னும் முறைமையால், சிவபிரானுக்கு உரிய நெற்றிக்கண் அம்பிகைக்கும் உளதாதல் பற்றி 'வாள்நுதற் கண்ணி' என்றார். அம்பிகையின் அருளைப் பெற்று உய்ய விரும்பித் தேவர்கள் அனைவரும் இடையறாது வந்து வழிபட்டுச் செல்வர் ஆதலின், அத்தகு பெருமை சான்ற அம்பிகையை "விண்ணவர் யாவரும் இறைஞ்சிப் பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டி" என்றார். வாள் - ஒளி. நுதல் - நெற்றி. பேணுதல் - அருளைப் பெறவிரும்பிப் பணிவிடைகள் புரிதல். அறியாமை அன்பின்மை தன்முனைப்பு முதலிய அழுக்குகள் நிரம்பிய நெஞ்சத்தினுற் காண முடியாதபடி, நெடுந்தொலைவில் நீங்கி நிற்பவள் அம்பிகை. ஆதலின் "பேதை நெஞ்சிற் காணுதற்கு அண்ணியள் அல்லாத" என்றார். உலகுயிர்களை யெல்லாம் உவந்து ஒருங்கு ஈன்ற பெரு மூதாட்டியே யாயினும், அபிராமியம்மை என்றுமே இளம் பருவப் பெண்ணின் பெற்றியினளாகவே விளங்குதலின் "கன்னி" எனத் துதித்தார். "அகிலாண்ட கோடி ஈன்ற அன்னையே, பின்னையும் கன்னி என மறை பேசும் ஆனந்தரூப மயிலே" எனத் தாயுமானவரும், "பவன் பிரமசாரி ஆகும்; பான்மொழி கன்னி ஆகும்" என அருள் நந்தி சிவமும் குறிப்பிடுதல் காண்க. அண்ணியள் - அண்மையில் (அருகில்) இருப்பவள். முன்னைப் பல பிறவிகளில் செய்த புண்ணியத்தின் பயனாகவே, இறையுணர்வும் நினைவும் ஒருவர்பால் உதிக்கும் என்பது பற்றிக் "காணும் அன்பு பூணுதற்கு எண்ணிய எண்ணம் அன்றே முன்செய் புண்ணியம்" என்றார். இதனை "முன்செய் புண்ணியமே அன்றே காணும் அன்பு பூணுதற்கு எண்ணிய எண்ணம்" எனவும் இயைத்துப் பொருள் கொள்ளலாம். முன்னைப் பல பிறவிகளின் புண்ணியத்தினாலேயே இறையுணர்வும் அன்பும் அரும்பும் என்பது "முன்புசெய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான அன்பினை எடுத்துக்காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி" எனவரும் பெரிய புராணப் பாடலால் தெளிவாம். (40)

—ஆசிரியர்.



கருவூர் வட்டம்: வெண்ணெய்மலை ஸ்ரீபாலசுப்பிரமணியர் கோயிலுக்குத் தூய்மைப் பரிசளிப்பாக, நமது அறநிலைய ஆணையர் அவர்கள் சுழற்கோப்பை வழங்குதல் (10—12—68).

# "தொன்மைக் கோலம்"

**முன்னுரை :**

எல்லாம் வல்ல இறைவன், தனக்கென ஓர் உருவமும் ஒரு பெயரும் உடையவன் அல்லன். ஆயினும் நம் பொருட்டு, இறைவன் பல உருவமும் பல பெயரும் கொண்டு விளங்கி அருள்கின்ருன். அங்ஙனம் சிவ பெருமான் உயிர்களின் பொருட்டுக் கொண்டருளிய திருவுருவங்கள் 25 என்றும், 64 என்றும் நூல்கள் குறிப்பிடும். அவற்றுள் **'அர்த்தநாரீசுவரம்'** என்னும் திருவுருவமும் ஒன்று. அது வலப்பக்கத்தில் ஆண்கூறும், இடப் பக்கத்தில் பெண்கூறுமாக அமைந்து திகழும். 'மாதியலும் பாதியர்' 'மாதொரு பாகர்' 'அம்மையப்பர்' என்னும் பெயர்களால் சான்ருேர்கள் அத்திருவுருவத்தினைப் புகழ்ந்து போற்றுவர்,

**அம்மையப்பர் :** இறைவன் ஆண் வடிவம் பாதியும், பெண் வடிவம் பாதியுமாக விளங்குதல், அவனே உலகுயிர்கள் அனைத்திற்கும் தாயும் தந்தையுமாக விளங்குகின்ருன் என்னும் தத்துவத்தினை, உணர்த்தி நிற்கின்றது. கடவுள் நம்பிக்கையும் கொள்கையும் இல்லாதவரும் கூட, உலகில் தாய் தந்தையின் சிறப்பினையும், இன்றியமையாமையினையும் மறுத்தல் இயலாது. அதனுல்தான் நம் முன்னைத் தமிழ்ச் சான்ருேர்கள், கடவுளை அம்மையப்பர் எனக் கொண்டு சிறப்புற வழிபட்டுப் போந்தனர். "அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்று அறிக! அம்மையப்பர் அப்பரிசே வந்து அளிப்பர்" என்பது திருக்களிற்றுப் படியாரில் வரும் திருமொழி.

இவ்வுலகியற்கை யமைப்பினை நாம் கூர்ந்து காண்போமாயின், ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள உயிர்கள் அனைத்திலும் ஆண் பெண் பாகுபாடு அமைந்து கிடத்தலைக் காணலாம். புற்பூண்டுகளிலும், மரஞ் செடி கொடிகளிலும், ஆண் பெண் அமைப்பு தவருமற் பொருந்தியுள்ளது. கற்களிலும் கூட, ஆண் கல் என்றும், பெண்கல் என்றும் பாகுபாடுகள் இருப்பதாகச் சிற்பிகள் கூறுகின்றனர். நமது உலகியல் வாழ்வுகள் அனைத்தும், இறைவன் இங்ஙனம் ஆணும் பெண்ணுமாக இயைந்து ஒன்றி நிற்கும் பெற்றியின் விளைவேயாகும்.

**மணிவாசகர் :** 'கந்தழி' எனப்படும் கடவுளின் இயல்பினை உண்மையாற் கண்டு உணர்ந்த சான்ருேர் என, உச்சி மேற் புலவர்கொள் நச்சினர்க்கினியர், மணிவாசகப் பெருமானை வியந்து புகழ்ந்து குறிப்பிடுகின்ருர். அத்தகைய பெருஞ் சிறப்புக்குரிய அருளாளரான மணிவாசகப் பெருமான், "இறைவன் தன் பாதி ஆண் வடிவத்தில்தோல்உடுத்துக் குழைஅணிந்தும், பால்வெள்ளைநீறு பூசிச் சூலம் ஏந்தியும், திகழ்கின்ருன்; பிறிதொரு பாதி பெண் வடிவத்தில் துகில் உடுத்துத் தோடு அணிந்தும், பசுஞ்சாந்து பூசிப் பைங்கிளி ஏந்தி, வளையல்கள் தரித்தும் வயங்குகின்ருன்'' என்கின்ருர். மேலும் அம்மை அப்பர் அல்லது அர்த்தநாரீசுவரர் என்னும் இத்திருவுருவமே, இறைவனின் திருவுருவங்கள் பலவற்றுள்ளும் மிக்க பழமை வாய்ந்தது என்றும், பின்வரும் திருவாசகப் பாடலிற் குறிப்பிட்டருளிச் செய்கின்ருர் :

"தோலும் துகிலும்
குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும்
பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க
வளையும்உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக்
குளிர்ந்தூதாய் கோத்தும்பி"

**திருவாசகம் :** இறைவனின் "தொன்மைக் கோலம்" ஆகிய இவ் அர்த்தநாரீசுவர வடிவத்தினைக் குறித்து, மாணிக்கவாசகர் பல இடங்களிற் சிறப்பித்துப் பாடியுள்ளார். **'திருவெம்பாவை'** என்னும் சிறந்த இனிய திருப்பதிகத்தின் கண், பாவை நோன்பு நோற்கும் மகளிர் பலரும் சேர்ந்து சென்று நீராடும் மடு ஆகிய பொய்கையானது, 'கருங்குவளை மலர்களாலும், செந்தாமரை மலர்களாலும், குருகுகள் ஆகிய நீர்ப் பறவைகளை யுடைமையாலும், அரவங்கள் மிக்கிருத்தலாலும், தங்கள் மலங்கழுவுவார் வந்து சார்தலினாலும், எங்கள் பிராட்டியும் எங்கோனும் பிரிவற ஒன்றி நிற்கும் அர்த்தநாரீசுவரத் திருவுருவம் போன்று இசைந்து உள்ளது" என்னும் அழகிய இனிய கருத்து அமையும் படி,

"பைங்குவளைக் கார்மலரால்,
செங்கமலப் பைம்போதால்,
அங்கம் குருகு இனத்தாற்,
பின்னும் அரவத்தால்,
தங்கள் மலங்கழுவுவார்
வந்து சார்தலினால்,
எங்கள் பிராட்டியும்
எங்கோனும் போன்றிசைந்து
பொங்கும் மடு"

என்று அவர் பாடியிருப்பது, யாவரும் அறிந்த தொன்று. "குவளைக் கண்ணி கூறன் காண்க, அவளும் தானும் உடனே காண்க" என்றாற் போல, வேறு பல இடங்களிலும் கூட, மணிவாசகர் இத் தொன்மைக் கோலத்தினை, விதந்து புகழ்ந்து பாடிப் போற்றுவர்.

**திருக்கோவையார் :** திருவாசகத்தின் கண் இங்ஙனம் அர்த்தநாரீசுவரத் திருவுருவினைப் புகழ்ந்து பாடிப் பரவும் மணிவாசகப் பெருமான், தாம் இயற்றியருளிய திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் சிறந்த தெய்விக ஞானச் செந்தமிழ் நூலிலும், அத்திருவுருவத்தினைத் தகவுறக் குறித்து மிகவும் சால்புறத் துதித்து மகிழ்கின்றார். இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றுத் தாம் எய்திய பேரின்பம் ஆகிய சிவானுபவ நலங்களைத் திருவாசகம் என்னும் செந்தமிழ் மாமறையாகப் பாடியருளிய மணிவாசகர், அப் பேரின்ப அனுபவம் பற்றிய செய்திகளை 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் தமது பெருங் கருணைப் பெற்றியினால், நம்மனோரும் உணர்ந்து உய்யும் பொருட்டு, நாம் அறிந்த சிற்றின்பச் செய்திகளோடு சேரவைத்து, இனிய தமிழியற் றிறங்கள் எல்லாம் அமையும் வண்ணம், இலக்கியச் சுவைநலம் பலவும் பெருகப் பாடியளித்தருளிய அரும்பெறல் நூலே திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் நூல் ஆகும். இதனைத் திருக்கோவையார் எனவும் பெரியோர் வழங்குவர்.

**ஞானப்பனுவல் :** சிற்றின்பச் செய்தியொடு பிணைத்துப் பேரின்ப அருளனுபவ நலங்களை விளக்கும் பெற்றியில் திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் நூல், தன்னிகரற்றுத் தலைசிறந்து திகழ்கின்றது. "பாவை பாடிய வாயாற் கோவை பாடுக" எனச் சிவபிரானே விரும்பிக் கேட்டுக் கொண்டபடி, மணிவாசகர் இதனைப் பாடியருளினார் என்பர் பெரியோர். இதனால் இந்நூல் திருவாசகத்தினையும் விடக்கூட, ஒரு வகையில் மிக்க சிறப்புடையது எனலாம். முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என்னும் ஐந்து திணைகளையும் உறுப்பாகக் கொண்டு அமைந்து, தன்னை ஓதிப் பயில்வோர்க்கு அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உயரிய நான்கு உறுதிப் பொருள்களையும் அளிக்கவல்லது திருச்சிற்றம்பலக் கோவையார். ஆதலின், "ஐந்திணை உறுப்பின் நாற்பொருள் பயக்கும் காமம் சான்ற ஞானப்பனுவல்" எனக் குமரகுருபர சுவாமிகள், தாம் இயற்றிய சிதம்பர மும்மணிக் கோவை என்னும் நூலில், இதனைத் திறந்தெரிந்து சிறந்தெடுத்துப் புகழ்கின்றார்.

**அகப்பொருள் :** இத்தகைய பெருஞ் சிறப்புடைய திருச்சிற்றம்பலக் கோவையாரின் செய்யுள் ஒன்றில் சிவபிரான் 'தொன்மைக் கோலம்' ஆகிய அர்த்தநாரீசுவரத் திருவுருவம் கொண்டு போந்து, தம்மை ஆட்கொண்டருளிய செய்தியினை மணிவாசகர் அழகுறவும் சுவை மிகவும் குறிப்பிட்டுரைக்கின்றார். சிற்றின்பச் செய்திகளில் வைத்துப் பிணைத்துப் பேரின்ப அருளனுபவ நலங்களை விளக்கும் பெற்றிமையினைத் தெற்றென உணர்த்தும் பாடல்களில், அத்திருப்பாடல் அழ

கிய தொன்ருக அமைந்து காணப்படுகின்றது. அஃது அகப்பொருளில் வைத்து அருட்பொருளை அழகுற விளக்குகின்றது.

ஓர் ஊரில் ஓர் ஒப்பற்ற தலைமகனும், தலைமகளும் தம்மிற் காதலித்து மணந்து கொண்டு, இல்லற வாழ்வு நடத்தி வருகின்றனர். "ஊடுதல் கூடுதற்கு இன்பம்" பயப்பது. ஆதலின், தலைமகள் தலைமகன்பால் ஏதோ ஒரு காரணம் பற்றி, ஊடல் கொண்டு புலந்து நிற்கின்ருள். "மனைவி உயர்வும் கிழவோன் பணிவும் நினையுங் காலைப் புலவியுள் உரிய" என்பது தொல்காப்பியம். ஆதலின் தலைமகன் அவளைப் பணிந்து இன்சொற் கூறி ஊடல் தணிக்க முயல்கின்ருன். 'உப்பு அமைந்தற்ருற் புலவி' என்னும் நுட்பம் அறியாத தலைமகள், பணிமொழி பல பகர்ந்து வணங்கவும் தலைமகன்பாற் புலவி தவிராது, மேன்மேலும் ஊடி நிற்கின்ருள். அது கண்ட தலைமகன், தானும் அவள்பால் ஊடல் கொண்டவன் போல நடித்து, அன்பு திறம்பி விடுவது போலும் நிலையில் ஒரு சிறிது சினக் குறிப்புத் தோன்றப் பின்வருமாறு பேசுகின்ருன்.

"முன்பு ஒரு சமயம், யான் பொதிய மலைச் சாரலில் உலாவிக் கொண்டிருந்தேன். அப்போது அங்கு ஓர் அமிழ்தம் போன்ற பெண் வந்தாள். பெண்களில் அமிழ்தம் என்று புகழத் தக்கவள் அவள்; அவளது கண்கள் குவளை மலர்போல அழகியனவாக இருந்தன. நாணம் தோன்ற அவள் தன் கடைக்கண் பார்வையினுல் என்னை இனிதாக நோக்கினுள். அவ்வழகிய கடைக்கண் நோக்கத்தினுல் தனது உள்ளக் கருத்தை எனக்கு அவள் குறிப்பாகப் புலப்படுத்தினுள். என் நெஞ்சம் உருகும்படி செய்தாள்; எனக்குச் சிறந்த பெருந்தேன் போலச் சுவையும் இன்பமும் விளைவித்தாள்; என்னைக் கவர்ந்து தன் வயம் ஆக்கிக் கொண்டாள்; அத்தகைய இனிய சிறந்த பெண் அமிழ்தம் ஆகிய நம் காதலி, இவள் அல்லள். இவள் அவளின் வேறுபட்ட ஒருத்தி! அவளே போன்று இவள் தோன்றுவது, ஏதோ ஒரு மாயம் போலும்! நெஞ்சே! இனி நீ வருந்தற்க".

என்றிங்ஙனம், தலைவன் தனக்குள் பேசிக் கொள்ளும் முறையில், "ஊடல் நீட வாடி யுரைத்தல்" என்னும் அகப்பொருள் இலக்கணத்தின் துறையில், பின்வரும் திருச் சிற்றம்பலக் கோவையார் செய்யுள் வருகின்றது.

"திருந்தேன் உயநின்ற சிற்றம்பலவர்
தென்னம் பொதியில்
இருந்தேன் உயவந்து, இணைமலர்க்
கண்ணின் இன்னோக்கு அருளிப்
பெருந்தேன் எனநெஞ்சு உகப்பிடித்து,
ஆண்டநம் பெண் அமிழ்தம்,
வருந்தேல் அதுவன்று; இதுவோ
வருவதொர் வஞ்சனையே"

அருட்பொருள்: இத்திருச் செய்யுள், மேலாக நோக்குதற்கு ஏதோ ஒரு தலைமகனும் தலைமகளும் பற்றிய சிற்றின்பக் காதற் செய்தியைக் கூறுவது போலத் தோன்றினும், ஊன்றிக் காண்போர்க்கு மணிவாசகரின் உயர்ந்த ஞான அனுபவப் பேரின்பச் செய்தியினையே உணர்த்துவதாக இருத்தல் காணலாம். 'தொன்மைக் கோலம்' ஆகிய அர்த்தநாரீசுவர வடிவில் வந்து தம்மைச் சிவபிரான் ஆட்கொண்டருளிய செய்தியினையே மணிவாசகர் இப்பாடலில் மிக நுட்பமாகவும் அழகாகவும் வெளிப்படுத்தி யருள்கின்ருர்.

"ஒருவாற்ருனும் திருந்தாத இயல்புடையவன் யான்! இறையருளைப் பெற எத்தகைய சிறு முயற்சியும் செய்யாது, யான் வறிதே கிடந்தேன். அத்தகைய யான், பிறவித் துன்பங்களினின்று தப்பி யுய்யும் வண்ணம் 'பெண்ணேடுகூடிய அமிழ்தம்' எனத் தக்க அம்மையப்பர் ஆகிய சிவ பெருமான், தமது தொன்மைக் கோலத்துடன், பொதியில் ஆகிய தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் தானே தன் அருளால் எழுந்தருளிப் போந்தான். என்னைத் தனது கடைக்கண்ணுல் இனிதாக நோக்கித் தீக்கை புரிந்தான். என்நெஞ்சை உருகச் செய்து, எனக்குத் தேனைப் போல இனித்தான். என்னைப் பிடித்துத் தன் வயம் ஆக்கிக்கொண்டான். ஒரு தகுதியும் முயற்சியும் இல்லாத எளியேனை இங்ஙனம் அவன் ஆட்கொண்டருளியதனை நினைக்குங்கால், அஃது ஏதோ ஒரு மாயம் ஆகிய செயல் போலவே எனக்குத் தோன்றுகின்றது".

## முடிவுரை:

என்றிங்ஙனம், சிறந்ததோர் இனிய உள்ளுறை ஞானப்பொருளும், இத்திருச் சிற்றம்பலக் கோவையார் செய்யுளின் கண், அமைந்து விளங்குகின்றது. இத்தகைய அரிய இனிய நானூறு பாடல்கள் கொண்டதாக, இணையற்று இலங்கும் புனித நூல், திருச்சிற்றம்பலக் கோவையார்! அப்புனிதப் பெரு நூலை, நாம் அனைவரும் அன்புடன் பலகாலும் ஓதி யுணர்ந்து நலம்பல பெற்று, உய்ய முயலுவோமாக!

—ஆசிரியர்

# பாண்டிய நாட்டுத் தலங்கள்

### (5) திருக்கொடுங்குன்றம்

'கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பார் இலை' என்று சுந்தர மூர்த்தி சுவாமிகளும், 'மன்புகழ்ப் பாரி காரிஎன்றிசைவாதுகூறி' என்றுஅருணகிரி நாதரும் போற்றும் பாரி வள்ளல் வாழ்ந்த இடமே, பிரான்மலை என வழங்கப்படு கின்ற திருக்கொடுங்குன்றம். இதனைச் சங்க நூல்கள் பறம்புமலை என வழங்கும். இது பாண்டி நாட்டுப் பாடல் பெற்ற பதினன்கு பதிகளில் ஒன்று. இராமநாத புரம் மாவட்டம், திருப்புத்தூர்ப் பகுதியிலி ருக்கிறது. காரைக்குடியிலிருந்து 28 கல் தொலைவிலுள்ளது. மதுரையிலிருந்து 42 கல் தூரம். மதுரையிலிருந்தும், திருப்புத் தூரிலிருந்தும் பேருந்தூர்திகள் செல்லு கின்றன.

பிரான்மலை, நான்கு பக்கமும் நெடுந் தொலைவுக்கு நன்கு தெரியும். இதன் உயரம் 2450 அடி. மலையடிவாரத்திலுள்ள கோயில் தேவாரப் பாடல் பெற்றது. மலை யின் மேல் வயிரவர் கோயிலும், சிவன் கோயிலும் இருக்கின்றன. அடிவாரத்தி லுள்ள கோயிலுக்கு வெளிப்புறம் முன் னல் ஒரு ஆழமான திருக்குளம் இருக் கிறது. கோயிலுக்குள்ளே நுழைந்ததும் மற்றெரு திருக்குளம் இருக்கிறது. இறை வன் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. அவர் திருப்பெயர்கள் கொடுங்குன்றீசர், கடோரகிரீசர், உக்கிரகிரீசர், பாரீசுவரம் உடைய நாயனர் என்பன. அம்பிகைக்குக் கிழக்கு நோக்கிய சந்நிதியுடன் தனிக் கோயில் இருக்கிறது. தேவிக்குக் குயி லமர்ந்த நாயகி, அமிர்தேசுவரி என்ற திருநாமங்கள்உண்டு. இத்தலத்தின்தேவா ரத்தில் 'தேனிற்பொலிமொழியாள்' என்று குறிக்கின்றனர் சம்பந்தப் பெருந்தகையார். அடிவாரக் கோயிலுக்குள்ளே இருக்கும் முருகன் சந்நிதி மிக்க சிறப்பு வாய்ந்தது. திருப்புகழ்ப்பாடல் பெற்றது. மேற்கு முக மாக வள்ளி, தெய்வயானையுடன் உள்ள குமாரக்கடவுளின் காட்சி, கண்கவர் வனப் புடையது. இந்தச் சந்நிதிக் கெதிரில் உள்ள யானையின் உருவம், தனிச்சிறப் புடைய அழகிய சிற்பம் ஆகத் திகழ் கின்றது.

மலைமேல் கொஞ்ச தூரம் ஏறிச்சென்று, பிராகாரத்தை வலம் வரும்போது, வயிரவர் கோயில் இருக்கிறது. தெற்கு நோக்கிய சந்நிதி. இந்தக் கோயிலிலேயே, விசா லாட்சி, விசுவநாதர் சந்நிதிகள் கிழக்கு நோக்கியிருக்கின்றன.

பிராகாரத்தை வலம்வந்து, மறுபடியும் படிக்கட்டுகள் வழியே மேலேறிச்சென்ருல், இலட்சுமி மண்டபம், ஏகாந்த மண்டபம் என்ற இரண்டைப் பார்க்கலாம். அங் கிருந்துகொண்டு நாற்புறமுமுள்ள இயற் கைக் காட்சியின் எழிலைக் கண்டு களிக் கலாம். மண்டபங்களைக் கடந்து உட் சென்ருல், மலையிற் குடைந்த கோயிலைப் பார்க்கலாம். முன்னல் உடையவர் ஆகிய இலிங்க மூர்த்தியும், பின்னல் பாறையில் செதுக்கப்பட்டிருக்கும் மங்கை நாயகரும், அம்பாளும், திருமணக் கோலத்துடன் காட்சி தந்தருளுகின்றனர்.

இத்தலத்திற்குச் சிறப்பாக இரண்டு மரங்கள் சொல்லப்படுகின்றன. ஒன்று பேரில்லா மரம்; மங்கை நாதர்கோயிலுக்கு

மேல் மலைப்பாறையில் இருக்கிறது. அது இன்னமரம் என்று தெரியவில்லை. மற்றொரு தலவிருட்சம் மங்காப்புளி. அது கீழ்க்கோயிலுக்குள் இருக்கும் திருக்குளக் கரையில் இருக்கிறது.

கீழேயுள்ள திருக்குளத் தீர்த்தங்களே யன்றி மலையின்மேல் பல நல்ல தெளிந்த நீர்ச்சுனைகள் இருக்கின்றன. தலபுராணத்தில் இங்கு 108 தீர்த்தங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றன. இவைகளில் முக்கியமானவை குஷ்ட நிவாரண தீர்த்தம், தேனுவி என்ற மதுபுஷ்கரிணி தீர்த்தம், க்ஷீரதீர்த்தம், பைரவி தீர்த்தம், சித்த தீர்த்தம், இராம தீர்த்தம், ஆதித்திய தீர்த்தம் என்பன.

மலைமேலுள்ள கோயில் குடவரைக் கோயிலாக இருத்தலின், பல்லவ மன்னர் காலத்திலேயே ஏற்பட்ட தென்றுகூற வேண்டும். மலைமேற் கோயிலில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவை, முதலாம் குலோத்துங்க சோழன், சடாவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1215—35), மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி. பி. 1251—64), பராக்கிரம பாண்டியன், வீரபாண்டியன், விசய நகர மன்னர்களான சாளுவ நரசிம்மராயர் (1189—91), தேவராயர் (1509—29) முதலியவர்களின் காலத்தவை. இம்மலை, கேரள சிங்க வள நாட்டிலுள்ள திருமலை நாட்டுத் திருக்கொடுங்குன்றமென்றும், விசய நகர ஆட்சியில் பிரான்மலைச் சீமையென்றும் குறிக்கப்படுகின்றது. திருக்கொடுங் குன்றமுடைய நாயனுர், மங்கை பாகமுடைய நாயனுர் என்று கல்வெட்டுக்களில் இறைவன் பெயர் குறிக்கப்படுகிறது. அபிடேகத்திற்குப் பால்தரப் பசுக்கள், விளக்கெரிப்பதற்குதவ ஆடுகள், குத்துவிளக்குகள், பூசைக்காகப் பொருள் நிலம் முதலியவை வழங்கப்பட்டதை, இங்குள்ள கல்வெட்டுகள் பலவும் அறிவிக்கின்றன.

இத்தலத்தின் திருக்கோயில் அருட்டிரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் அருளாட்சியில், அவர்தம் மேற்பார்வையில் இருக்கின்றது. சங்க காலத்தில் விளங்கியிருந்த பாரிவள்ளல் நினைவாக, அடிகளார் இங்குக் கொடைவிழா ஒன்றை இனிது நடத்தி வருகின்ருர்கள்.

## (6) திருப்புத்தூர்

இது பாண்டிய நாட்டின் பாடல் பெற்ற 14 சிவத்தலங்களுள் ஒன்று. இது இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளது. வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர் இதனின் வேருகும். இத்தலம் காரைக்குடி இரயில் நிலையத்திலிருந்து 15 கல் தொலைவில் உள்ளது. மதுரைக்கு வடகிழக்கே 39-வது கல்லில் இருக்கிறது. சிவகங்கையில் இருந்து 22 கல் தூரம். வடஆற்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர், சோழநாட்டிலுள்ள அரிசிற்கரைப் புத்தூர் என்பன, இதனின் வேறுபட்டவை.

திருப்புத்தூர்க் கோயில், மதுரை—காரைக்குடி நெடுஞ்சாலை ஓரமாகவே அமைந்திருக்கிறது. ஊரைச் சுற்றிலும் பழைய கோட்டையின் மதில்கள் இன்றும் காணப்படுகின்றன. கோயில், ஊரின், நடுவே கிழக்கு நோக்கி இருக்கிறது. சுவாமி சந்நிதிக்கு நேர் ஒரு கோபுர வாயிலும், அம்பாள் சந்நிதிக்கு எதிரில் ஒரு கோபுர வாயிலும் உள்ளன. இறைவன் திருநாமம் திருத்தளி நாதர்; தேவியின் திருநாமம் சிவகாமியம்மை என்பது. கோயிலின் வடக்குப் பிராகாரத்தில், வயிரவர் சந்நிதி மேற்கு நோக்கி உள்ளது. இது மிகவும் சக்தியுடைய தெய்வமாகப் போற்றப்படுகிறது. இக்கோயிலில் திருமால், திருமகள் சந்நிதி, அகத்தியேசுவரர் சந்நிதி இவைகளும் உண்டு. அம்பாள் சந்நிதி தனியே வடபால் அமைந்துள்ளது. நடராசர், சிவகாமியம்மையின் சிலை உருவங்கள் மிகவும் அழகானவை. இராமர், சீதை, இலக்குமணர் ஆகியோரின் செப்புச் சிலைகளும், இங்கு உள்ளன. உமாதேவியார், வான்மீகர், அகத்தியர், திருமகள், இந்திரன் புதல்வனுகிய சயந்தன் முதலியோர், இத்தலத்துப் பெருமானை வழிபட்டுப் பேறு பெற்றனர் என்று தலபுராணம் கூறுகிறது. திருத்தளித் தீர்த்தம் கோயிலுக்கு வடமேற்கிலும், சிவகங்கைத் தீர்த்தம் கிழக்கில் சந்நிதிக்கு எதிரிலும், உள்ளன. தலவிருட்சம் கொன்றை மரம்,

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், இருவரும் இத்தலத்தைப் பாடியுள்ளனர். 'திருப்புத்தூரில் திருத்தளியான் காண் அவன் என் சிந்தையானே' என்று அப்பர் ஒவ்வொரு பாட்டிலும் குறிப்பிடுகின்ருர். மதுரைச் சோமசுந்தரக் கடவுள், தருமி என்ற அந்தணனுக்காகப் பொற்கிழி பெற்றளித்த செய்தியை அப்பர் சுவாமிகள்,

"நன்பாட்டுப் புலவனுய்ச் சங்கம் ஏறி
நற்கனகக்கிழி தருமிக்கு அருளினேன்காண்"

என்ற தமது பாடலில் இத்தலத்திற் குறிப்பிடுகின்ருர். இதனுல் இத்திருப்பதிகம் அறிஞர்களால் பெரிதும் போற்றப்படுகிறது.

இக்கோயிலிற் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. தமிழ், கிரந்தம், வட்டெழுத்து ஆகியவற்றில் அக்கல் வெட்டுக்கள் அமைந்துள்ளன. மாறன் சடையன், பாண்டியன் ஸ்ரீவல்லப தேவன், பராக்கிரம பாண்டியன், பாண்டியன் குலசேகர தேவன், வீரபாண்டியன், மாறவர்மன் குலசேகரன், சுந்தர பாண்டியன், இராச இராசசோழன், வீரராசேந்திர சோழன், கிருஷ்ண தேவராயர், அச்சுததேவ மகாராயர் முதலிய அரசர் பலரின் காலத்தனவாக அவைகள் உள்ளன.

இத்தலத்தைச் சுற்றியுள்ள நியமம், கூத்தக்குடி, சூரக்குடி, காரையூர், நாரணமங்கலம், சதுர் வேதி மங்கலம், அருவியூர், பொன் அமராவதி முதலிய ஊர்களின் பெயர்கள், இக்கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளன. இவ்வூர்கள் இப்பெயர்களுடன் திருப்புத்தூரைச் சுற்றி விளங்கி வருகின்றன. இக் கல்வெட்டுக்களால் பலவகைத் தானங்களைப் பற்றிய செய்திகள் அறியப்படுகின்றன. கோயிலில் ஒரு சமயம் அயலவர் புகுந்து அசுத்தப்படுத்தியதைக் கும்பாபிஷேகம் செய்து தூய்மைப் படுத்திய செய்தியும், ஒரு கல்வெட்டால் அறியப்படுகின்றது. திருஞான சம்பந்தர் மடம், திருத்தொண்டத் தொகையான் மடம் என்பவை விளங்கியமைக்கும், இக் கல்வெட்டுக்கள் சான்று பகர்கின்றன.

திருப்புத்தூர்த் திருத்தளி நாதர் கோயிலின் ஆட்சி, திருவண்ணுமலை ஆதீனத்தைச் சார்ந்தது. அருட்டிரு குன்றக்குடி **அடிகளார்** அவர்களின் மேற்பார்வையில் இக்கோயில் சிறப்புற விளங்கி வருகின்றது. வைகாசி மாதத்தில் நிகழும் ஆண்டுப் பெருவிழாவின்போது, அறிஞர்களின் அரிய சொற்பொழிவுகள், கவியரங்கம், பட்டிமன்றம் முதலிய பல நிகழ்ச்சிகளுடன், பல ஆண்டுகளாகத் 'திருமுறை விழா' இங்குப் பெரிய அளவில் அடிகளாராற் சிறப்புற நடத்தப்பெற்று வருகின்றது. அறுபான் மும்மை நாயன்மார்களின் நினைவாக, அறுபத்து மூன்று தமிழறிஞர்களை உறுப்பினராகக் கொண்ட 'திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம்' என்னும் சிறந்த அமைப்பு ஒன்றையும், அடிகளார் அவர்கள் அண்மையில் தோற்றுவித்து, நன்கினிது இயக்கிச் செயற்படுத்தி வருகின்ருர்கள்.

## (7) திருப்புனவாயில்.

அறந்தாங்கி இருப்புப் பாதை நிலையத்திலிருந்து, சுமார் 30 கல். வழியில் திருப்பெருந்துறையும் மீமிசலும் இருக்கின்றன. காரைக்குடியிலிருந்தும் இதற்குப் போகலாம். திருஆடானைக்கு வடக்கே 12 கல். இத்தலத்திற்குப் பழம்பதி, விருத்தபதி எனவும் பெயர்கள் உண்டு.

"கற்குன்றும் தூறும்கடு வெளியும்கடற் கானல்வாய்ப்
புற்கென்று தோன்றிடும்எம் பெருமான் புனவாயிலே"

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியவாறு, இத்தலத்திற்குச் செல்லுங்கால், கற்குன்றும் தூறும் கடுவெளியும் இன்றும் புற்கென்று தோன்றும் உண்மை கண்டு உணரற்பாலது.

இத்தலத்தின் கோயில் பெரியது. இங்கு நான்கு வேதங்களும் இறைவனை

வழிபட்டன. நந்தியும், மூலலிங்கமும், ஆவுடையாரும் மிகப் பெரியன.

சுவாமிக்கு 3 முழமும், ஆவுடையாருக்கு 30 முழமும் உடைவேண்டும். அதனல் இப் பக்கங்களில் 'மூன்று முழமும் ஒரு சுற்று, முப்பது முழமும் ஒரு சுற்று' எனப் பழமொழி வழங்குகிறது. கோயிலின் எதிரில் லட்சுமி தீர்த்தமும், பிரம தீர்த்தமும் உள்ளன. பாண்டிய நாட்டின் 14 தலங்களும், புனவாயிலிலேயே இருப்பதாக ஐதிகம். அதற்கேற்ப 14 இலிங்கங்கள் இக்கோயிலில் உள்ளன. ஊருக்குத் தெற்கில் பாம்பாறு (சர்ப்பநதி) ஓடுகின்றது. சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது. சுவாமி பெயர் பழம்பதி நாதர். அம்மை பெயர் கருணைநாயகி. தலவிருட்சம் புன்னை மரம். இங்குள்ள சிவலிங்கம் மிகப் பெரியது. இத்தலத்துக் கு மிக அண்மையில் கடல் இருக்கின்றது.

இவ்வூர்க்கோயிலில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வூர் முத்தூர்க் கூற்றத்திற்கு உட்பட்டிருந்தது.

"பொன்னணி யானைத் தொன்முதிர் வேளிர்
குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய"

எனவரும் புறநானூற்றுப் பாடற் பகுதி, முத்தூர்க்கூற்றம் பற்றிக் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

கோயிலின் நித்திய அமுதுபடி, கறியமுது, திருமஞ்சனம், திருமேற் பூச்சு, எண்ணெய்க் காப்பு, திருவிளக்கு எண்ணெய், திருப்பரிவட்டம் முதலியவற்றிற்காகக் கோச்சடையன் திரிபுவனச் சக்கரவர்த்தி வீரபாண்டிய தேவன், நிலங்கள் வழங்கியிருந்தான். இவ்வாறே அழகிய மணவாளப் பெருமாளான காலிங்கராயன் என்பவனும், இக்கோயிலுக்குத் தானங்கள் பலசெய்துள்ளான்.

—ஆசிரியர்

## வாழ்வின் பயன்

(1) மனிதன் ஒருவன் எய்துதற்காம் வாழ்வின் இன்பம் பலவற்றுள்
புனித நமது பாரதத்திற் பொலியும் சைவ வைணவமாம்
இனிய தலங்கள் கண்டுதொழும் இன்பிற் சிறந்த தொன்றில்லை;
நனிநன் றுயர்ந்த அப்பேற்றை, நலமே அடைய முயன்றுய்வோம்!

(2) பொங்குநற் பக்தி வெள்ளப் புணரியில் திளைத்து மூழ்கி
நன்குயர் ஆழ்வார் கள்தாம் நலம்மிகப் பணிந்தி றைஞ்சி
மங்களா சாச னம்செய் வைணவத் தலங்கள் யாவும்,
இங்குநாம் கண்டு போற்றல், இனியநற் கடமை ஆகும்!

(3) தூய நால்வர் பாடல்பெற்றுத் துரிசில் சோழர் பாண்டியர்கள்
பாய சீர்த்திப் பல்லவர்கள் பலரும் பண்டு பணிசெய்யச்
சேய திசையும் புகழ்விளைத்துக் திகழும் சிறந்த சிவத்தலங்கள்
ஆயம் கொண்டு போய்ப்பணிந்தோர், அவர்தாம் வாழ்வின் பயன்
கொண்டோர்!

—ஆசிரியர்.

# திருமகள் களிநடம்

திருமலை நல்லான் திரு. இராமகிருஷ்ணையங்கார், சென்னை.

“பாண்டவர்கள் நலனைப் பற்றிக் கண்ணன் கண்ணுங் கருத்துமாயிருப்பது போலப் பாண்டுவின் மைந்தனுன தரும புத்திரன்கூட இருப்பதில்லை. பெண் ஆமை தன் குட்டியை எங்கிருப்பினும் தன் நினைப்பினாலேயே வளர்த்து விடுவது போலக் கண்ணனும் தான் எங்கிருப்பினும் பாண்டவர் வளர்ச்சியடையும்படி செய்து விடுகிறான்” என்று மகாபாரதம் கூறுகிறது. பெண் ஆமை போலத் தன்மக்களாகிய நம்முடைய நலத்திலேயே நாட்டம் கொண்டுள்ளான் இறைவன். பெற்ற மனம், மக்கள் நலத்தை நாடுவது இயல்பே யன்றோ?

அரங்க நகரப்பன்:

உலகுக்கோர் முந்தைத் தாய் தந்தையான இறைவன் அம்முறை நன்கு விளங்கத் திருவரங்கத்திலெழுந்தருளியுள்ளான். அண்டர்கோன் ஆகிய பரமபதநாதன், அணி அரங்கன் ஆனான். அண்டர்கோனாய் வானுலகிலிருக்கும் நிலையில் இந்நிலவுலக மக்களுக்கு உதவ முடிவதில்லை. வானவர்களோ உதவும் நிலையில் இல்லை. அவர்கள் தாம் இறைவனுக்கு நிகராயுள்ளனர். இதனால் வடிவுடைவானோர் தலைவன், ஒளி மங்கிக் கிடந்தான். அவன் வண்திருவரங்கன் ஆனான். ஆனபின்னரே இந்நிலவுலக மக்களுக்கு இதத்தையும் இனியதையும் நாடி நாடி மேன்மேலும் உதவுவதற்கு வாய்ப்புப் பெருகியது. பெருகவே அவனது மங்கிய ஒளி ஓங்கி வளருகிறது திருவரங்கத்திலே. இதனைத் தொண்டரடிப்பொடியாழ்வார் “திருவரங்கத்துளோங்கும் ஒளியுளார் தாமேயன்றே தந்தையும் தாயுமாவார்” (திருமாலை 37) என்று அருளியுள்ளமை காண்க.

திருவரங்கன், தன்னைவிட்டு விலகாது உயிரினங்களை அரவணைத்து ஆட்கொள்ளும்வழியை நாடியவண்ணமிருக்கின்றான். “ஆட்கொள்வான் அமரும் ஊர் அணிய ரங்கமே” என்னும் திருமொழியை நினைக. விண்ணுலகில் தன்னை ஒத்த எண்ணற்ற அடியார்களுடன் கூடிக்குலாவும் எம்பிரானுக்கு மண்ணுலகிலுள்ளோரையும் ஆளாக்கவேண்டும் என்கிற கருணையெண்ணத்தைத் தூண்டியவள் திருமகளாவாள். தீயவை புரியினும் தன் மக்களைக் கைவிடலாமோ? திருத்திப் பணிகொள்வது தந்தையின் கடமையன்றோ? “தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்” (திருக்குறள்) என்னும்படி வீட்டுலகின் கண் உள்ள அடியார் (சான்றோர்) கூட்டத்தில் முதன்மை பெறும்படி செய்ய வேண்டாமா? ‘சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே’ என்பன போன்ற இனிய நன்மொழிகளால் எம்பிரானை அன்பு நிறைந்த சிந்தை வாய்ந்த சிறந்த ஒரு தந்தையாக்கி விடுகிறாள் செந்தாமரையாள். மக்களது நலன்நாடும் அன்புடை அப்பனாய் மிளிருகின்றான் அணியரங்கன். இத்தகைய தந்தையாய் விளங்கும் உறவு முறையை உணர்ந்து, வாய் நிறைய அப்பா! என்று விளித்துத் தமக்கு உய்யும்வகை அருளுமாறு கோருகிறார் திருமங்கை மன்னன்.

“அணியார் பொழில்சூழ் அரங்க நகரப்பா!
துணியே னினிநின் னருளல்ல தெனக்கு
மணியே மணி மாணிக்கமே மதுசூதா!
பணியா யெனக்குய்யும் வகை பரஞ்சோதி”

(பெரிய திருமொழி 11. 8. 8)

இப்பாசுரத்தில் “அரங்கநகரப்பா நின்னருளல்லது துணியேன்” என்னும் போது,

பெற்ற தகப்பன் பரிவுடன் எதிர்பார்த்திருக்க, மகனுகிய நான் வேறெருவரை அண்டிப் பிழைப்பது எங்ஙனம்? என்று உரிமை பாராட்டிப் பேசுவதில் எவ்வளவு உண்மையும் திண்மையும் செறிந்துள்ளன

சிதகுரைத்தல்:

தான் சொன்னபடியே கேள்வன் ஆற்றிடைக்கிடந்து ஆட்கொண்டருளுவது கண்டு, பெருமகிழ்வு கொண்டாள் வண்டாமரையாள். இங்ஙன் இவன் ஆட்கொண்டருளுவது என்சொல்லைத் தட்ட மாட்டாத தாட்சண்யத்தாலா? அன்றி உண்மையாகவே பரிவு வாய்ந்த நெஞ்சத்தினுலா? என்பதைச் சோதித்தறிய விரும்புகிருள் மாதர்க்கரசியாம் அன்னை ஸ்ரீரங்க நாச்சியார். எந்த மக்களைத் தன்னேடு கலக்கும்படி அரங்கனுக்குப் போதித்தனளோ, அந்த மக்களை விலக்கும்படி இலக்குமி குறைகூறத் தொடங்குகிருள். அவ்வமயம் ஸ்ரீரங்கநாச்சியாருக்கும் பெரிய பெருமாளுக்கும் இவ்வாறு உரையாடல் நடைபெறுகிறது.

ஸ்ரீரங்கநாச்சியார்: நாத! அடியார் என்று இவர்களை அணைத்துக் கொள்கிறீர்களே, இவர்கள் உண்மையில் அடியார்களல்லர். குற்றங்கள் புரிகின்றனர். இவர்களைக் கைவிட்டுவிடவேண்டும். நாம் ஏற்படுத்திய வரம்பை நாமே அழிய விடக்கூடாது.

பெரிய பெருமாள்: (பெரு வியப்புடன்) அப்படியா? இவர்களோ செய்கின்றனர்? அன்பு வடிவான நீயா இவ்விதம் பேசுகிருய்? அடியாரிடம் உள்ளவை நற்றங்களே. அவற்றைக் குற்றங்களென்று நீ பிரமித்துவிட்டாய் போலும்!

ஸ்ரீரங்க: நான் பிரமிக்கவில்லை. பிரமித்தார் சொன்னதைக் கேட்டும் சொல்லவில்லை. நானே இவர்கள் புரியுங் குற்றங்களை நேரிற் கண்டு சொல்லுகின்றேன். தாங்கள் அன்பினுல் மயங்கி அவற்றை எடுத்துச் சொன்னுலும் ஏற்க மறுக்கிறீர்கள்.

பெரிய: என்னவிந்தை! குளிர்ந்த தாமரையில் வந்த மடந்தையிடமிருந்தா இந்த வெந்தழல் போன்ற சொற்களைக் கேட்கிறேன். சீற்றத்தை மாற்றும் சீரணங்கே! நேர்மாருக நீயே சீற்றமுற்றும் சித குரைக்கின்ருயே. வெந்நீரை ஆற்றுச் தண்ணீரே சுடுகின்றதே. இயற்கைக்கு மாருகத் தண்ணீர் வெந்நீராய்ச் சுடிலும் அடியார்கள் இயல்பு மாறிக் குற்றம் புரியுமவர்களாக ஒருபோதும் ஆகமாட்டார்கள். நெருப்பிலே புழு பற்ருது. உன்வாதத்தை நான் ஏற்க இயலாது.

ஸ்ரீரங்க: நீங்கள் பேசுவது அனுமானத்தால்; நான் சொல்லுவது நேரிற்கண்ட அனுபவத்தால். என் வார்த்தையை ஏற்காமல் இருக்க முடியாதே.

பெரிய: போதும் அளவு கடந்து போக வேண்டாம். குற்றம் புரிபவர் என்னடியார்களே தவிர உன்னடியார்களல்லரே. நீ கடக்க நில். இதில் நீ தலையிட வேண்டாம்.

ஸ்ரீரங்க: எவருடைய அடியாராயிருந்தாலென்ன? குற்றம் குற்றந்தானே.

பெரிய: அன்று, அடியாராயிருந்து செய்தது குற்றமாகாது. "நாம் உண்டு, சாத்திரம் உண்டு; நாம் பொறுப்போம்" என்று நினைத்துச் செய்தார்களாகில் அழகியதாகச் செய்தார்கள். அறம் இல்லை; பாவமில்லை, மேலுலகமில்லை என்று நாத்திகர்களாய்ச் செய்தார்களல்லர். அறியாமற் செய்த குற்றத்துக்கு இறைவனுள்ளானென்றன்றே அவர்கள் செய்தது? அது எங்ஙனம் குற்றமாகும்?

இவ்வாறு உரையாடும் தாய்தந்தையர் பேச்சளவிலேயே மாறுபட்டுள்ளனர்.

மக்கள் நலனை உள்ளுவதில் உள்ளம் ஒத்தவர்களே என்பதை நாம் உணர்தல் வேண்டும். இருவரது நோக்கமும் நம்மைக் கைவிடாது காப்பதிலேயே. நம்மைக் கைவிடாமைக்காகவே இருவரும் சொற்போர் நடத்துகின்றனர். கைக்கொள்ளச் செய்வதற்கு இனிய நன்மொழிகளாற் போதிப்பதே போதும். கைவிடாமற் செய்வதற்கோ சொற்போரே நடத்தியாக வேண்டியிருக்கிறது. முறையே தாய் சிதகுரைப்பதும், தந்தை "நன்று (நற்றம்) செய்தார்" என்பதும் நம்மைக் காக்கத் தாய்தந்தையர் போட்டியிடுகின்றனர் என்பதை உணர்த்தும். அத்தகைய தாய் தந்தையரை நாம் படைத்துள்ளோம்!

அரங்கநகரப்பன் அடியார்களைக் கைவிடும் படி எவர் கூறினும் கேட்பவனல்லன். அவன் இராமனான போது அடியானான விபீடணனை விட்டுவிடும்படி உற்ற நண்பன் சுக்கிரீவன் வற்புறுத்தியும், கேட்கவில்லையன்றோ? புதிய அடியானான விபீடணனை ஏற்பின் பழகிய பழைய அடியேனை விடநேரிடும் என்று சுக்கிரீவன் கருதியதை அறிந்தும் " உன்னை விடநேரிடினும் விபீடணனை விடவல்லேனல்லேன்" என்றான் இராகவன். விபீடணற்கு வேறாக நல்லானாகி விட்டான் இராமன். இன்றும் அவனுள்ள மதிளிலங்கைத் திசை நோக்கி மலர்க்கண்வைத்த வண்ணம் இருக்கிறான் திருவரங்கன். சேர்க்கைக்கு ஈடான பேச்சாயின் அவன் கேட்கமாட்டான். அடியாரிடம் அத்தகைய பேரன்பு காட்டும் திருவரங்கர்க்கு ஆளாகாது வேறு எவருக்கு ஆளாவது என்று கேட்கிறார் பெரியாழ்வார். நான் இதுகாறும் காட்டிய கருத்தனைத்தையும் தன்னுட்கொண்டு மிளிரும் அவரது அற்புதப்பாசுரம் இது:—

"தன்னடியார் திறத்தகத்துத் தாமரையா
ளாகிலும் சிதகுரைக்குமேல்
என்னடியார் அதுசெய்யார் செய்தாரேல்
நன்று செய்தாரென்பர் போலும்
மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்
கைத் திசைநோக்கி மலர்க்கண்வைத்த
என்னுடைய திருவரங்கர்க்கன்றியு
மற்றொருவர்க் காளாவரே.

(பெரியாழ்வார் திருமொழி4, 9. 2.)

தாயும் ஆனவர்:

மாதாவாலும் மாற்றமுடியவில்லை மக்களிடம் இறைவனுக்கேற்பட்டுள்ள பேரன்பினை. தான் தூண்டிய கருணை எண்ணத்தைத் தளர்த்தத் தனக்கே இயலவில்லை. தன் அன்பின் வழிநின்று சொன்ன சொல்லை மறுக்கமாட்டாதவன், இன்று தனது சிதகுரையைப் பொறுக்கமாட்டாதவனாய் "என்னடியார்" என்று வேறு பட்டுப் பேசுகிறான். அவ்வளவு பக்ஷபாதம் அடியாரிடம்! தாய் வேறு பட்டுப் பேசவே, தானே தாயுமாய் 'என்னடியார்' என்று மக்களை அணைத்துக் கொள்கிறான். தண்டாமரைக் கண்ணனாகிய தந்தையே உயிர்க் கெல்லாம் தாயாய் அளிக்கின்றான். தாய் சிதகுரைப்பவளானாள். தந்தை "நன்று செய்தார்" என்று தாய்ப்பரிவை (வாத்சல்யத்தை) க் காட்டுமவனானான். ஆகவே தாயினும் சாலப் பரிவுடைய அரங்க நகரப்பன், தானே தாயுமாகி நம்மைக் கைவிடாது காத்துப் பெருமைப் படுகிறான். இதனையே தொண்டரடிப் பொடியாழ்வார் "திருவரங்கத்துளோங்கும் ஒளியுளார் தாமே யன்றே தந்தையும் தாயுமாவார்" என்றருளிச் செய்தார்.

களிநடம்:

ஸ்ரீரங்கநாச்சியார், மக்களைக் கைக்கொள்ளும்படி கணவனுக்குத் தான் முதலிற் போதித்தது பின்னர்த் தன்னாலும் அசைக்கவொண்ணாதவாறு பலித்து வேரூன்றி நிலைத்து விட்டது கண்டு நிலைகொள்ளாது மகிழ்ச்சிப் பெருக்கினால் களிநடம்புகின்றாளாம் இத்தலத்திலே. கணவன் தன் சொற்படி நடப்பது கண்டுகளிப்புறாத காரிகையுமுண்டோ? தான் பெற்றெடுத்த குழந்தைகளைத் தன்னிலும் பரிவுடன் கணவன் எடுத்தணைத்துப் பேணுவது தாய்க்கு மட்டற்ற மகிழ்ச்சியூட்டுமன்றோ? அன்னை ஸ்ரீரங்கநாச்சியாரும் தனது அன்பாணைக்கு உட்பட்டு அடியார்களைக் கணவன் அணைத்துப் பேணுவது கண்டு களிநடம் புரிகின்றாள். புவனியும் விண்ணுலகும் ஆள்கின்ற செங்கோலரசர் திருவரங்கத்துச்செல்வனார் தன் ஆணைக்குக் கீழ்ப்படிகிறார். அரசனையும் ஆளும் பேரரசி ஸ்ரீரங்கநாச்சியார். பெண்ணரசு கேட்பாரார்? இத்தலத்தில் தன் மக்களுக்கு வாழும்வகை வாய்ப்பது கண்டு களிக்கூத்தாடுகிறாள். அது பற்றியே இத்தலத்திற்கு "ஸ்ரீரங்கம்" என்கிற திருநாமம் அமைந்தது என்றும் பெரியோர்கள் பகருவர். ஸ்ரீ-திருமகளுக்கு, ரங்கம் — ஆடு அரங்கு என்பது பொருள்.

ஸ்ரீ பராசரபட்டார், நம்மைப்போன்ற மக்களைக் காப்பதற்குப் பாங்காகத் திருவரங்கம் அமைந்திருப்பதால், திருப்பாற்கடலென்னும் பிறந்தகத்தையும் பரமபதம் என்னும் புக்ககத்தையும் விட்டு அங்கேயே களிப்புடன்எழுந்தருளியிருப்பதாக ஸ்ரீகுணரத்நகோசத்தில் (மொழி பெயர்ப்பு) "பிறந்தகத் தன்பினாலே பீடுபாற் கடற் பெறுத்தி, சிறந்தக முன்தன் செம்மல் அன்பினாற் செழிப்புறுத்தி, மறந்தகமவை மகிழ்ந்து மக்களெம் மனோரைக் காக்கச்சிறந்தகமிஃதே யென்று செனனி! சீரரங்கில் வாழ்தி" என்று அருளிச் செய்திருப்பது இங்கு அறியத்தக்கது.

பெரியாழ்வார் திருமகளான ஆண்டாள் "பெண்ணுளன் பேணுமூர் பேரும் அரங்கமே" (நாச்சியார் திருமொழி 11. 9)

பெருமாளும் பெண்ணாளர், அவர் பேணும் ஊரும் பெண்ணாளுமது. பேரும் அரங்கமென்பது என்று; பெண்ணாட்சி மாட்சியுடன் விளங்குமிடம் ஸ்ரீரங்கம் என்கிறாள். ஸ்ரீவில்லிபுத்தூர் கோதைக்குச் சொந்தம். அவளது ஆட்சி அங்கே. அதனால் ஸ்ரீவில்லிபுத்தூர் "நாச்சியார் திருமாளிகை" என்று பேர்பெற்றது. இத்தலம் பூங்கோதைக்குச் சொந்தம், பூங்கோதையின் ஆட்சி இங்கே. அதனால் இத்தலம் "ஸ்ரீரங்கம்" என்று பேர் பெற்றது. ஒரு பெண்ணரசி மற்றொரு பேரரசியின் ஆட்சி நகரைப் பெண்ணுக்கு உரியதென்று தோற்றும்படி "பேருமரங்கமே" என்று குறிப்பிட்ட அழகு காண்க. "அவ்வூரின் பேரும் பெரிய பிராட்டியாருக்கு நிருத்திய தானம்" என்பது அவ்விடத்திய பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியாநம். பங்கய மாமலர்ப்பாவைக்குத்தென்னரங்கன் அணியாகம் கூத்தாடி மகிழும் இடம். அவன் பேணும் ஊரும் கூத்தாடி மகிழுமிடம். இதனால் பெண்ணாளனும் (பெருமாளும்) அரங்கன் எனப்பட்டான். ஊரும் அரங்கமெனப்பட்டது என்பது கருத்து.

பெரியவாச்சான் பிள்ளை மற்றுமோர் இடத்தில் திருவரங்கத்தில் பெண்ணரசு நடப்பதாகக் கூறியிருப்பதும் இங்குக் கவனித்தற்குரியது. "அரங்கமே என்பதிவள் தனக்காகையே" (பெரிய திருமொழி 8, 2, 7.) என்னுமிடத்து "கண்ணனூரே அது(திருக்கண்ணபுரம்). இதுஸ்ரீரங்கமிறே. 'ந கச்சிந்நா பராத்யதி' (குற்றம் புரியாதவர் எவருமிலர்) என்னும் பெண்ணரசியிறே" என்று வியாக்கியானம் செய்திருப்பது காண்க. பெருமாளுடைய ஆட்சி திருக்கண்ணபுரத்திலேதான். ஸ்ரீரங்கத்திலன்று. இங்கு நடப்பது பெரிய பிராட்டியார் ஆட்சியே என்கிறார்.

இனி இந்த வியாக்கியானத்தின் கருத்தைச் சிறிது விளக்குவாம். கண்ணபுரம் என்பதைக் கண்ணனதுபுரம்என்று பிரிக்க. "கண்ணனூர் கண்ணபுரம்" (பெரிய திருமொழி 8.2.7) என்று திருமங்கை மன்னன் விரித்துரைத்தமை காண்க. ஸ்ரீ (திரு) யினுடைய அரங்கம். அடியாரை ஏற்றுக் கைவிடாது காக்கும் இயல்வினனான கண்ணனுக்கு உரியது கண்ணபுரம். "குற்றம் புரியாதவர் எவருமிலர்" என்பது போன்ற இனிய நன்மொழிகளாலேற்கச் செய்தும் ஏற்றபின் கைவிடாமைக் குறுப்பாகச் சிதகுரைத்து, மக்களையும் அப்பனையும் இணைத்துவைக்கும் இலக்குமி களிப்புடன் கூத்தாடற்குச் சொந்தமாயமைந்தது ஸ்ரீரங்கம். அணைத்துக் கொள்ளும் கண்ணனுக்கு (உபாயத்துக்கு)மிகப் பீடு திருக்கண்ணபுரத்திலே. இணைத்துவைக்கும் பிராட்டிக்குப் (புருஷகாரத்துக்கு) பீடு ஸ்ரீரங்கத்திலே. ஏனைய திருப்பதிகளிற்போலல்லாது பெண்ணரசு என்பது தோன்ற, அத்யயன உற்சவம் முதலியன பெரிய பிராட்டியாருக்குத் தனித்து ஸ்ரீரங்கத்தில் நடத்தப் படுவது இங்குக் குறிக்கொள்ளத்தக்கது.

மணவாளமாமுனிகளும், பெரியாழ்வார் திருமொழி வியாக்கியானத்தில் (4.10.10), "பெரியபிராட்டியாருக்குநிருத்தஸ்தானமாகையாலே ரங்கமென்கிற திருநாமத்தை உடைய தாயிருக்கிற கோயிலிலே" என்று திருமகள் களிநடம் புரியும் இடமாதலின் ஸ்ரீரங்கம் என்று வழங்கப் படுவதாக வியாக்கியானம் செய்திருப்பது நோக்கத் தக்கது.

ஆக செல்வாக்கு மிக்க தாயாரான பெரிய பிராட்டியாரைப் பற்றி,அவள் தூண்டிய கருணையெண்ணம் வாய்ந்து நமது நலத்தையே நினைத்துக் கொண்டிருக்கும் திருவரங்க நகரப்பனைச் சரணடைந்து உய்வு பெறுவோமாக!

# கயிலை மால்வரை

'அருங்கலை விநோதர்'
[திரு. திரிவிக்கிரம நாராயணன், எம்.ஏ., சென்னை.]

**வான்மீகி முனிவர் :**

"இமயமலையின் சிறப்புக்களை யான் கூறுதல் இயலாது. சிவபிரான் உறைகின்ற திருக்கயிலாயமும், மானச சரோவரம் என்னும் மாண்பு மிக்க பொய்கையும், அங்கேதான் உள்ளன. அதனைப் போன்ற மலை வேறொன்று எதுவும் இல்லை. காலைக் கதிரவனின் ஒளியால் பனித்துளிகள் காய்ந்து மறைவது போல, மனித குலத்தின் பாவங்கள் அனைத்தும், அதனைக் காணுகின்ற அளவிலேயே தீர்ந்தொழிகின்றன. அம்மலையினைக் காணவிட்டாலும், அதனைப் பற்றி நினைக்கின்றவன், காசியில் இருந்து எல்லா வழிபாடுகளையும் செய்கின்றவனைக் காட்டிலும், பெருஞ்சிறப்புள்ளவன் ஆவான்" என்று **வான்மீகி** முனிவர் பாடுகின்றார்.

உலகத்திலேயே, நினைவுக்கும் எட்டாத நெடுங் காலம் முதல், எண்ணில்லாத எத்துணையோ பல, கவிஞர்கள்-தத்துவ ஞானிகள்-துறவிகள் - அறிவியலறிஞர்கள் ஆகியவர்களை எல்லாம், தனது தெய்விகப் பேரெழிலாற் கவர்ந்து மயக்கிக் களிப்பூட்டி வருகின்ற ஒரே ஒரு பெருமலை, கயிலாய மலையே ஆகும்.

உலகில் உள்ள மலைகளுள், மிக்க உயரம் உடையவையும், அணுகமுடியாத தன்மையுடையவையும் ஆக விளங்குவனவற்றுள், கயிலாய மலையானது இந்துக்களாலும் பௌத்தர்களாலும் மிக்க புனிதமுடையதாக மதித்துப் போற்றப்பட்டு வருகின்றது. தற்காலத்தில் உள்ள நிலநூலறிஞர்கள் மட்டுமேயன்றி, மிகப் பழைய காலத்திலும், நெடுந்தொலைவிலும் இருந்த பெருங்கவிஞர்களும்கூட, கயிலாய மலையின் கவின்மிகு சிறப்பினாற் கவர்ச்சியுற்றுத் தம் நெஞ்சைப் பறிகொடுத்து மயங்கி மகிழ்ந்துள்ளனர்.

**காளிதாசர் :**

கவிஞர்களுள் பேரரசராகத் திகழ்ந்திருந்த காளிதாசரின் குமார சம்பவம் முதலிய கவிதைகளில் மிகச் சிறந்த பகுதிகள் சில, கயிலாய மலையின் கவின்மிக்க காட்சியினைப் புகழ்ந்து போற்றுவனவாக அமைந்துள்ளன. தமிழ்நாட்டில், ஏழாம் நூற்றாண்டு முதல் பதினொன்றாம் நூற்றாண்டு வரையில், ஏறத்தாழ நானூறு ஆண்டுகாலஅளவு வளர்ந்து வந்த கலைகள் – கதைகள் - கவிதைகள் ஆகியவற்றில், கயிலாய மலை பற்றிய புகழுரைகள் பல, பெரிதும் சிறப்புற எதிரொலித்து நிற்றலைக் குறித்துணரும் அறிஞர் எவரும், வியப்படையாமல் இருத்தல் இயலாது.

**அயல் நாட்டார் :**

ஏறத்தாழ முப்பது ஆண்டுகட்கு முன்னே சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த **அகஸ்ட் கன்செர்** (August Gansser) என்னும் புகழ்மிக்க நிலநூல் அறிஞர் ஒருவர், கயிலாய மலையின் பெருஞ் சிறப்பினாற் கவரப் பெற்றார்; அதனைக் கண்டு ஆராயப் பெரிதும் காதல் கொண்டார்; அதனால் தம் உயிரை இழக்கவும் துணிந்து, அவர் ஒரு திபெத்தியத்துறவி போல மாறு வேடமும் பூண்டார். பால் தீன் (Pal Din) என்னும் ஒரு திபெத்திய வழிகாட்டியின் துணையுடன், அவர் திருக்கயிலை யாத்திரை

மேற்கொண்டார். முதன் முதலாகத் தொலைவில் கயிலாய மலையின் காட்சி தோன்றிய அளவிலேயே, 'பால் தீன்' என்னும் அவ்வழிகாட்டியாளன், அத்திசை நோக்கித் தரையில் நெடுகவிழுந்து ஆராப் பேரன்பில் தொழுது பணிந்தான். அது கண்டு மெய்சிலிர்த்துக் களிதுளும்பிய சுவிஸ் நாட்டு அறிஞரும் பால்தீனை நோக்கி, "இம்மலை உனக்குப் போலவே எனக்கும் மிக்க புனிதமும் தெய்விகத் தன்மையும் உடையதாகும். நமக்குச் சிறிது முன்னே இப்பொழுது சென்ற இலாமாக்களையும், உன்னையும் போல, யானும் ஒரு கயிலாய யாத்திரிகன்தான். உன்னைப் போன்றும், அவர்களைப் போன்றும், வியக்கத்தக்க இம்மலையின் பேரழகையும் பெருந்தெய்விகத் தன்மையையும் தேடிக்கண்டறிந்து உணரும் முயற்சியிலேயே, யான் ஈடுபட்டுள்ளேன்" என்று உளம்கசிந்து உருகிக் கூறினர்.

**கயிலைக் காட்சி :**

கயிலாய மலைப் பகுதியைத் தாம் அணுகியது பற்றி, அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "நெடுந் தொலைவில் தொடுவானத்தில் ஒரு புதிய மலைத் தொடரை நாம் கூர்ந்து நோக்கிக் கண்டு அறிகின்றோம். பொன்னிறம் கலந்த பனிப் பாறை அடுக்குகள், வண்ண ஓவியம் தீட்டப் பெற்றாற்போல நீல நிறத்துடன் கலந்து தொலைவிற்காணப்படுகின்றன. அவைதாம் இமயமலைக்கு அப்பாலுள்ள மலைத்தொடர்கள் ஆகும். நெடுந்தொலைவு விரிந்து பரந்துள்ள இப்புதிய மலைச்சிகரங் களுக்கு இடையில், கூம்பு போன்ற குவிந்த வடிவில் உயர்ந்தோங்கித் திகழுகின்ற ஒரு மலையின் வியத்தகு வடிவம், நம்மனோர் கண்ணுக்குப் புலப்படுகின்றது. அதுதான் ஆசியாக் கண்டத்தில் தோன்றிய மதங்கள் அனைத்தும், புனிதமானவற்றுள் எல்லாம் மிக்க புனிதமாகக் கொண்டு போற்றி வருகின்ற திருக்கயிலாயம் ஆகும். அழகுடையன எவையோ, அவை யனைத்தும் தெய்விகமும் உடையன. ஆசிய நாடுகளின் மதங்கள் எல்லா வற்றிற்கும் உரிய அடிப்படைக் கொள்கை யானது, பாறைகளாலும் பனிக்கட்டி களாலும் அமைந்து, ஞாயிற்றின் ஒளி விளக்கு ஏற்றப்பட்டுத் திகழுகின்ற இவ் வியற்கைப் பெருங் கோயிலாக வடிவெடுத்து விளங்குகின்றது. கோயில் களுள் எல்லாம் புனிதம் மிக்க தலைசிறந்த பெருங்கோயில் ஆகிய இதனை, யான் என் கண்களாற் காணப் பெற்றேன். அதன் தனிச்சிறப்பான அமைப்பு, வியந்து புகழத்தக்க அதனுடைய வடிவத்தின் இசைவுப் பொருத்தம் முதலியன, உலகத் திலேயே ஒப்பற்ற ஒருபெரும் புனிதமான மலை கயிலாயமே என்னும் புகழுரையை, மெய்ப்பித்து உறுதிப்படுத்துகின்றன."

**ஐரோப்பிய அறிஞர் :**

முதன் முதலாகக் கயிலாய மலையைக் காணப் பயணம் மேற்கொண்ட ஐரோப் பியர், இத்தாலிய நாட்டு இயேசுமன்ற ஊழியப் பாதிரியார் ஆகிய "இப் பொலிட்டோ டெசிடேரி" (Ippolito Desideri) என்பவர் ஆவர். திபெத்தியர் களை மதமாற்றம் செய்வதற்காக, அவர் போப்பாண்டவரின் அருளாசிகளைப் பெற்றுக் கொண்டு, ரோம் நகரத்தை விட்டுப் புறப்பட்டார். அவர் லடாக்கில் இருந்து கயிலாயத்திற்கும், அங்கிருந்து லாசாவுக்கும் குதிரையின் மீது ஏறி, மூன்று மாத காலம் பயணம் செய்தார். துணிச்சலும் கிளர்ச்சியும் இடர்ப்பாடு களும் நிறைந்த அப்பயணம் பற்றி, இற்றைக்கு 250 ஆண்டுகளுக்கு முன்பு, அவர் ஒரு நூல் எழுதியுள்ளார். அதன் கண் அவர், "திபெத்தியர்கள் கயி லாயத்தை மிகவும் புனிதமானதாக மதித்துப் பெரிதும் போற்றுகின்றனர்; தமது சமயத்தைத் தோற்றுவித்த **பத்ம சம்பவர்** என்னும் சான்றோர், கயிலாய மலையின் குகை ஒன்றில் தங்கி வாழ்ந் திருந்ததாகத் திபெத்தியர்கள் நம்பு கின்றனர்" என விவரித்துள்ளார்.

அவருக்குப் பின்னர், மேலைநாட்டு ஆராய்ச்சியாளர்கள் பற்பலர், கயிலாய மலையைக் காணவும் ஆராயவும் போந் தனர். அவர்களுள், ஸ்ட்ராச்சி சகோதரர்கள் (Strachey brothers, 1846-48), மூர்கிராஃப்ட் (Moorecraft, 1872),

சாண்ட்பெர்க் (Sandberg, 1900), ஸ்வன் எடின் (Sven Hedin, 1968) என்பவர்கள், சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

**மலைகளின் வேந்தன் :**

பன்னெடுங்காலமாகக் கயிலாயமானது தனது ஈடும் எடுப்பும் அற்ற பேரெழில் நலத்தால், மனித உள்ளங்களைப் பெரிதும் கவர்ந்து கொள்ளை கொண்டுள்ளது. அளவிலும் உயரத்திலும் நந்ததேவி நங்கபர்வதம் தவளகிரி எவரெஸ்ட் கிஞ்சின் ஜங்கா முதலியன, கயிலாயத்தையும் விடப் பெரியன. அவற்றிற்குக் கயிலை ஓர் இளைய சகோதரன் போன்றதே ஆயினும், தனது ஒப்புயர்வற்ற வடிவ அமைப்பாலும், என்றும் நிலைமாறாத இனிய வெண்மையான பேரொளியினாலும், அழகும் புனிதமும் மிக்க ஒரு பெரும் தெய்விகக் காட்சியைக் கயிலாயமலை வழங்கிக் கொண்டிருக்கின்றது. எத்துணையோ பல நூற்றாண்டுகளாக வெப்ப நிலப்பகுதிகளிலும் காடுகளிலும் வாழ்ந்து வருகின்ற பலதிற மக்களும், இம்மலையின் சூழலை நாடிச்சென்று கண்டு இன்புற்றுள்ளனர். பனிபடர்ந்து நனிமிக அழகுற்றுத் திகழும் இம்மலை, ஆறுகள் பெருகி வளர்வதற்குரிய தொட்டிலும் நிலைக்களமுமாக விளங்குகின்றது. சொல்ல முடியாத அமைதியும் அழகும் கவர்ச்சியும் சாந்தமும், கயிலாய மலையின் சூழலுக்கு அருகே, வேறெங்கும் இல்லாத வகையில் காணப்படுகின்றன. என்றும் நிலைபெறுன, முடிவற்றுத் தொடர்ந்து நீண்டு செல்லுகின்ற, பனி படர்ந்த மலைத்தொடரின் காட்சியும், பனிப் பாறைகளும், அவற்றினின்று உருகிப் பெருகிவரும் அருவிகளும், ஒரு சிறு களங்கமும் அற்றுப் பளிங்கென விளங்கும் அவற்றின் எல்லையற்ற இனிய பெருந் தூய்மையும், காண்போர் உள்ளக் கடலில் மகிழ்ச்சிப் பேரலைகளை எழுப்பிக் கொந்தளித்துக் கிளர்ந்தோங்கச் செய்கின்றன. அந்நிலையில் மனித உள்ளத்தினின்று கதையும் கவிதையும் தாமே பொங்கி எழுந்து, பீறிட்டுத் துடிதுடிப்புடன் வெளிப்படுகின்றன. கயிலாயத்தின் ஓவிய அழகானது, நான் பார்த்த குர்லா முதலிய வேறு எந்தப் பெரிய இமய மலையின் சிகரங்களையும் விட, மிக மேலோங்கித் தலை சிறந்து திகழ்கின்றது. அதன் தோற்றம் கம்பீரமும் பெருமிதமும் நிறைந்து காணப் படுகின்றது. அதனை மலைகளின் வேந்தன் எனக்கூறுதல், பெரிதும் பொருந்துவதேயாகும்.

**புத்தர்பிரான் :**

திபெத்திய நாட்டில் 30 ஆண்டுகள் வாழ்ந்திருந்தவரும், சப்பானிய நாட்டுப் பௌத்த மடத்தின் தலைவரும் ஆகிய ஏகை கவாகுச்சி (Ekai kawaguchi) என்பவர் பின்வருமாறு எழுதியிருக்கின்றார். "எண்கோண வடிவில், வியக்கத்தக்க ஒழுங்கான அழகிய சரிவுகளுடன், கயிலாயமானது ஒப்பற்ற ஒரு பெரும் தெய்விக ஓவியம் போல ஒளிவீசித் திகழ்கின்றது. தன்னைச் சூழ்ந்துள்ள பிற எல்லாச் சிகரங்களையும்விட, அது கம்பீரமாகத் தலை நிமிர்ந்து தோற்றமளிக்கும் காட்சியைக் காணும் பொழுது, அங்கே நம்முடைய மாண்புமிக்க புத்தர் பெருமான் அமைதியாகத் தன்னுடைய மாணவர்களுக்கு உபதேசிப்பது போன்ற ஒரு தோற்றத்தினைக் காண்பதுபோல, என் கற்பனைக் கண்களுக்குப் புலனாயிற்று. உயர்ந்தோங்கி நிற்கும் அப்பனிமலைப் பாறைகளின் பிளவுகளின்றும், குறுகிய தடங்களினின்றும், பல்வேறு அருவிகள் பல்லாயிரம் அடிகள் உயரத்தினின்று ஆங்காங்கே உருகிப் பெருகி ஓடி வருகின்றன. அக்காட்சியைக் கண்டு இன்ப வெள்ளத்தில் திளைத்த யான், வியப்பும் விம்மிதமும் உற்றுக் கீழே அமர்ந்தேன். ஏதோ ஒரு புதிய உலகத்திற்கே கொண்டு செல்லப்பெற்றவன் போல, என்னையே நான் மறந்து பெரிதும் மயங்கி மகிழ்ந்து நின்றேன்".

**எல்லையற்ற பேரழகு :**

புகழ்பெற்ற ஆங்கிலப் பெருங் கவிஞராகிய ஈட்ஸ் (W. B Yeats) என்பவர் அணிந்துரை அளித்துள்ள, தமது பயணவிவரத் தொகுப்பு நூல் ஒன்றில், பகவான் ஸ்ரீஅம்சர் என்னும் இந்துசமயத் துறவி ஒருவர், பின்வருமாறு

எழுதியுள்ளார்: "கயிலாயமலைச் சிகரம், நன்கினிது துப்புரவு செய்யப்பெற்ற தூய வெள்ளியினால் இயன்ற ஒரு பெரும் பந்தைப்போலச் சுடர்விட்டு மிளிர்கின்றது. கயிலாயக் காட்சியைக் கண்டு, யான் என் கண்களால் பெருவிருந்து நுகர்ந்தேன். எத்தகைய சிறந்த தெய்விகக் காட்சி! எல்லையற்ற பேரழகு திரண்ட ஓர் உருவ மாக அஃது ஒளிர்கின்றது. அதனைக் கண்ட அளவில், என் உள்ளமானது சமாதிநிலையில் ஒன்றிப் படிந்துவிட்டது. என்கண்களினின்று இன்பக் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடிற்று."

## திபெத்தியர் :

புத்தர் பெருமான் நிகழ்த்திய அற்புதங் களுள் கயிலாயத்தைப் பற்றிய குறிப் புருவகம் (Allegory) ஒன்று கூறப் பெறுகின்றது. அட்டவே எனும் நாட்டை அஞ்சிநடுங்கச் செய்துவந்த அளவகன் என்னும் ஓர் அரக்கனைப் புத்தர் பெருமான் அடக்கி வெற்றி கொண்டார். புத்தர் பிரானின் சிறப்புக்களைச் செவிமடுத்த அவ் அரக்கன் மிக்க சீற்றம் கொண்டான். 'இப்போது நம்மில் எவர் பெரியவர் வலியவர் என்று ஒருகை பார்த்து விடுவோம்' என இடிபோல முழக்கம் செய்தான். தன் காலால் கயிலாயமலைச் சிகரத்தை எற்றி மிதித்தான். கொல்லனின் சுத்தியால் தாக்கப்பெற்ற காய்ச்சிய இரும்புக் கட்டிபோல, அப்போது கயிலாய மலைச் சிகரத்தினின்று நெருப்புப் பொறிகள் சிதறின என்பது அக்கதை. திபெத்தியர் கள் கயிலாய மலையைக் காங்திசே (Gong Tise) என்னும் பெயரால் வழங்கு கின்றனர்.

திபெத்திய நாட்டுப் பக்திநெறிக் கவிஞர் ஆகிய மிலராஸ்பா (Milaraspa) என்பவர், "கயிலாயத்தின் சிகரம் வெண்மையும் தூய்மையும் மிக்குப் பெரும் புகழ் பெற்று ஒளிர்வது; அம்மலையின் முடிச் சிகரத் தைப் பனிப்படலம் மறைத்து நிற்கின்றது; புத்தர் பெருமானின் அருள் உபதேசங் களைப் போல, வெள்ளிய பனிப்படலங்கள் தூய்மையும் சிறப்பும் பெற்று விளங்கு கின்றன" எனப் பலவாறு இதனைப் புகழ்ந்து போற்றிப் பாடிப் பரவுகின்றார்.

## தேவாரப் பாடல்கள் :

தமிழ் நாட்டிலுள்ள சைவப் பெரு மக்களுக்கு கி. பி. 7ஆம் நூற்றுண்டுக்கு முன்பும் அதற்குப் பின்னரும், எத்தனையோ பல நூற்றுண்டுகளாகக் கயிலாயமானது ஒப்புயர்வற்ற புனிதப் பெருமலையாக விளங்கி வருகின்றது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலிய சைவசமயப் பெருங்குரவர்கள், தமது பாடல்களில் திருக்கயிலையினைப் பெரிதும் சிறப்பித்துப் புகழ்ந்து பாடி யுள்ளனர். சம்பந்தர் 'பொடிகொள்உருவர்' 'வாளவரி கோளபுலி' எனத் தொடங்கும் இரண்டு திருப்பதிகங்கள் பாடியுள்ளார். திருநாவுக்கரசர் 'கனகமா வயிரம் உந்து' 'வேற்றாகி விண்ணாகி' 'பொறையுடைய பூமி நீர்' 'பாட்டான நல்ல தொடையாய்' எனத் தொடங்கும் நான்கு திருப்பதி கங்கள் அருளிச் செய்துள்ளார். சுந்தரர், 'தான் எனை முன் படைத்தான்' என்னும் ஒரு பதிகம் பாடியிருக்கின்றார். கயிலாயத்தின் சிறப்பினைத் தேவாரத் திருப்பதிகங்கள் பெரிதும் புகழ்ந்தோதிப் போற்றுகின்றன. பதினொன்றும் திரு முறையில் நக்கீரதேவர் 'கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி' என்னும் ஒரு நூலை இயற்றியிருக்கின்றார். சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞான வுலாப் பாடியுள்ளார்.

## சேக்கிழார் :

பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரியபுராணத்தில், ஆசிரியர் சேக்கிழார் அதன் தொடக்கத்திலேயே 'திருமலைச் சிறப்பு' என்னும் ஒரு பகுதியை அமைத்துக் கயிலாய மலையினைத் தமது கவிதைகளால் திறம் தெரிந்து சிறந்தெடுத்துப் போற்றி மகிழ்கின்றார். "சிவபெருமான் என்றுமே மன்னி வீற்றிருந்து வாழ்வது கயிலாயமலை. பனிபடர்ந்த பெருமலையாகிய இமய மலையின் சூழலில் கயிலாயம் அமைந்து விளங்குகின்றது. சிவபிரானின் பொன்னிற மான மேனியில் வெண்திருநீறு பூசப் பெற்று இருப்பது போல, வெண்ணிறமான பனிபடர்ந்த கயிலாயமலையானது சூரியனின் கதிர்கள் வீசுதலால், பேரொளி யும் எழிலும் பரப்பிப் பிறங்குகின்றது. அங்கே எழுந்தருளி வீற்றிருக்கின்ற சிவ பிரானை அடைந்து மூன்றுலகும் நான்

மறைகளும் போற்றுகின்றன. தேவர்களும் முனிவர்களும் திரளாகப் போந்து வழி படுகின்றனர். அவர்களின் புண்ணிய மெல்லாம் ஒருங்கே திரண்டுள்ளதுபோலக் கயிலாயம் விளங்குகின்றது.''

**கயிலைமலை வருணனை :**

"உலகம் என்னும் ஓர் அழகிய சிறந்த பசுங்கொடியின் மேல், தழைத்து நிற்கின்ற தளிர்களைப்போல, எண்ணில்லாத பற் பல தலங்கள் இலங்குகின்றன; அவற்றிற் கெல்லாம் மிகமேலாய்த் தலைசிறந்த திருக் கயிலாயமானது, அத்தளிர்களினிடையே பூத்த பேரழகு மிக்க சிறந்ததொரு நறு மலர் போலத் திகழ்கின்றது.''

"அக்கயிலாயத்தின்கண் நான்மறை களின் நாதமும், விஞ்சையர்களின் நல்ல கானமும், கந்தருவர்களின் வீணை ஓசையும், தேவதுந்துபியின் ஆர்ப்பும், வேறுபல முழக்கங்களும் இடையறாது ஒலிக்கின்றன. சிவபிரான் வீற்றிருப்பதனாலும், அளந் தறிய முடியாத பெருமையினாலும், உண்மையொளி பரவி நிற்கும் தூய்மை யினாலும், ஓங்கி உயர்ந்து நிற்கும் பெரு மிதத்தினாலும், வெண்கொற்றக்குடையை உடைய அனபாயனின் திருமனம் போலத் திகழ்கின்றது திருக்கயிலாயம்'' எனப் பலவாறு புகழ்ந்து பாடுகின்றார் சேக்கிழார்.

பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரி யான்என்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை.

அண்ணல் வீற்றிருக் கப்பெற்ற தாதலின்
நண்ணும் மூன்றுல குந்நான் மறைகளும்
எண்ணில் மாதவஞ் செய்யவந் தெய்திய
புண்ணிய யந்திரண் டுள்ளதுபோல்வது.

நிலவும் எண்ணில் தலங்களும் நீடொளி
இலகு தண்தளிர் ஆக எழுந்ததோர்
உலகம் என்னும் ஒளிமணி வல்லிமேல்
மலரும் வெண்மலர் போல்வதம் மால்வரை.

மேன்மை நான்மறை நாதமும் விஞ்சையர்
கான வீணையின் ஓசையும் காரெதிர்
தான மாக்கள் முழக்கமும் தாவில்சீர்
வான துந்துபி ஆர்ப்பும் மருங்கெலாம்

கையில் மான்மழுவர் கங்கைசூழ் சடையில்
கதிரிளம் பிறைநறுங் கண்ணி
ஐயர்வீற் றிருக்குந் தன்மையி னாலும்
அளப்பரும் பெருமையி னாலும்
மெய்யொளி தழைக்கும் தூய்மையி னாலும்
வென்றிவெண் குடைஅந பாயன்
செய்யகோல் அபயன் திருமனத் தோங்கும்
திருக்கயி லாயநீள் சிலம்பு.

**திருநாவுக்கரசர் :**

திருநாவுக்கரசர் தளர்வுறு மூப்புடைய வராய் இருந்தும், திருக்கயிலாய தரிசனம் செய்வதில், தளர்விலா ஊக்கமும் ஆர்வமும் கொண்டிருந்தார். கால்களால் நடக்க இயலாமற் போனபோது, மார்பு தேய ஊர்ந்து சென்றும், கயிலைமலையைக் காணப் பெரிதும் விழைந்தார். ''ஆளும் நாயகன் கயிலையில் இருக்கைகண்டு அல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்'' என்னும் உறுதி மிக்கவராய்த் திகழ்ந்தார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'இந்திரன் மால் பிரமன் எழிலார் மிகு தேவரெல்லாம்' வந்து எதிர்கொள்ள, வெள்ளையானையின்மீது ஏறிக் கயிலாயம் சென்றார் என்பது வரலாறு. இவ்வரலாறு களால் மிகப் பழங்காலத்திலேயே, சமய உலகில் கயிலாயமலை பெற்றிருந்த தனிப் பெரும் சிறப்பிடம் புலனாகின்றது.

திருநாவுக்கரசரின் வரலாற்றில், அவர் கயிலாயத்திற்குச் சென்ற வழிவிவரங் களையும், அவற்றின் இயல்புகளையும், சேக் கிழார் நுண்ணிதின் உணர்ந்து பாடியிருக் கும் திறன், நம்மை வியப்பில் ஆழ்த்து கின்றது. தமிழ் தெலுங்கு கன்னட நாடு களைக் கடந்து, இடையிடையே வரும் பல காடுகளையும் நதிகளையும் மலைகளையும் தாண்டி, மாளவநாட்டிற்குச் சென்று, இலாட பூமியை அடைந்து, மத்திய பைதிரத்தைச் சார்ந்து, கங்கையை நண்ணி, வாரணாசியைப் பணிந்து, மனிதர்கள் செல்ல முடியாத வழி களிலெல்லாம், இடர்ப்பாடுகள் எதனையும் பொருட்படுத்தாமற் கயிலைமலையைக்காண் பதற்காகப் பெரிதும் முனைந்து முயன்று சென்றார் நாவுக்கரசர், எனச் சேக்கிழார் பலபாடல்களில் விவரித்துப்பாடியிருப்பது,



தமிழ்நாடு முதல்வர்

**மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள்**

தோற்றம் *15—9—1909* மறைவு *3—2—1969*

12 JUL 1973
MADRAS

அன்பளிப்பு :
மாலைமணி அலுவலகம்,
சென்னை-2

கயிலாய யாத்திரையின் அரிய நுண்ணிய வழி விவரங்களை யெல்லாம் மிகப் பழங் காலத்திலேயே நம் முன்னோர்கள் அறிந்திருந்தனர் என்பதனைத் தெள்ளிதின் விளக்குகின்றது.

**மன்னரும் கயிலைமலையும் :**

இங்ஙனம், தென்னகத்துச் சமயத் தலைவர்களின் உள்ளங்களைக் கவர்ந்து, கயிலாயமானது சிறந்ததோர் தெய்விக உணர்ச்சிப் பெருக்கை விளைவித்த கால நிலையில், பண்பாடு மிக்க சிறந்த அரசர்கள் பலரும், அதன்கண் அளவிலா ஆர்வம் கொண்டனர். இராசசிம்மன் என்னும் இரண்டாம் நரசிம்மவர்மன் (கி.பி. 785-810), இராட்டிரகூட மன்னனாகிய முதலாம் கிருட்டினன் (கி. பி. 758-772) என்னும் மன்னர்கள் இருவரும், கயிலாயமலையின் புனித நினைவாகச் சிறந்த பெரிய கோயில்களைத் தென்னகத்தில் அமைக்க, எழுச்சிமிக்கதொரு தெய்விக உணர்ச்சியினால் உந்தப்பெற்றனர். அதன் பயனாக இராசசிம்மன் காஞ்சிபுத்தில் கலை நலம் செறியக் கயிலாசநாதர் கோயிலை எடுப்பித்தான். கயிலாசநாதர் கோயில் திருக்கயிலையின் அளவையும் அமைப்பையும் கொண்டே கட்டப்பட்டாதகும் என்று அதனைச் சென்று தரிசித்து வந்த, அருட்டிரு விபுலானந்த அடிகள் போன்ற சான்றோர் கூறுகின்றனர். காஞ்சிபுரம் கயிலாநாதர் கோயிலின் அமைப்பைக் கண்டு பெரிதும் வியந்து, இராட்டிரகூட மன்னாகிய முதலாம் கிருட்டினன் (கி. பி. 758—772), மேற்குத் தொடர்ச்சி மலைகளின் சூழலில் ஈழபுரம் (Ellora) என்னும் இடத்தில், உலகமே கண்டு வியந்து களிப்புறும் வகையில், கயிலாயமலைக் காட்சியினைக் கலை ஓவியப் பெருங் காவியமாகக் கவின்மிகப் படைத்து அளித்துள்ளான். அதன் அழகையும் சிறப்பையும் ‘காணாத கண் என்ன கண்ணே’ என்றுதான், நாம் கழிவிரக்கம் கொள்ளல் வேண்டும். அவற்றை ஒவ்வொருவரும் நேரிற் சென்று தாமே கண்டுணர்தல் வேண்டுமே யன்றி, அவற்றினை ஒருவர் பிறருக்கு எழுதிக் காட்டவும் இயலுமோ? எல்லோராவில் உள்ள கயிலை மலைக் காட்சியை எழில்கனிந்து நிரம்பும் சிற்பமாக வடித்துப் படைத்து உருவாக்கிய பெருஞ் சிற்பியே, அதன் எல்லையற்ற பேரழகினைக் கண்டு வியந்து நின்றான் என, அங்குள்ள ஒரு கல்வெட்டு நன்கு விவரிக்கின்றது.

**முடிவுரை :**

சிற்பக் கலைஞன் ஒருவன் செய்தமைத்ததே, அத்துணைச் சிறப்புடையதாயின், இயற்கையாகிய அற்புதப்பெருங் கலைஞன் ஆக்கி யளித்த கயிலைமால்வரையின் கவின்மிகு காட்சி, எத்தகைய தொன்றாக இலங்கும்! வாழிய கயிலை மால்வரை!

—தமிழாக்கம், **ஆசிரியர்**

## அண்ணாவிற்கு அஞ்சலி

‘மக்களின் தொண்டே மகேசுவரன் தொண்’டென்னும்
தக்கதொரு மெய்ம்மையினைத் தான்தெளிந்தே—மிக்கன்பால்
நண்ணாரும் போற்றமிக நற்பணிகள் பேரறிஞர்
அண்ணா அவர்கள்செய் தார். (1)

மாற்றானின் தோட்டத்து மல்லிகையே என்றாலும்
ஏற்ற நறுமணம்கொண் டேஇருக்கும்—தேற்றங்காண்’
என்றுரைத்தே பேரறிஞர் அண்ணா எவரையும்தான்
நன்கு மதித்தொழுகி னார். (2)

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிந்திடும்சொல்’ வித்தகராய்—மாட்சிமிகப்
பேரறிஞர் அண்ணா பெரும்புகழ்தான் பெற்றொளிர்ந்து
சீர்பெருக வாழ்ந்தார் சிறந்து. (3)

எழுத்தாலும் பேச்சாலும் இனியசெய லாலும்
வழுத்தகுநற் பண்பாலும் வாழ்நாள்—முழுத்துமே,
மக்கள் நலங்குறித்து மாண்பார் அறிஞரண்ணா
தக்கபெருந் தொண்டுசெய்தார் தாம். (4)

ஆங்கிலத்தில் நற்புலமை ஆர்ந்துபெரு நாவலராய்
ஈங்கு மிகத்திகழ்ந்தார் என்றாலும்,—ஓங்குபெருஞ்
செந்தமிழ்க்கே ஆர்வம் சிறந்து திகழ்ந்திருந்தார்
நந்தம் அறிஞர்அண்ணா நன்கு. (5)

—**ஆசிரியர்.**

# நீங்காத நினைவு

( தவத்திரு குன்றக்குடி அடிகளார் )

ஒளி விளக்கு அணைந்து விட்டது. இருள் சூழ்ந்து கவிந்துகொண்டிருக்கிறது. தந்தை பெரியார் கூறியது போல "நடவாதது, நடக்கக்கூடாதது நடந்துவிட்டது" "கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்" என இளங்கோ அடிகள் கூறினர். அதே வரிகள் இன்று அண்ணாவை இழந்து அல்லலுறும் தமிழினத்திற்கும் பொருந்தும். அறிஞர் அண்ணா அறிவில் சிறந்தவர்; பிறவிச் சிந்தனையாளர்; அதேபொழுதில் கனிந்த அன்பினர்; தெள்ளுதமிழ் நெஞ்சினர்; தேன்தமிழ் நாவினர்; பீடுசேர் நடையினர்; பெருமைசேர் பண்பினர்; எழுத்துலகின் ஏந்தல்; நானிலம் போற்றும் நாவலர்; கண்ணியத்தின் வடிவினர்; தமிழ்த் தாயின் தவப்புதல்வர்; தமிழினத்தின் தானைத் தலைவர்; தன்மானமும் — இனமானமும் காத்த நயத்தக்க நாகரிகப் பண்பினர்; அன்னைத் தமிழை அரியணை ஏற்றிய தாளாளர்; தமிழ்நாடு பெற்றுத்தந்த தன்னேரிலாத தலைவர்; தாயிற் சிறந்த கனிவுடையவர்; பெரியோரை வியந்தும் — சிறியோரை இகழ்ந்தும் அறியா இயல்பினர். காஞ்சியில் தோன்றிக் காசினி முழுதும் புகழ் விளங்க நின்ற செம்மல். நமது அண்ணா நமது உயிர் மூச்சு. இதயத்தின் எழில் நாதம் — நெஞ்சகத்தின் ஒளிவிளக்கு — அணைந்து விட்டது. தமிழன்னையின் கண்களில் கண்ணீர் ஆறுகப் பெருகுகிறது. அன்னை பாரதம் அவலம் பிடித்து நிற்கிறது. அண்ணாவின் அரவணைப்பில் வளர்ந்த ஆயிரம் ஆயிரம் தம்பிகள் அழுது அரற்றுகின்றனர். நிலவை இழந்த விண்ணகமெனத் தமிழகம் விளங்குகிறது. அவர்தம் நினைவு நீங்கா நினைவு.

நேற்று வரையில் நம்முடன் வாழ்ந்த தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார். அவருடைய பிரிவு பொதுவாக இந்திய நாட்டுக்கும், சிறப்பாகத் தமிழ் நாட்டிற்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அறிஞர் அண்ணாதுரை தலைவராகப் பிறந்தவரல்லர். வாழ்நாள் முழுதும் அடி அடியாகப் போராடியே முன்னுக்கு வந்தவர். அவர் ஆள்வினையின் சின்னமாகத் திகழ்ந்தார். தெள்ளுதமிழ் நெஞ்சத்தினராக — இனிய சொற்கள் பயிலும் ஏந்தலாக வாழ்நாள் முழுதும் வாழ்ந்தார். கொடிய புயற்காற்று வீசும் அரசியலில் வாழ்ந்தும், கோபம் என்பது இன்னதென்றறியாமலே வாழ்ந்தார். அவருக்கும் மனவருத்தங்கள் வருவதுண்டு. பேசாமல் மௌனம் சாதிப்பதே அவரின் அருமைத் தம்பிகளுக்கு அவர் இட்ட தண்டனை.

தமிழ் இலக்கியத் துறையில் இவர் ஒரு காலகட்டமாகத் திகழ்ந்தார். வாழ்க்கைக்கு ஒவ்வாப் பழமைகளைச் சித்தரித்து விலக்குவதிலும், புதுமைச் சிந்தனைகளைச் சேர்ப்பதிலும், இவர் படைத்த கதைகள் கவனத்திற்குரியன. பார்வதி பி.ஏ., ஓர் அரிய படைப்பு. எழுத்தாளராக மட்டுமின்றி இனிய நாவலராகவும் திகழ்ந்தார். "கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் திறன்" இந்த நூற்றுண்டில் இவருடைய தனியுரிமையாக இருந்தது. அடுக்கிய மொழித் தொடர், உரிய பொருள் விளக்கும் உவமை நலன், பொருந்தாக் கருத்துக்களை மனம் நோகா வண்ணம் நயம்படக்கேலி செய்யும் நகைச்சுவை, இவர்தம் பேச்சின் சிறப்பியல்புகள். உரத்த குரலில்

உறுதியான கொள்கை விளக்கம். ஆயினும் குழைந்த நெஞ்சு. பரிவு, பாசம் ஆகிய சொற்கள் இவர்தம் அரசியல் உலகத்தின் நாடி நரம்புகள். கட்டுப் பாட்டில் வளர்ந்த கட்சிகள் உண்டு. முன்னே மூலதனத்தால் வளர்ந்த கட்சிகள் உண்டு. ஆனால், இவர்தம் சுற்றுவட்டமோ 'அண்ணா' 'தம்பி' என்ற பாசத்திலேயே வளர்ந்தது. இவரே திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்த தந்தை. இவரே அதை வளர்த்தவர். பதினைந்து ஆண்டு களுக்குள்ளாக ஒரு கட்சி தோன்றி மக்களிடை வளர்ந்து நாடாளும் கட்சியாக இடம் பெற்றது அரசியல் வரலாற்றிலேயே ஒரு சாதனை. வாழ்நாள் முழுவதும் சாதாரண மக்களுக்காகவே பரிந்து பேசினார்; எழுதினார்; போராடினார். தீண்டாமை ஒழிப்பும், சாதிகளற்ற ஓரின அமைப்பும், இவர்தம் இலட்சியமாக இருந்தன. இந்த சமுதாயத்தைக் காண இலக்கிய உலகத்தில் நெறிகண்ட இவரே, அரசியல் சட்ட ரீதியாகவும் வழிவகை கண்டார். அரசியல் என்பது கரடு முரடானது என்கிற எண்ணம் மேலோங்கி வருகிற காலகட்டத்தில், அகனமர்ந்தமைந்த இவர் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். மக்கள் ஆட்சி மரபு சிறக்க, எதிர்க்கட்சித் தலைவர்களையும் வீடு தேடிச் சென்று ஆதரவு கேட்ட பண்பு, போற்றுதற்குரிய பண்பு. சட்டசபையில் யாருடைய மனமும் நோகாமல் விடைகள் அளித்த பண்பு பாராட்டத்தக்கது. காலத்தின் வளர்ச்சியில் அவசியம் என்று கருதிய பொழுது, தற்பெருமை கருதி வீண் பிடிவாதமில்லாமல் நாட்டின் நலங்கருதிப் பழைய கோட்பாடுகளை விட்டுப் புதிய கோட்பாடுகளை ஏற்று முன்னணியில் நின்றார் மூதறிஞர் அண்ணாதுரை.

சீன ஆக்கிரமிப்பின் பொழுதும், பாகிஸ்தான் படையெடுப்பின் பொழுதும் அவர் காட்டிய பரந்த மனப்பான்மை பாரதத்தின் தவப் புதல்வனாக்கியது. இந்தியாவிலேயே நடுவண் அரசிற்கும் மாநில அரசிற்கும் ஆளுங்கட்சிகள் மாறுபட்ட நிலையில், ஒரு இணைந்த ஒருமைப்பாட்டை உருவாக்கிய சாதனை பாராட்டத்தக்கது. இந்தியப் பேரரசின் ஒப்புதலுடன் இந்திய நாட்டின் பாராளுமன்றத்தின் முழு நிறைவு இசைவுடன் 'தமிழ் நாடு' என்ற பெயர், நமது மாநிலத்திற்குச் சூட்டப்பெற்றது. பெயர் மாற்றத்தைவிட அதன் பின்னணியில் இருக்கின்ற அரசியல் இணைந்த உணர்வுச் சூழல் போற்றுதற் குரியது.

நிதானம் தவறாத ஒரு அரசியல் மேதை அவர். கண்ணியம், கடமை, கட்டுப்பாடு என்று ஆயுட்கால மெல்லாம் எடுத்துச் சொன்னார்; வாழ்ந்தும் காட்டினார். அவர் யாரொருவரையும் கண்ணியப்படுத்தத் தவறியதில்லை. மதிப்பும் மரியாதையும் வழங்கத் தவறியதில்லை. யாரொருவருக்கும் நெஞ் சினாலும் தீங்கு செய்யாமல் வாழ்ந்தார். கடமையுணர்வினாலேயே மருத்துவர்கள் ஆணையை மீறிக் கடமைகளை மேற்கொண்டு காலனுக்கு ஆளானார். வளமனை படைத்துத் தந்தும், 'வறியோர் வாழும் நாட்டில் வளமனை ஏன்?' என்று கட்டுப் பாட்டுடன் வாழ மறுத்து வருத்தத்திற்குரியவரானார். நம்மையும் வருத்தத்திற்கு ஆளாக்கினார். என்ன செய்வது? அவர் ஆவி முழுவதும் கடமை வழிப்பட்டது. அவர் ஆணையிடுகிற கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டினைக் காப்பாற்றி அவ்வழியில் நாம் நடந்து ஒழுகி, அவர் விட்டுச் சென்றிருக்கிற பணிகளைத் தொடர்ந்து செய்வதே, அவருக்குரிய நன்றிக்கடன். அவர் கடவுள் நம்பிக்கை யுடையவராக இருந்தாரா இல்லையா என்பதல்ல கேள்வி. ஆனால் ஒரு சிறந்த அருளாளராக வாழ்ந்தார் என்பதை நாம் எண்ணிப் பார்த்து, அவர்தம் பணியினைத் தொடர்ந்து செய்வோமாக. அவர்தம் ஆள்காட்டி விரல் சுட்டிக் காட்டிய வழியே நமது வழி. அண்ணா அவர்களின் ஆன்மா சாந்தியடைவதாக.

அண்ணாவின் புகழொளியின் துணைகொண்டு அவர்விட்டுச் சென்ற கடமைகளை மேற்கொண்டு, அவர் வழியில் நடைபயில உறுதி கொள்வோமாக.

—தவத்திரு குன்றக்குடி அடிகளார்,

# நீளுலகில் வாழ்வாய் நிலைத்து

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

நாடு புகழ்ந்தேத்தும் நல்லபே ரறிஞன்
பாரினுள் ளோருக்குப் பைந்தமிழ்ச் சாரதி
மலராடு சோலையில் வண்டாடு புதுமலர்
வழக்காடு மன்றத்தில் தேர்ந்த வழக்காடி
இன்னபுகழ் சேர்த்த எமதருமை அண்ணா
தாங்குபுகழ்த் தமிழினத்தின் தானைத் தலைவன்
ஓங்கியசீர்ப் பாரதத்திற் குற்ற தனித்தலைவன்
தரணிபுகழ் அன்னை தமிழின் தவப்புதல்வன்
வள்ளுவத்தை உலகுணர வைத்தவொரு வான்விளக்கு
தெள்ளு தமிழ்நெஞ்சில் தேன்சேர்க்கும் பேச்சழகன்
சிரித்த முகத்தழகன் செந்தமிழின் நாவழகன்
இரக்கத் தனிஊற்றும் ஏற்றத்தின் சாயல்
மலரினை மொய்த்து மயங்கிச் சுழன்றாடும்
வண்டாய்த் தமிழுலகம் வாயாரப் போற்றிமகிழ்ந்து
அண்ணா அண்ணாவென் றழைத்திடவே வாழ்ந்துயர்ந்த
எமதருமை அண்ணா எங்குற் றனைநீயே?
நின்னை வளர்த்த தமிழ்தேடிச் சென்றனையோ ?
வேறுலகம்சென்றனையோ? விண்ணகந்தான்போயினையோ?
பாரினில் பஞ்சை பராரிகள் வாழ்ந்திடவே
படியரிசி தானளக்க நிதிதேடிச் சென்றனையோ ?
செகத்தில் சிறந்த சேலத்து நல்லிரும்பை
விலைகூறச் சென்றனையோ வேறுசெயப் போயினையோ ?
நின்னைப் பிரிந்த தமிழ்என்ன ஆவதுவோ?
பாசத்தி லேசிறந்த தம்பியர்கள் என்படுவர் ?
வித்தட்டி யுண்போர் வியனுலகில் யாருமிலர் ?
கூற்றுவனும்அன்னதுபோல் ஆற்றிவிட்டான்இக்கொடுமை!
நின்னுடலம் மாய்ந்தாலும் நின்றன் புகழ்நிற்கும் ;
'உளதாகும் சாக்காடும்' என்றானே வள்ளுவனும் ;
தெள்ளுதமிழ் வள்ளுவர்க்குச் சிலையெடுத்து நீயுயர்ந்தாய்,
நீளுலகில் வாழ்வாய் நிலைத்து !

# பாலைக்குப்பின் சோலை

(திரு. என். எஸ். தாத்தாச்சாரியார், தஞ்சாவூர்.)

**முன்னுரை :**

நம் தமிழ் நாட்டில் திருமால் பற்று பண்டுதொட்டே நிலவி வருவதாகும். பரிபாடல் முதலிய சங்க நூல்களும், சிலப்பதிகாரம் போன்ற பேரிலக்கியங்களும், இதற்குச் சான்றுவன. அக்காலத்தை அன்பு நெறியாகிய பக்தி நெறியின் அருணோதய காலம் என்றால், பிந்திய ஆழ்வார்களின் காலத்தை அந்நெறியின் காலைக் கதிரவனின் காலம் எனலாம். கலங்காப் பெருநகரான திருநாட்டை விட்டு, இவ்விருள் தருமா ஞாலத்தில் தம்இச்சையில் தோன்றி உலக நலனிலே ஆழங்கால் பட்டமை கொண்டும், உண்டியே உடையே உகந்தோடும் இம்மண்டலத்தாரோடு கூடியும்கூடாமலும் இருந்து, திருமாலின் திருக்குணங்களிலும் திவ்வியமங்கள விக்கிரகத்திலும் ஆழங்கால்பட்டு "உன்னைக்காண்பதோர்ஆசையினால்"என ஆர்ப்பரித்து நின்றமையாலும் ஆழ்வார்களானார்கள். ஆண்டாளும் "ஆழிமழைக் கண்ணா" என்ற பாவைப் பாட்டில் தனித் தமிழ் எழுத்தாலாகிய ஆழ்வார்களையே குறிக்கும் "ழ" கர உயிர் மெய்யைப் பத்துத் தடவை கையாண்டு ஆழ்வார்களை நினைவில் இட்டாள் போலும். இவர்களைத் திவ்விய சூரிகள், மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்கள், ஆதி பக்தர்கள், தெய்வக் கவிஞர், பதியே பரவித் தொழும் தொண்டர்கள், மாலுகந்த ஆசிரியர்கள், பாலேய் தமிழர், பெருந் தமிழர், பட்டர், இசைகாரர் என்றெல்லாம் சிறப்புடன் கூறுவார்கள்.

**ஆழ்வாராவார் :** இத்துணைச் சிறப்பியல்புள்ள ஆழ்வார்கள் பதின்மரில் நம்மாழ்வாரே தலைசிறந்தவரானார். இவருடைய இறையன்பின் சுவை ஏனையோர்களால் எட்டிப் பார்க்கவும் கூசுவதாயிற்று. இவரை இறைவனையும் விஞ்சிநின்ற புகழுடையார் என்றால் மிகையாகாது. இவரே பெரிய திருவந்தாதியில்,

> புவியும் இருவிசும்பும்
> நின்னகத்த; நீஎன்
> செவியின் வழிபுகுந்து
> என்னுள்ளாய்;—அவிவின்றி
> யான்பெரியன் நீபெரியை
> என்பதனை யார்அறிவார்
> ஊன்பருகு
> நேமியாய் உள்கு"

என்றார். "தந்தது உன்றன்னைக் கொண்ட தென்றன்னைச் சங்கரா யார்கொலோ சதுரர்" என்ற மணிவாசகத்தை, ஈண்டு ஒரு வகையிற் கருத்தில் கொள்ளலாம். மற்றும் சிலர் ஒருபடி மேலே சென்று ஆழ்வாரின் அவதாரத்தை "சர்வேசுவரன் வந்து அவதரித்தாற் போலேயாயிற்று ஆழ்வார் வந்தவதரித்தது" என்றும் புகழ்ந்தார்கள். இவரே ஆழ்வார் பரம்பரையின் உயிர்நாடி. 'தமிழ்ப் பாடல்கள் இவர் திருவாக்கிற் புகுந்து வந்ததும், தேமதுரத் தமிழாய்க் குழலினிமையையும் பெற்றன. திருவள்ளுவர் கூறிய "செம்பொருள் கண்டார் வாய்ச் சொல்" என்ற திருக்குறளீற்றடி, ஆழ்வாரின் திருவாய் மொழிக்கு இலக்கணம்போல் அமைந்தது. வடநாட்டு வடமொழிப் புலவர் ஒருவர், இவர் திருவாக்கிட்ட "ஆராவமுதே" என்ற சொல்லைச் சொல்லக்கேட்டு "இப்படிஒருதமிழா! கேட்கச்செவியிலேயேஇனிக்கின்றதே!கருத்தில் கொண்டு நினைக்கும் பொழுதெல்லாம் தித்திக்கின்றதே! என்று ஆர்ப்பரித்து, திருவாய் மொழியின் இன்பச் சுவையிலே திளைத்துஸ்ரீவைணவத்துறவியானார். "என் சொல்லி நிற்பன்" (7.9.2) என்ற திருவாய் மொழிப் பாசுரத்திற் காணும் "என் முன் சொல்லும்" என்ற சொற்றொடருக்கு,

நம்பி திருவழுதி நாடு தாசர் என்பவர் "திருவாய்மொழி பயின்றுன் ஒரு விண்ணப்பஞ் செய்வான் சென்றுல் சர்வேசுவரனும் கிராமத்திலுள்ளாரும் புறப்பட்டு எதிர்கொண்டு தங்கள் இருப்பிடத்தை ஒழித்து அவனுக்குக் கொடுத்து ஆதரியா நிற்பார்கள்" என்று நயத்தில் நயமுரைத் தாராம்! ஸ்ரீவைணவர்திரளிலே நடமாடும் "நம் பெருமாள், நம்பாணநாதன், நஞ்சீயர், நம்பிள்ளை" என்ற சொற்களிலே வரும் முதற் சொல்லான "நம்" என்ற சிறப்புச் சொல் "நம்மாழ்வார்" என்ற திருப் பெயரின்பால் பொருந்தி நின்ற பின்பே சிறப்புற்றது.

**திருவிருத்தம்:** திருமால் நெறிப் பெருஞ் சான்ருேர் ஆகிய நம்மாழ்வார் அருளிச் செய்த நான்கு வேதங்களின் சாரமாகிய திருவிருத்தம், திருவாசிரியம், நான்முகன் திருவந்தாதி, திருவாய் மொழி என்ற நான்கு பிரபந்தங்களுள் இருக்கு வேத சாரமாய் முதலில் அருளப்பட்டது, "திருவிருத்தம்" என்னும் கிரந்தரத்தினம் ஆகும். இந்நூல் கட்டளைக் கலித்துறையில் அந்தாதித் தொடரில் பாடப்பட்ட நூறு பாசுரங்கள் கொண்டதாகும். "விருத்தம்" என்ற வடமொழிச் சொல்லிற்குச் "செய்தி" எனப் பொருள். "இங் நின்ற நீர்மை இனியாம் உருமை"— "அடியேன் செய்யும் விண்ணப்பமே"— "மெய்ந்நின்று கேட்டருளாய்" என்று இறைவன் திருமுன் ஆழ்வார் இந்நூலில் விண்ணப்பித்துக் கொள்வதால், இந் நூலுக்குத் திருவிருத்தம் எனப் பெயர் ஏற்பட்டதென்பர். திருமகளின் நிகழ்ச்சியைக் கூறுவதால் "திருவிருத்தம்" எனப் பெயர் ஏற்பட்டது என்பாரும் உளர். இதன் முதற் பாசுரம் கடைப் பாசுரம் தவிர்த்த மற்றைய 98 பாடல்களும், அகப் பொருள் துறையிலே அமைந்தவை. "தன்னைக் கற்பார்க்குப் பிறவித்துயர் அறுத்து அந்தமில் பேரின்பமளிக்கவல்லது" என்ற கருத்தில் இது ஒரு வழி காட்டியாக நிற்கும் நூல் என மாபெரும் அறிஞர்கள், இதன் பெருமையைப் புகழ்ந்து போற்றித் திருவாக்கிடுவர். ஆழ்வாரும் கடைசியில் "மாறன் விண்ணப் பஞ் செய்த சொல்லார் தொடையல் இந் நூறும் வல்லார் அழுந்தார் பிறப்பாம் பொல்லா அருவினை மாய வன்சேற்றள் ளற் பொய்ந்நிலத்தே" என்று அருளிச் செய்தார். இந்நூல் முழுவதும் தேன் வெள்ளம் போல் இன்சுவை சுரக்கவல்லதாயினும், எடுத்துக்காட்டாக இருபத்தைந்தாவது பாசுரத்தின் இன்சுவையைச் சிறிது காண்போம்.

"நானிலம் வாய்க்கொண்டு நன்னீர்
அறமென்று கோதுகொண்ட
வேனிலஞ் செல்வன் சுவைத்துமிழ்
பாலை, கடந்தபொன்னே!
கால்நிலம் தோய்ந்து விண்ணேர் தொழும்
கண்ணன் வெஃகா உது; அம்பூந்
தேன்இளஞ் சோலை அப்பாலது;
எப்பாலைக்கும் சேமத்ததே."

இப்பாசுரம் காஞ்சிபுரத்தின் நடுவே எழுந்தருளியுள்ள திருவெஃகா என்ற திவ்விய தேசத்தைப் பற்றியது; அங்குக் கோயில் கொண்டிருக்கும் வேகாசேது, சொன்ன வண்ணம் செய்த பெருமாள், என்ற திருநாமம் பூண்ட பெருமாளைப் பற்றிய தாகும். வேகவதி என்ற ஆற்றையே **வேகா** என்பர். ஆகவே "வேகா அணை" என்ற சொல் "**வெஃகணை**" எனத் திரிந்து கடைசியில் உலக வழக்கில் "வெஃகா" எனவாயிற்றென்று பெரியோர் பணிப்பர். தமிழ் மொழியின் பொருளிலக்கணத்தில் "உடன் போக்கு" என்ற பகுதியில் "நகர் காட்டல்" என்ற துறையின்கண் அமைந்த பாசுரமாகும். "வழி எதிர்வருவோர் எழில் நகர் அணிமை இது என உரைத்தல்" என இத்துறைக்கு இலக்கணம் கூறினுர்கள். மாணிக்கவாசகரும் தலைமகன் கூற்ருகத் தமது சிற்றம்பலக் கோவையாரில், இத்துறையில் ஓர் அருமையான பாடல் இட்டுள்ளார்.

"மின்போற் கொடிநெடு வானக்
கடலுள் திரைவிரிப்பப்
பொன்போற் புரிசை வடவரை
காட்டப் பொலிபுலியூர்
மன்போற் பிறையணி மாளிகை
சூலத்த வாய், மடவாய்!
நின்போல் நடைஅன்னம் துன்னி,
முன்தோன்றும்நல் நீள்நகரே"

என்பது. இப்பாடலின் இன்சுவையே வடிவெடுத்தாற் போன்ற கருத்து நலத்தை அவ்விடத்திய உரையில் படித்தறியலாம்.

**நயம்:** இப்பாடலுக்கு ஸ்ரீஅழகிய மண வாள சீயர் "புணர்ந்து உடன்போன தலை மகன் நடந்து இளைத்த தலைவியைக் குறித்து இடந்தலைப் பெய்தமை சொன்ன பாசுரம்" என உரையிட்டார்.

தலைவன் தலைவியைக்கூட அழைத்து வருகின்றான். இடையிலேபாலைநிலம்தலைப் பட்டது. ஊரும் அருகே தென்பட்டது. அப்பொழுது தலைமகன் தலைமகளைப் பார்த்துப் பாலையில் கண்ட துன்பமும், இளைப்பும் ஏற்படாமலிருக்கக் கூறுகிறான்: "பொன் போன்ற பெண்ணே! கதிரவன் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்னும் நால்வகை நிலங்களையும், நீர்ப்பசையற மென்று சக்கையெனக் கழித்த பாலை நிலத்தைத் தாண்டி வந்தாய். விண்ணோர் களும் தங்கள் கால்கள் நிலத்தில் அழுந்த நின்று வணங்கித் தொழும் கண்ணபி ரானது திவ்விய தேசமான திருவெஃகா உது. அண்மையிலும் சேய்மையிலும் இன்றிச் சற்றுத் தூரத்தில் இளமையும் செவ்விமாருத சோலையும் உள்ளது. அதோ காண்" என்றான். "நன்னீர் அற மென்று" என்ற சொற்றொடர் பாலை நிலத் தின் வறட்சியை வடித்துக் காட்டுகிறது. "கோது கொண்ட" என்பதால், தமிழ் நாட்டில் இல்லாத நிலமாகும் பாலை. மேலும் காதலர்களின் பரிதல் துன்பத்திற் குரிய நிலமாகும் எனபதனால், கோதுள்ள நிலம் என்று வெறுத்தார். "வேனிலஞ் செல்வன்" என்பதனால், பாலை நிலத்துக் குரியவன் சூரியன் என்பதனையும் குறித் தார். அவனே வெறுக்கும் படியான நில மானதால் "உமிழ்பாலை" என்றார். "பாலை கடந்த பொன்னே" என்ற சொல், இக் கொடிய பாலையில் தலைவனுடன் வரும் பெண், பாலையின் கொடுமையையும் பாராட்டாதிருந்தாள் என்பதும் குறிக்கப் படுகிறது. பொன்னைத் தீயிலிட்டுப் பார்ப் பது போல் அத்தலைமகளின் அன்பைப் பாலைத் தீயிலிட்டுத் தலைவன் கண்டான் போலும். கால் தரையில் பாவாத தேவர் களும் கால் பொருந்தி நிற்கும்படியான விண்ணுலகச் சிறப்புடையது "திருவெஃ கா" எனக் காட்டித் தந்தாள். இந்நூலில் சிறப்பித்துப் பேசப்பட்டதால் திருவரங்கம் —திருமலை—காஞ்சிபுரம் என்ற மூன்று பதிகளையும் ஸ்ரீவைணவர்கள், கோயில்—திருமலை — பெருமாள் கோயில் எனப் பெருமையுடன் அழைப்பார்கள். அவை களிற் பெருமாள் கோயில் என்ற காஞ்சி புரத்தின் சிறப்பு, தேவர்கள் நடமாடியதால் மேலும் ஏற்றம் பெற்றது. இக்கருத்தை அடுத்துவரும் "எப்பாலைக்கும் சேமத் ததே" என்ற சொற்றொடரால் அருமை யாகக் குறித்தார். "எப்பாலை" என்ற சொல் "எங்நிலைமைக்கும்" என்ற கருத் தினையும் ஆக்கித் தருகின்றது என்று உரையிடும் திவ்வியார்த்த தீபிகை. பாலை என்ற சொல் இலக்கணையாய் துன்பத் தைக் குறிக்கும். பான்மை என்னும் பண்புப் பெயர் மைவிகுதிபோய் ஐ விகுதி பெற்று பாலை என்ற சொல்லாயிற்று எனக் கூறுவார். இவ்விடத்து நம் பிள்ளை ஈடு கூறுகிறது—"எல்லாம் பாலை நிலங்களால் வந்தவெம்மையும் போக்கி நமக்கு ரக்ஷகமுமான தேசங்காண் வெஃ கா. இந்தப் பாலை நிலமே யன்றிக்கே இன்னமுஞ்சில பாலைவனமும் கடக்கலாங் காண இங்கில முண்டாக" என.

"அப்பாலது" என்ற சொல் திருவெஃகா என்ற க்ஷேத்திரத்தை அடுத்த "திருத் தண்கா" என்ற பெரும் புண்ணிய ஸ்தலத்தையும் குறிக்கும் என்பர். இந்த க்ஷேத்திரத்தில் கோயில் கொண்ட "விளக் கொளி எம்பெருமான்" திருமுன் முன்பு அவதரித்த ஸ்ரீவேதாந்த தேசிகன் என்ற ஆசாரிய வள்ளலின் வரும் தோற்றம் கூட்டிக் காட்டப்பட்டதென்றும் நயம் கூறுவார்கள். கிழங்கு எடுக்காத இந்த மண்ணில் வாழ்க்கையைப் பாலை எனக் குறிப்பிட்டு, அப்பாலையை ஆசாரியன் திருவாக்கால் கடந்தமை கண்டு, அவரு டன் உடனடைந்து பின் அர்ச்சாவதாரப் பெருமான் கோயில் கொண்ட திவ்விய தேசத்தையே சேம நல்வீடாகப் பற்ற வேண்டும் என்ற உட்பொருளும் அறியக் கிடக்கிறது. வழி நடத்துகிறவன் என்ற கருத்தில் அமைந்த சொல்லன்றோ ஆசாரி யர்களை விளிக்கும் "தேசிகன்" என்ற சொல் என்பதையும் கவனித்தல்வேண்டும்.

# "புண்ணியம் ஆம்"

(சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள், தேவகோட்டை.)

மானிடயாக்கையைப் பெற்றுத் தக்கவை இவை என்றும், தகாதவை இவை என்றும் ஆராய்ந்தறிகின்ற நல்வாய்ப்பினைப் பெற்றிருக்கின்ற நாம், செய்யத் தக்கவை புண்ணியங்கள், விலக்கத் தக்கவை பாவங்கள். நாம் செய்து வருகின்ற செயல்களெல்லாம் மனத்தாற் செய்வன, மொழியாற் செய்வன, உடலாற் செய்வன என்னும் மூன்று பிரிவுகளுக்குள் அடங்கி விடுவனவாகும்.

புண்ணியத்தை இதம் என்றும், பாவத்தை அகிதம் என்றும் சொல்லுவர். "இதம் அகிதங்களைக் காயத்தாற் செய்கின்றபோது மட்டும் தான் அவை பயன் தருவனவாகின்றன" என்று கூறும் சமய வாதிகள் பலர் உள்ளனர். காயத்தினுற் செய்கின்ற எந்தச் செயலும் கருத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தே நிகழ்கின்றன, என்பது ஊன்றிநோக்குவார்க்கு நன்கு விளங்கும். மேலும் மனத்தில் கருவுற்று வளருங் காரியங்கள் எல்லாம் அவ்வவற்றின் வளர்ச்சி நிறைவுக்குரிய கால எல்லை வரும்போது காயத்தில் புறத் தொழில்களாக வெளிப்படுவது கண்கூடு அல்லவா?

இதம் அகிதங்களாகிய நன்மை தீமைகளைக் காயத்தாற் செய்வது, வெளிப்படையாகக் காணப் பெறுவதாகும். அதுபோல ஒருவனுக்கு நன்மையையோ தீமையையோ செய்து வருமாறு ஒருவனைப் பிறிதொருவன் ஏவ, அவ்வேவல் பெற்றோன் அதன்படி நன்மை தீமைகளைச் செய்து முடிப்பதும் உலகத்திற் காணப் பெறுகின்றது. இங்ஙனமாகச் சூக்கும நிலையில் மனத்தாலும் தூலசூக்கும நிலையில் சொல்லாலும், தூல நிலையில் காயத்தாலும் நன்மை தீமைகளை உயிர்கள் இடைவிடாமற் செய்து கொண்டிருக்கின்றன என்பது நினைவுகூரத் தக்கதாகும்.

அநாதி கேவலத்தில் ஆணவ மலத்தினுல் செயலற்ற அறிவிச்சை செயல்களையுடையனவாய், உயிர்கள் சடம் போற் கிடந்தன. பெருங்கருணையையுடைய சிவபெருமான் உயிர்களின் உய்தியில் திருவுளம் வைத்துத் தநு கரண புவன போகங்களை உதவித் திரோதான சத்தியின் துணை கொண்டு, அவைகள் தொழிற்படுமாறு அருள் செய்தார். இங்ஙனம் சகல நிலையில் உயிர்கள் செய்யும் எல்லாச் செயல்களுக்கும் ஆண்டவன் சாட்சி மாத்திரையில் செய்விக்கிறவராயிருந்து செயல்களுக்குரிய பயன்களை உயிர்களே அநுபவிக்கும்படியும் செலுத்திக் கொண்டிருக்கிருர். ஆணவப் பேரிருளில் மூழ்கி அறிவு மயங்கிக் கிடந்த உயிர்களுக்குக் கருவி கரணங்களின் தொடர்பால் சிறிதளவு அறிவிச்சை செயல்கள் விளக்கமடைய அதனுல் அவ்வுயிர்கள் தன் முனைப்பு மிகுந்தனவாய்த் தீயனவும் நல்லனவுமாகிய செயல்களைச் செய்ய முற்பட்டன.

இங்ஙனம் படைப்புக் காலந்தொட்டு உயிர்கள் செய்து வருகின்ற நல்வினை தீவினைகள் அவைகளின் பின்னைப் பிறப்புகளுக்கும், மேல்வினை ஈட்டத்திற்கும் காரணமாய் நிலைபெற்றிருக்கின்றன. எண்ணற்ற பல பிறவிகளில் ஈட்டிச் சேர்த்த நல்வினை தீவினைகளின் தொகுதிகளைச் "சஞ்சிதம்" என்று சொல்லுவர். அத்தொகுதியிலிருந்து அநுபவத்திற்குப் பக்குவம் அடைந்த சிறு பகுதி "பிராரத்தம்" என்னும் பெயருடன் எடுக்கும் பிறவி ஒவ்வொன்றிலும் பயன் ஊட்டி நிற்கும். பிறவி தோறும் பிராரத்தப் பயனை அநுபவிக்கும் பொழுது செய்யும் மேல் வினைகள் "ஆகா

மியம்'' என்னும் பெயருடன் சஞ்சிதத்திற் சென்று சேர்ந்து அதனைக் குறையவிடாது பெருக்கிக் கொண்டிருக்கும். இம்மூவகை வினைகளும் ஒழிந்தாலன்றி உயிர்கள் முத்திப் பேற்றைப் பெறுவது கிட்டாது.

இந்த நல்வினை தீவினைகள் உயிர்கள் பொருட்டாகச் செய்வன எனவும், கடவுள் பொருட்டாகச் செய்வன எனவும், இரு திறப்படுவனவாகும். இவற்றுள் உயிர்கள் பொருட்டாக நிகழும் வினைகளை விடக் கடவுள் பொருட்டாக நிகழும் வினைகள் தமக்குரிய பயன்களை மிகுதிப்படுத்தி வழங் கும் இயல்புடையன என்பது உணர வேண்டியதாகும். இதனாலேயே பசு புண் ணியத்தைவிடப் பதி புண்ணியம் மேலான தென்றும், உயிர்களுக்குச் செய்யும் அப சாரத்தைவிட இறைவனுக்குச் செய்யும் அபசாரம் பெருந் துன்பம் தருவதென்றும், நமது நூல்கள் முழங்கிக் கொண்டிருக் கின்றன.

உயிர்களுக்கு உதவுவதாகிய நல்வினை "பசு புண்ணியம்" எனப் பெற்று மறுமை யில் சுவர்க்கம் முதலிய நல்லுலகங்களில் ஒரு கால எல்லை வரையிற் சுகபோகங்களை நுகர்ந்து இன்புறும்படி வைத்து, மீண்டும் இந்த நிலவுலகத்திற்கு வந்து பிறக்குமாறு செய்யும். அதுபோல உயிர்களைத் துன் புறுத்துவதாகிய தீவினை "பசு பாவம்" எனப் பெற்று, மறுமையில் நரகம் முதலிய தீயவுலகங்களில் ஒரு கால எல்லை வரை யில் துன்பாநுபவங்களைப் பெறும்படி வைத்து, மீண்டும் இந்த நிலவுலகத்திற்கு வந்து பிறக்குமாறு செய்யும்.

இறைவன் செலுத்தவே எதிலும் செலுத்துகிறோமென்ற நல்லுணர்வுடன், எல்லாச் செயல்களுக்கும் இறைவனே வினை முதலாகிய கர்த்தா எனவும், நாம் கருவிகளாயிருந்து செயல்கள் நிகழுவ தற்குத் துணையாயிருக்கிறோம் எனவும் தெளிந்து, அதன் வழியே நிகழுகின்ற செயல்கள் "பதி புண்ணியம்" எனப் பெற்று முத்திக்குச் சாதனமாகி உதவும். உயிர்களைப் பற்றி நிகழுகின்ற புண்ணிய பாவங்கள் செயல்களின் நன்மை தீமை களுக்கேற்ப அமைவனவாகும். இறை வனைப் பற்றி நிகழும் புண்ணிய பாவங் களோ, அங்ஙனம் செயல்களின் நன்மை தீமைகளுக்கேற்பவே அமைவன என்று சொல்லிவிட முடியாது எனவாகும். சிவ பெருமானை முன்னிறுத்திச் செய்யும் மறச் செயல் புண்ணியமாகி இன்பத்தை வழங் குவதும், அவரை மறந்து செய்யும் அறச் செயல் பாவமாகித் துன்பத்தை வழங்கு வதும் உண்மை. இதனைத் தந்தையைத் தடிந்து சண்டேசர் பெற்ற பெரும் பேற்றி னாலும், வேள்வியைச் செய்து தக்கனும் அவனுக்குத் துணை செய்த தேவர்களும் அடைந்த துன்பத்தினாலும், நன்றாக அறிந்து கொள்ளலாம்.

புண்ணியமாகிய நல்வினை செய்யத் தக்கது, பாவமாகிய தீவினை விலக்கத் தக்கது என்பதை, எல்லாச் சமய வாதி களும் ஏற்றுக் கொள்ளுவர். ஆனால், அவர்கள் கூறும் புண்ணிய பாவங்கள், அவர்களால் நல்லன தீயன என்று முடிவு செய்யப்படுகின்ற செயல்களுக்கேற்ப, உயிர்களின் பொருட்டாக நிகழும் அள விலேயே நின்றுவிடும். சித்தாந்த சைவர் களாகிய நம்மவர் கூறும் புண்ணிய பாவங்களோ, மற்றைச் சமய வாதிகள் கூறும் புண்ணிய பாவங்களை அடிப்படை யாகக் கொண்டு அவற்றிற்கு மேம்பட்டு, இறைவனை முன் நிறுத்திக் கொள்வன வாகவும், எல்லாச் செயல்களுக்கும் மூலமா யிருக்கிற கருத்தைப் பற்றி நிற்பனவாக வும் சிறந்திருக்கின்றன.

பசு புண்ணிய முதிர்ச்சியினால் உண் டாகின்ற பதி புண்ணியம் ஒன்றே பிறப் பிறப்புக்களை ஒழித்து முத்திப் பேற்றை வழங்க வல்லதென்பதையும், அப்பதி புண்ணியமாவது சிவ பெருமானது திரு வடியைத் தொழுதலே என்பதையும், ஆசிரியர் திருமூலதேவ நாயனார் தமது திருமந்திரமாலைக் கடவுள் வாழ்த்து இரு பத்தாறுவது திருப்பாடலில் அருளிச் செய் திருக்கின்றார். அந்தத் திருப்பாட்டு

"தொடர்ந்துநின் றானைத் தொழுமின் தொழுதால்
படர்ந்துநின் றான்பரி பாரகம் முற்றும்
கடந்துநின் றான்கம லம்மலர் மேலே
உடந்திருந் தானடிப் புண்ணியம் ஆமே"

என்பதாகும்.

சிவபெருமானது சொரூப இலக்கணம், தடத்த இலக்கணம் ஆகிய இரண்டனுள் சொரூப இலக்கணம் என்பது எந்தப் பொருள்களிலும் தோய்வுறாது எல்லா வற்றையும் கடந்து அவர் தனித்திருக்கும் நிலையைக் குறிப்பதாகும். தடத்த இலக் கணமென்பது சித்தும் சடமுமாகிய எல் லாப் பொருள்களிலும் உள்ளும்புறமுமாக

நிறைந்து அவைகளாகவும் அவர் இருக்கும் இயல்பைக் குறிக்கும். தடத்த நிலையை அவர் மேற்கொண்டு எல்லாப் பொருள்களையும் எல்லா வேளைகளிலும் தொடர்ந்திருப்பதனாலேயே உயிர்கள் உய்திபெறுதற்குரிய வாய்ப்பு உண்டாகின்றது. இதனையே "தொடர்ந்து நின்றனைத் தொழுமின்" என்று ஆசிரியர் அருளிச் செய்தார்.

நிலம் எல்லாவற்றையும் தாங்கும் இயல்புடையது. இந்த நில உலகத்தையும் ஏனைப் புவனங்கள் அனைத்தையும் உள்ளும் புறமுமாக வியாபித்திருப்பதும் அவற்றிற்கு அப்பாற்பட்டிருப்பதுமாகிய இறைவனது பேராற்றல் "படர்ந்து நின்றான் பரிபாரகம் முற்றும் கடந்து நின்றான்" என்று உணர்த்தப் பெற்றது.

உயிர்கள் முத்திப் பேற்றைப் பெறுவதற்குரிய ஒரே சாதனமாயிருப்பது மெய்யுணர்வாகிய சிவஞானம். அது சிவயோக சாதனத்தினாலேயே அடையப் பெறுவது. சிவயோகியர் சிவபெருமானை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகிய ஆறு ஆதாரங்களிலும் அவைகளுக்கு மேற்பட்ட துவாதசாந்தத் தானத்திலும் உள் நோக்கிக் கண்டு தரிசித்து இன்புறுவர். இங்ஙனம் இறைவன் எழுந்தருளியிருந்து நல்லருள் புரியும் எல்லா ஆதாரங்களும் தாமரை மலரின் வடிவத்தையே உடையனவாதலின், "கமலம் மலர் மேலே உடந்திருந்தான்" என்று கூறித் தமது சிவயோக அநுபவத்திற் கண்ட உண்மையை ஆசிரியர் புலப்படுத்தினார்.

தடத்த நிலையில், எல்லாப் பொருள்களுடனும் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் தொடர்ந்து நின்று அவற்றுடன் கலந்தும், சொரூப நிலையில் அவையனைத்தையும் கடந்தும், பக்குவ ஆன்மாக்களுக்குச் சிவஞானத்தை வழங்கும் பொருட்டு ஆதார கமலங்களை இருப்பிடமாகக் கொண்டும் விளங்குகின்ற, சிவபெருமானது திருவடிகளைத் தொழுதலே சிவ புண்ணியமாகும் என்பதே, இந்தத் திருப்பாடலின் முடிந்த முடிபாக, ஆசிரியர் நமக்கு உணர்த்தியருளுவதாகும்.

நலமே தழைக.



தூத்துக்குடி ஸ்ரீ சங்கர ராமேசுவரர்—ஸ்ரீ வைகுண்டபதி கோயில்களின் சார்பில், நடைபெற்ற பரவை மாநாட்டில், மதுரைத் துணை ஆணையர் திரு. பி. ஆர். பக்கிரிசங்கர், M.A.,B.L., அவர்கள் தலைமை தாங்கி, உரை நிகழ்த்துதல் (19—1—69).